2017 ஜூன் 22
வியாழன்
விலை: 20/-

QD / 154 / NEWS / 2017

ஹிஜ்ரி 1438 ரமழான் பிறை 27 ■ பக்கங்கள் 12 ■ மணி 03 ■ ஒளி 095

NAVAMANI DAILY
நவமணி දිනපතා
# நவமணி
தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான கு...




ஹிஜ்ரி 1438 ரமழான் பிறை 27 - ஜுன் 22, வியாழன்

## ரமழான்
தொழுகை நேரங்கள்

| ஸ.முடிவு | சுபஹ் | சூ.உதயம் | ளுஹர் | அஸர் | மஃரிப் | இஷா |
|---|---|---|---|---|---|---|
| 04:18 | 04:33 | 05:57 | 12:14 | 03:41 | 06:29 | 07:45 |

மேற்குறித்த நேரத்திலிருந்து கிழக்கு மாகாணத்திற்கு 6 நிமிடங்கள் குறைத்து கணிப்பிடவும்



இஸ்லாமிய பார்வையில் போதைவஸ்தும் பாவனையும் 04»

உடல் தகுதி இல்லையேல்; அணியில் இடமில்லை 12»

# தடைகள் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை

பத்திரிகை ஆசிரியர் கலாநிதி காலித்



கட்டார் மீது அரபுநாடுகள் விதித்துள்ள தடை தோல்வியடைந்துள்ள அதேவேளை, கட்டார் மீது எந்த பாதகமான தாக்கத்தையும் அது ஏற்படுத்தவில்லை என அந்நாட்டின் பிரதான ஊடகவியலாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். இரண்டு வாரங்களுக்கு முன்னர்

11 »»»»

## அசாத் சாலியின் வெறுப்புப் பேச்சு; விசாரணைக்கு நீதிமன்றம் உத்தரவு



சிங்கள- முஸ்லிம் இன நல்லுறவை சீர்குலைக்கும் வகையில் தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி பேசிய உரைகளின் தொகுப்பை பெற்று விசாரணைகளை முன்னெடுக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பௌத்த மதம்,பௌத்த தேரர்கள் மற்றும் சிங்களவர்களை அச்சுறுத்தும் வகையில்

11 »»»»

## பிக்கு, பொதுமகன் கைதுகளுக்கு பாரிய வித்தியாசங்கள்

பொலிஸ் பேச்சாளர்



■ அ.அருன் பிரசாந்த்

தேரர் ஒருவரை கைது செய்வதற்கும் சாதாரண பொதுமகன் ஒருவரை கைது செய்வதற்குமிடையில் பாரிய வித்தியாசங்கள் காணப்படுகின்றமையாலேயே ஞானசார தேரரை எம்மால்

11 »»»»

## அஸ்கிரிய மாநாயக்கர் அறிக்கைக்கு அரசாங்கம் விரைவில் பதில்

இணைப் பேச்சாளர் ராஜித

■ அ.அருன் பிரசாந்த்



பொதுபல சேனாவின் பொதுச் செயலாளரான கலகொட அத்தே ஞானசார தேரருக்கு சார்பாக அஸ்கிரிய பீடத்தால் வெளியிடப்பட்ட அறிக்கைக்கான தகுந்த

11 »»»»

# கடுமையான எச்சரிக்கையில் ஞானசாரதேரருக்கு பிணை



## மூன்று தடவைகள் கைதாகி விடுவிப்பு

■ அ.அருன் பிரசாந்த்

ஒரு மாத காலத்துக்கும் மேலாக பொலிஸாரின் தேடுதல் வேட்டைக்கும் இடையில் தலைமறைவாகியிருந்த பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் நேற்று காலை கொழும்பு, நீதிவான் நீதிமன்றில் ஆஜரான போது,

11 »»»»

## ஐ.நா.வின் சிபாரிசுகள் ஒருங்கிணைக்க அமைச்சர் குழு

■ அ.அருன் பிரசாந்த்

ஐக்கிய நாடுகள் சபையினால் இலங்கைக்கு முன்மொழியப்பட்டுள்ள சிபாரிசுகளை ஒருங்கிணைப்பதற்காக அமைச்சர்கள் குழுவொன்றை நியமிக்க அரசு தீர்மானித்துள்ளது.

இதுதொடர்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது பிரதமரினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கும் அங்கீகாரம் கிடைத்துள்ளது. அந்தவகையில்,

11 »»»»

ரோஹிங்கிய யுவதி மீது பலாத்காரம்;

## பொலிஸ் உத்தியோகஸ்தர் எந்நேரமும் கைதாகலாம்

■ பீ.எப்.எம் ரிஷாட்

சட்டவிரோதமான முறையில் இலங்கைக்குள் நுழைந்து கைது செய்யப்பட்டு மிரிஹானை குடிவரவு குடியகல்வு தடுப்பு முகாமில் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 21 வயது மியன்மார் யுவதி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த பொலிஸ் உத்தியோகத்தர் எந்த நேரமும் கைது செய்யப்படலாம் என பொலிஸ் வட்டாரம் தகவல் வெளியிட்டுள்ளது.குறித்த யுவதியிடமிருந்து வாக்குமூலம் பெறுவதற்கு

11 »»»»

## உண்மையான நோக்கம் இருந்தால் ஞானசாரவை கைது செய்திருக்கலாம்

சிரேஷ்ட சட்டத்தரணி சிராஸ் நூர்தீன்

4 பொலிஸ் குழுக்கள் அமைக்கப்பட்டு பொலிஸாரினால் தேடப்பட்டுவந்து ஞானசாராவை கைது செய்யும் உண்மையான நோக்கம் பொலிஸாருக்கு இருந்திருந்தால் அவரை எப்போதே கைது செய்திருக்கலாம் என மூத்த சட்டத்தரணி சிராஸ் நூர்தீன் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது,

நேற்று -21- ஞானசாரர் நீதிமன்றத்திற்கு வந்தார். நீதிமன்றத்திலிருந்து சென்றார்.

அப்போது பொலிஸாரும் நின்றனர்.

ஞானசாரரை கைது செய்யும் நோக்கம் பொலிஸாருக்கு உண்மையாகவே இருந்திருக்குமாயின் அவரை இன்று கைது செய்திருக்கலாம். எனினும் இன்றைய


11 »»»»

## முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு அமெரிக்க தூதுவர் கண்டனம்

■ எம்.வை.அமீர்

இலங்கையில் காலம்காலமாக சிங்கள மற்றும் தமிழ் சமூகங்களுடனும் அரசாங்கத்துடனும் இணைந்துவாழும் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளை கண்டிப்பதாகவும் சமூகங்களின் ஒற்றுமைக்காக புனித நோன்பு தினத்தில் பிரார்த்திப்பதாகவும் இலங்கைக்கான

11 »»»»



## சுகாதார அமைச்சு சுற்றிவளைப்பு

கட்டுப்படுத்த அதிரடிப்படை



■ பா.மலரம்பிகை

மாலபே தனியார் வைத்திய கல்லூரியான சைட்டம் கல்லூரியை மூடவேண்டும் என வேண்டுகோள் விடுத்து சுகாதார அமைச்சினை சுற்றிவளைத்த

11 »»»»



## மகாநாயக்க தேரரிடம் மன்னிப்பு கேட்டார் எஸ்.பி.

அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க, அஸ்கிரிய மகாநாயக்க தேரர் உட்பட பௌத்த தேரர்களிடம் நேற்று மன்னிப்பு கேட்டுக் கொண்டார்.

பௌத்த தேரர் தன் மீது அதிருப்தி கொண்டிருந்தால்.

11 »»»»

## ரயில் சாரதிகள் வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது

புகையிரத எஞ்சின் ஓட்டுநர்கள் சங்கத்தினால் முன்னெடுக்கவிருந்த வேலைநிறுத்தப்போராட்டம் நேற்றையதினம் பேச்சுவார்த்தையின் பின்னர் கைவிடப்பட்டது. அதனடிப்படை

11 »»»»

## ஞானசார, றிஷாத், சிவாஜிலிங்கத்திற்கு எதிராக முறைப்பாடு

■ அ.அருன் பிரசாந்த்

இனவாதக் கருத்துக்களை வெளியிட்டார்கள் எனும் குற்றச்சாட்டின்பேரில் அமைச்சர் றிஷாத் பதியூதீன், கலகொட அத்தே ஞானசார தேரர் மற்றும் வடமாகாண உறுப்பினர் சிவாஜிலிங்கம் ஆகியோருக்கு எதிராக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இனவாதத்தை எவர் பரப்பினாலும் பாராபட்சம் பாராது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதால் நாம் இந்த முறைப்பாடுகள் தொடர்பிலும் தற்போது விசாரணைகளை ஆரம்பித்துள்ளோம் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரான பிரியந்த ஜயகொடி தெரிவித்தார். அரச தகவல்

11 »»»»

## கிழக்கில் பண்டிகை வியாபாரம்




(எம்.ஏ.றமீஸ், எஸ்.எம்.இர்ஷாத்)

இம்முறை கிழக்கு மாகாணத்தின் முஸ்லிம் பிரதேசங்களில் பெருநாள் வியாபாரம் களைகட்டியுள்ளது. பிரதான வீதியோர அங்காடி வியாபாரம் அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் அதிகரித்துக் காணப்படுகின்றன. கடந்த வருடங்களை விடவும் இம்முறை அதிகமான அங்காடி வர்த்தகர்கள் வெளிமாவட்டங்களிலிருந்து அம்பாறை மாவட்டத்திற்கு வருகை தந்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதை காண முடிகின்றது.

இதற்கமைவாக அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று பிரதேசத்தில் பெருநாளுக்கான அங்காடி வியாபாரம் பிரதான வீதியோரத்தில் மிக மும்முரமாக இடம்பெற்று வருகின்றது. அம்பாறை மாவட்டத்தின் முஸ்லிம் பிரதேசங்களில் மாத்திரமன்றி தமிழ் சிங்கள மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களிலும் நோன்புப் பெருநாள் வியாபாரத்திற்கென வர்த்தக நிலையங்கள் இரவு நேரங்களிலும் திறந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இனவாதத்தை தோற்கடித்த பெருமை இலங்கைக்கு கிடைக்க வேண்டும்

## முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் வேண்டுகோள்



(ஏறாவூர் நிருபர் -ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

உலகில் இனவாதத்தை தோற்கடித்த நாடு என்ற பெருமையை இலங்கை பெற்றுக் கொள்ள எல்லோரும் இணைய வேண்டும். குறிப்பாக சிறுபான்மையினரான தமிழர்களும் முஸ்லிம்களும் இந்த விடயத்தில் இன்னும் அதிகமாக சிரத்தை எடுக்க வேண்டுமென கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் தனது ஆதங்கத்தை வெளியிட்டார்.

நாட்டில் தோன்றியுள்ள வெறுப்புணர்வு செயற்பாடுகளும் அதன் எதிர் விளையாற்லும் உத்வேகமும் பற்றிக் கேட்டபோது புதன்கிழமை அவர் இந்த விடயங்களைக் குறிப்பிட்டார்.

இதுபற்றி மேலும் தெரிவித்த அவர்.

ஒரு பூச்சரத்தில் பல மலர்கள் இணைக்கப்பட்டுள்ளதைப் போன்ற பல்லின கலாசார பண்பாட்டு விழுமியங்களையும் எண்ணிலடங்கா இயற்கை வளங்களையும் தன்னகத்தே கொண்டமைந்த எழில் நாடு இலங்கை.

ஆயினும், பல்லின, சமூக, கலாசார, பண்பாட்டு விழுமியங்களின் அழகை ரசிக்கவும், இந்த நாட்டிலுள்ள மனித மற்றும் இயற்கை வளங்களை பயன்படுத்தி நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்லவும் தகுதியற்ற மதியீனர்களால் நாடு குழப்பப்படுகின்றது.

இந்த ஆரோக்கியமற்ற நிலைமையை மாற்ற எதிர்கால இளைஞர் சமூகம் ஒன்றிணைய வேண்டும். குறிப்பாக சிறுபான்மை இனங்களான தமிழர்களும் முஸ்லிம்களும், மலையக மக்களும் ஒன்றிணைந்து சிறந்த முன்மாதிரியைக் காட்ட வேண்டும்.

உலகம் திரும்பிப் பார்க்கின்ற அளவுக்கு இந்த ஒற்றுமை அமையுமானால் இனவாதத்தால் ஏற்படப்போகும் இழப்புக்களைத் தவிர்த்துக் கொள்ள வழியேற்படும். ஒற்றுமையே பலம் என்பதை உலகுக்கு உணர்த்திய சமூகங்களாக நாம் பாதை அமைக்க வேண்டும்.

அவ்வப்போது தூபமிடப்படும் இனவாத வன்முறைகளை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும். இந்த நாட்டின் அனைத்து சமூகங்களினதும் அடுத்த சந்ததியைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இந்த நாட்டை நேசிக்கின்ற சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்களுக்கு உண்டு.

அதேவேளை இந்த நாட்டையும் இந்த நாட்டின் அனைத்துப் பிரஜைகளையும் நாட்டு வளங்களையும் சட்டம் நீதியின் அடிப்படையில் பாதுகாக்கின்ற முழு முதற் கடமை பொலிஸாருக்கு உள்ளது.

சட்டம் ஒழுங்கு தடுமாறவும், பாரபட்சங்களால் சந்தேகங்கள் எழவும் பொலிஸார் ஒரு போதும் இடமளிக்கக் கூடாது.

மதஸ்தலங்கள், பெண்கள், சிறுவர்கள் மீது தாக்குதல் நடத்துவோர் மீதும் இனவாத செயற்பாடுகளை முன்னெடுப்போர் மீதும் சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

அச்சுறுத்தல் விடுக்கும் செயற்பாடுகளை கண்டும் காணாமலும் இருந்தால் குடிமக்களுக்கு அவநம்பிக்கை ஏற்படும்.

இந்த நாட்டை பிளவுபடுத்தி மக்களை அச்சத்திலும் அமைதியின்மையிலும் வாழச் செய்து அழிவுகளை ஏற்படுத்தும் இனவாதிகளை பாதுகாக்கும் நடவடிக்கைகளை எவராவது முன்னெடுத்தால் அதன் மூலம் ஏற்படும் விளைவுகளுக்கு உரிய தரப்பினரே பொறுப்பேற்க வேண்டிவரும்; என்பதை எவரும் மறந்து விடக் கூடாது.

மூவினத்தவர்கள் மத்தியிலும் ஆத்திரத்தையும் பகைமையையும் வளர்த்து அதனூடாக தமது சதித்திட்டத்தை சாதிப்பதற்கு இனவாதிகள் கங்கணம் கட்டி நிற்கிறார்கள்.

அதற்கு நாம் இடமளிக்காமல் மூவின மக்களும் மேலும் ஒற்றுமையாக இருந்து எமது சகோதரத்துவத்தைக் காட்ட வேண்டிய பொருத்தமான தருணம் இதுதான் என்பதை நினைவில் நிறுத்திக்கொள்ள வேண்டும்' எனவும் அவர் தெரிவித்தார்.

## கிழக்கு சுதந்திர ஊடகவியலாளர் ஒன்றியத்தின் இப்தாரும் முஸ்தபா நினைவுப் பேருரையும்







(அஸ்லம் எஸ்.மௌலானா)

கிழக்கு சுதந்திர ஊடகவியலாளர் ஒன்றியத்தின் வருடாந்த இப்தார் வைபவமும் அட்டாளைச்சேனை தேசிய கல்விக் கல்லூரியின் முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர் மர்ஹூம் எம்.ஐ.எம். முஸ்தபா தொடர்பிலான நினைவுப் பேருரை மற்றும் துஆப் பிரார்த்தனை நிகழ்வும் திங்கட்கிழமை அக்கரைப்பற்று ரீ.எப்.சி.மண்டபத்தில் நடைபெற்றது.

கிழக்கு சுதந்திர ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவரும் பிரதிக் கல்விப் பணிப்பாளருமான ஏ.எல்.எம்.முக்தார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வலயக் கல்விப் பணிப்பாளர் யூ.எல். எம்.ஹாசிம் அதிதியாக கலந்து கொண்டு மர்ஹூம் எம்.ஐ.எம்.முஸ்தபா தொடர்பிலான நினைவுப் பேருரையை நிகழ்த்தினார்.

கிழக்கு சுதந்திர ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளர் எம்.எப்.ரிபாஸின் நெறிப்படுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கவிஞர் அன்புடீன், அமைப்பின் உப தலைவர் எஸ்.எல்.மன்சூர், நிர்வாகச் செயலாளர் செய்யத் அஸ்லம் மௌலானா ஆகியோர் உரையாற்றியதுடன் மார்க்க சொற்பொழிவு மற்றும் துஆப் பிரார்த்தனை என்பனவும் இடம்பெற்றன.

இதில் பிராந்திய ஊடகவியலாளர்களுடன் உலமாக்கள், கல்விமான்கள், சட்டத்தரணிகள், அரசியல் பிரமுகர்கள், அரச உயர் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், வர்த்தகர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் என பல தரப்பினரும் கலந்து கொண்டனர்.

## கட்டுநாயக்க விமான நிலையத்தில் மலேரியா பரிசோதனை

( மினுவாங்கொடை நிருபர் )

வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு வரும் பயணிகள் மலேரியா தொற்றுநோய்த் தாக்கத்திற்குள்ளாக்கப் பட்டுள்ளார்களா? என்பது தொடர்பில் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பரிசோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

விமான நிலையத்தில் நிறுவப்பட்டுள்ள சுகாதார வைத்தியப் பணிமனை ஊடாக இப் பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக மலேரியா நோய்த் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

மலேரியா நோய், இலங்கையிலிருந்து முற்று முழுதாக இல்லாது ஒழிக்கப்பட்டுள்ளது. எனினும் வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு வருபவர்களால் மலேரியா நோய் மீண்டும் பரவக்கூடிய ஆபத்து இருப்பதாலேயே, இப் பரிசோதனை நடவடிக்கைகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

## யோகா தினத்தை முன்னிட்டு பயிற்சிகள்



(களுவாஞ்சிக்குடி நிருபர்)

சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலை ஊழியர்களாலும் பட்டிருப்பு மத்திய மகாவித்தியாலய தேசிய பாடசாலை மாணவர்களாலும் வை.டி எஸ்.சி. நிவ் ஒலிம்பிக், மெகன், மிலேனியம் ஆகிய கழகங்களாலும் யோகா பயிற்சி களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலை முன்பாக இன்று முன்னெடுக்கப்பட்டது.

பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் ந.புள்ளநாயகம்,களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ஜி.சுகுணன் மற்றும் களுவாஞ்சிக்குடி பழைய மாணவர் சங்கத் தலைவர் கு.நாகேந்திரம் ஆகியோரும் இதன்போது கலந்து கொண்டனர்.

# மத்திய மாகாணத்தில் தீவிரமடையும் டெங்கு

## சுகாதாரப் பணிப்பாளர் சாந்தி சமரசிங்க

(வத்துகாமம் நிருபர்)

கடந்த மாதங்களில் மத்திய மாகாணத்தில் டெங்கு பரவும் வேகம் குறைந்திருந்த போதும் சில தினங்களாகப் பெய்த அடைமழை காரணமாக மத்திய மாகாணத்தில் மீண்டும் டெங்கு மிக வேகமாக தலை தூக்கி வருவதாக மத்திய மாகாண சுகாதார பணிப்பாளர் வைத்திய கலாநிதி சாந்தி சமரசிங்க தெரவித்தார்.

இது பற்றி அவர்மேலும் கூறுகையில்,

கடந்த மாதங்களில் மத்திய மாகாணத்தில் டெங்கு காய்ச்சல் பரவும் வேகம் குறைந்திருந்த போதும் சில தினங்களாக மழை மீண்டும் பொழிய ஆரம்பித்துள்ளதால் டெங்கு காய்ச்சல் மீண்டும் வேகமாக பரவ ஆரம்பித்துள்ளது. கண்டி மாநகர சபைப்பிரிவு, மற்றும் மாத்தளை மாநகர சபைப் பிரிவு ஆகிய பிரதேசங்களில் டெங்கு நோய் சீக்கிரமாக பரவுவதாகவும் அதனை தவிர மேலும் சில சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் டெங்கு காய்ச்சல் வேகமாக பரவும் பிரதேசங்களாக இனம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மத்திய மாகாணத்தில் இது வரை 3538 டெங்கு நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளதாகவும் அதில் ஏழுபேர் உயிரிழந்துள்ளதாகவும் மாகாண பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

கண்டி மாவட்டத்தில் 2598 நோயாளர்களும் மாத்தளை மாவட்டத்தல் 703 டெங்கு நோயாளர்களும் நுவரெலியா மாவட்டத்தில் 237 நோயாளர்களும் இனம் காணப்பட்டுள்ளனர். அவர்களுள் ஏழு பேர் உயிரிழந்துள்ளனர். கண்டி மாவட்டத்தில் கடந்த மே மாதத்தில் மட்டும் 861 நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளதுடன் மாத்தளை மாவட்டத்தில் மே மாதத்தில் 133 பேர் இனம் காணப்பட்டுள்ளனர்.

டெங்கு நுளம்பு பரவும் இடங்களை அழித்து டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு அரச தரப்பினரின் உதவி கிடைத்த போதும் பொது மக்கள் இது தொடர்பில் செலுத்தும் கவனம் மிகவும் குறைவு என்றும் இதுவே இந் நோயை கட்டுப்படுத்துவதற்கு தடையாக இருப்பதாகவும் மாகாண சுகாதார பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

எனினும் ஜனாதிபதியின் விஷேட திட்டத்திற்கு அமைய மத்திய மாகாணத்திலும் டெங்கு நோயை கட்டுப்படுத்தும் விஷேட திட்டம் அமுல்படுத்தப்படும் என்றும் எதற்கும் பொது மக்களது உதவி மிகவும் அவசியம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## உலகிலே தாதி ஒருவர் இல்லாத வைத்தியசாலை முருத்தலாவையில்

## மாகாண சபை அங்கத்தவர் ஹிதாயத் சத்தார்

(வத்துகாமம் நிருபர்)

உலகிலே தாதி ஒருவர் இல்லாத வைத்தியசாலை ஒன்று இருக்குமாயின் அது கண்டி முருத்தலாவை வைத்திய சாலையாகும் என்று மத்திய மாகாண சபை அங்கத்தவர் ஹிதாயத் சத்தார் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் மத்திய மாகாண சபையின் மாதாந்த அமர்வு சபைத் தலைவர் எல்.டி.நிமலசிரி தலைமையில் பல்லேகலை மாகாண சபைக்கட்டடத்தில் இடம் பெற்ற போது தனிநபர் பிரேரணை மீது உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

கண்டி மாவட்த்தில் உள்ள எனது அயற்கிராமமான முருத்தலாவை வைத்திய சாலையில் அதிக குறைபாடுகள் காணப் பட்டுவருகின்றன. அவை உடன் நீக்கப் பட வேண்டும. அண்மையில் முதலமைச்சரும் அங்கு விஜயம் செய்திருந்தார்.

அவ்வைத்தியசாலையில் வெளியாளர் சிகிச்சைப் பிரிவு (ஓ.பி.டி) ஒன்றும் உள்ளது. இதில் ஒருநாளைக்கு 200இற்கும் மேற்பட்டவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். 18 படுக்கை வசதிகள் உண்டு. சில நேரம் 18இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் தங்கி சிகிச்சை பெறுவதும் உண்டு. ஆனால் தாதி ஒருவர் கூட இல்லாத நிலை காணப்படுகிறது.

அண்மையில் ஒரு முக்கிய நிகழ்வில் அரச பிரமுகர் ஒருவரின் வருகைக்காக முன் ஏற்பாடாக முருதலாவை வைத்திய சாலை அம்பியுலன்ஸ் வண்டி அழைக்கப்பட்ட போது அம்பியுலன்ஸ் சாரதி தான் அங்கு தாதியின் கடமைக்காக வந்திருந்தார். தாதி ஒருவர் கூட இல்லாத வைத்தியசாலையாக முருத்தலாவை வைத்தியசாலையை கூற முடியும் என்றார்.

மேலும் உரை நிகழ்த்திய அங்கத்தவர் அசங்க திலகரத்ன தெரிவித்ததாவது,

தெல்தெனிய வைத்திய சாலையிலும் போதிய வசதிகள் இல்லை. வைத்தியர்களது உத்தியோக பூர்வ வாசஸ்தலங்கள் நான்கு வெறுமனே மூடப்பட்டுள்ளன.

நுவரெலியா மாநகர சபை முறையாக இயங்குவது இல்லை என்று பொதுமக்கள் மற்றும் வர்த்தகர்களிடமிருந்து வரிகள் முறையாக வசூல் செய்யப்படுவதில்லை என்றும் ஆளுநரிடம் முறையிடப்பட்டுள்ளது. எனவே இது விடயமாக நடவடிக்கை எடுக்கும்படியும் வேண்டுகிறேன் என்றார்.

## ஸாகிர் நாயக்கை மக்காவில் சந்தித்து கலந்துரையாடிய ஹிஸ்புல்லாஹ்



(ஆர்.ஹஸன்)

புனித உம்ரா கடமைகளுக்காக மக்கா சென்றுள்ள புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ், அங்கு பல்வேறுபட்ட உயர் மட்ட சந்திப்புக்களில் ஈடுபட்டுள்ளார். அதில் ஓர் அங்கமாக சர்வதேச புகழ் பெற்ற இஸ்லாமிய மத போதகரும் ஐ.ஆர். எவ். அமைப்பின் தலைவருமான டாக்டர். ஸாகிர் நாயக்கை சந்தித்து பல முக்கிய விடயங்கள் குறித்து கலந்துரையாடியுள்ளார்.

புனித மக்கா ஹரம் ஷரீபில் இடம்பெற்ற இச்சந்திப்பில் ஸ்ரீலங்கா ஹிரா பௌண்டேஷன் பிரதித் தலைவர் அல்ஹாஜ் பௌகல் ஜிப்ரி, மட்டக்களப்பு கெம்பஸ் நிறைவேற்றுப் பணிப்பாளர் பொறியியலாளர் ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இந்த கலந்துரையாடலின் போது, இலங்கை முஸ்லிம்கள் சம காலத்தில் எதிர்நோக்கியுள்ள சவால்கள், பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன், அதற்கான தீர்வுகள் குறித்தும் இதன்போது ஆராயப்பட்டன.

நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் மேற்கொள்ளும் அனைத்து முயற்சிகளுக்கும் தனது முழுமையான பங்களிப்புக்களை வழங்குவதாக இதன் போது டாக்டர். ஸாகிர் நாயக் உறுதியளித்தார்.

# எதிரிகள் யார் – நண்பர்கள் யார் இனங்கண்டு செயற்படுங்கள்

## தேசிய இப்தார் தின நிகழ்வில் முஸ்லிம்களிடம் ஜனாதிபதி வேண்டுகோள்







தமது நண்பர்கள் யார் எதிரிகள் யார் என்பதை இனங்கண்டு செயற்படுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முஸ்லிம்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற தேசிய இப்தார் தின நிகழ்வில் உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்து பேசிய ஜனாதிபதி கூறியதாவது,

அனைத்து இனங்களுக்குமிடையில் சமாதானம் மற்றும் ஒற்றுமையை கட்டியெழுப்பி நாட்டில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக அரசாங்கம் பரந்த செயற்திட்டத்தை முன்னெடுப்பதாக தெரிவித்தார்.

முன்னர் முஸ்லிம்களுக்கு எதிராக செயற்பட்டவர்கள், அரசாங்கத்துக்கும் முஸ்லிம் மக்களுக்குமிடையில் பேதங்களை ஏற்படுத்துவதற்கு அரசியல் சதியில் ஈடுபட்டிருக்கின்றனர். தமது பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு சுதந்திரமாக வாழக் கூடிய சூழலை ஏற்படுத்துவதற்காகவே 2015 ஜனவரி 08 திகதி ஜனாதிபதி தேர்தலில் நாட்டின் சிறுபான்மை மக்கள் தனக்கு வாக்களித்ததால் அந்த பொறுப்புக்களை உரியவாறு நிறைவேற்ற பாடுபடுகிறேன்.

எனவே அரசியல் சதிகளில் சிக்காது எதிரிகளையும் நண்பர்களையும் இனங்கண்டு செயற்படுமாறு தான் அனைத்து முஸ்லிம்களிடமும் கோரிக்கை விடுப்பதாகவும் குறிப்பிட்டார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்களான பைசர் முஸ்தபா, ரவி கருணாநாயக்கா, ரிஷாட் பதியுதீன், ரவூப் ஹக்கீம், இராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி ஆகியோரும் ஜனாதிபதியின் செயலாளர் பி.பி.அபேகோன், வெளிநாட்டு தூதுவர்கள் உள்ளிட்ட பிரமுகர்களும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

பலஸ்தீனிலிருந்து வருகைதந்துள்ள இமாம் ஜனாதிபதிக்கு பலஸ்தீன் சால்வையை அணிவித்து கௌரவித்தார்.

## வெடிபொருள் அபாயமற்ற மாவட்டமாக மட்டக்களப்பு பிரகடனம்



வெடிபொருள் அபாயமற்ற மாவட்டமாக மட்டக்களப்பு மாவட்டம் நேற்றையதினம் பிரகடனப்படுத்தப்பட்டது.

மட்டக்களப்பில் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பாடுமீன் விடுதி வளாகத்தில் மிதிவெடி அகற்றல் தொடர்பான காட்சிப் படுத்தல்களைத் தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்ட செயலக கேட்போர்கூடத்தில் வெடிபொருள் அபாயக்குறைப்பை அண்மித்த மாவட்டமாக பிரகடனப்படுத்தும் நிகழ்வு நடைபெற்றது.

மக் நிறுவனம் மற்றும் இலங்கை இராணுவம் ஆகியவற்றுக்கு மட்டக்களப்பை நிலக்கண்ணி வெடிகளற்ற மாவட்டமாகப் பிரகடனப்படுத்தும் சான்றிதழ்கள் கையொப்பமிடப்பட்டு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப், கிழக்கு மாகாண முதலமைச்சர் பொறியியலாளர் நசீர் அகமட், ஐக்கிய இராட்சியத்தின் உயர்ஸ்தானிகர் ஜேம்ஸ் டோரிஸ், அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகர் பிரேஸ் ஹட்சன், பாராளுமன்ற உறுப்பினர்களான அலிசாகிர் மௌலானா, எஸ்.வியாழேந்திரன் உள்ளிட்ட அரச அதிகாரிகளும், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.

## திருமலையில் பல்கலைகழகம் அமைக்க அனுமதி

திருகோணமலை மாவட்ட மாணவர்களின் நன்மை கருதி 434 மில்லியன் ரூபா செலவில் கின்னியா பிரதேசத்தில் பல்கலைகழகமொன்றை ஸ்தாபிப்பது தொடர்பிலான யோசனைக்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

திறன் விருத்தி மற்றும் வாழ்க்கை தொழிற் பயிற்சி அமைச்சர் சந்திம வீரக்கொடியினால் இந்த யோசனை முன்வைக்கப்பட்டது.

திருகோணமலையில் தற்போது 13 அரசதுறை தொழிற்பயிற்சி நிலையங்கள் செயற்படுகின்றன. பல்வேறு துறைகளுடன் தொடர்புபட்ட 54 கற்கைநெறிகள் இவற்றில் நடத்தப்படுவதுடன், தனியார் துறையில் 24 பயிற்சி நிலையங்கள் செயற்பட்டு வருகின்றன.

## ஐ.நா இளைஞர் விவகார தூதுவராக இலங்கையர் நியமனம்



ஐக்கிய நாடுகளின் இளைஞர் விவகாரங்களுக்கான தூதுவராக ஜயத்மா விக்ரமநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் அந்தோனியோ குத்தரெஸ் இந்த நியமனத்தை வழங்கினார்.

2030ஆம் ஆண்டளவில் ஐக்கிய நாடுகளின் நிலையான அபிவிருத்தி கொள்கையை வெற்றிகரமான முறையில் நடைமுறைப்படுத்த இளைஞர் சமூகத்தை வலுவூட்டும் பொறுப்பு இவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஜயத்மா விக்ரமநாயக்க தனது 21 வயது முதல் சர்வதேச மட்டத்திலான இளைஞர் அபிவிருத்திப் பணிகளை பிரதிநிதித்துவப் படுத்திவருகிறார்.

## இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் 22 அரச அதிகாரிகள் கைது

இவ் வருடத்தின் இதுவரையான காலத்தில் இலஞ்சம் பெற்ற குற்றச் சாட்டில் 22 அரச அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளதாக, இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

இலஞ்சம் பெற முற்பட்டதாக 29 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள குறித்த ஆணைக்குழு, அது குறித்த 20 சுற்றிவளைப்புக்கள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்தது.

கைதுசெய்யப்பட்டவர்களில் சிலர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதோடு, சிலர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, பொலிஸ் அதிகாரிகள் ஐவர், பிரதேச செயலக அலுவலக அதிகாரிகள் நால்வர், பிரதேச சபை, நகர சபை அதிகாரிகள் நால்வர், கல்வித் திணைக்கள அதிகாரிகள் இருவர் மற்றும் சுகாதார துறை அதிகாரிகள் இருவர் போன்றோரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இதேவேளை, இலஞ்சம் பெற முற்படுபவர்கள் தொடர்பான முறைப்பாடுகள் இருப்பின் 1954 என்ற இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளுமாறும் இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் கோரப்பட்டுள்ளது.

அவ்வாறு இல்லையாயின் நேரில் ஆணைக்குழுவுக்கு வருவதன் மூலம் அல்லது தபால் மூலம் தெரியப்படுத்த முடியும் என இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக் குழு சுட்டிக்காட்டியது.

## பயிற்றுவிக்கப்பட்ட வைத்தியர்களாலேயே டெங்கு நோயாளர்களுக்கு சிகிச்சை

### சுகாதார அமைச்சு

விசேடமாக பயிற்றுவிக்கப்பட்ட வைத்தியர்களை டெங்கு நோய் தாக்கத்திற்குட்பட்டவர்களுக்கு சிகிச்சை வழங்க நியமிக்கவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்தது.

டெங்கு நோய்த்தாக்கத்திற்கு உட்பட்ட நோயாளர்கள் அனுமதிக்கப்பட்டுள்ள வைத்தியசாலைகளில் விசேட வைத்திய நிபுணர்களை நியமிக்கவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்தது.

டெங்கு நோயாளர்களின் பராமரிப்பிற்காக விசேடமாக பயிற்றுவிக்கப்பட்ட தாதியர்களும் நியமிக்கப்படவுள்ளதாகவும், டெங்கு நோயைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும் வகையில் நோயாளர்களை உடனடி சிகிச்சை பெறுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

டெங்கு நோயாளர்கள் அதிகம் அனுமதிக்கப்பட்டுள்ள பேராதனை வைத்தியசாலை மற்றும் சிறிமாவோ பண்டாரநாயக்க சிறுவர் வைத்தியசாலைக்கு முதல் கட்டமாக விசேட வைத்திய நிபுணர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

டெங்கு நோய் தொடர்பிலான பரிசோதனை நடவடிக்கைகளை மேலும் மேம்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியது.

## சுபெண் பிரஜா அபிமானி ஒன்றியங்கள் மாநாடு நாளை

சுபெண் பிரஜா அபிமானி ஒன்றியங்கள் மாநாடு 2017 ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெறவுள்ளது.

நகரத்திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சும் தேசிய சமூக நீர் விநியோக திணைக்களமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்த மாநாடு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சுகததாச உள்ளக அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் நகரத்திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் மற்றும் நகரத்திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர் சுதர்சினி பெர்னாண்டோபுள்ளே உள்ளிட்ட பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதன்போது சிறுநீரகநோய் உள்ள 7 மாவட்டங்களுக்கு 70 நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

யுனிசெப் நிதியுதவியில் 100 நீர்த்தாங்கிகள் சமூக நீர்வழங்கல் அமைப்புக்கு வழங்கப்படவுள்ளன. அத்தோடு சர்வதேச நீர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் இதன்போது வழங்கப்படவுள்ளன.



NAVAMANI DAILY
நவமணி
FREELANKA MEDIA LTD.
156, Hospital Road, Kalubowila, Dehiwala.
Telephone: 011 7393880 - 1/2 Fax: 011 7393883
E-mail: editornavamani@gmail.com
freelankamedia@gmail.com
22nd JUNE 2017 - THURSDAY

# முஸ்லிம்கள் தொல்பொருள் தளங்களை அழித்தார்களா? தெரிவுக்குழு நியமிக்குக

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் பௌத்தர்களின் தொல்பொருள் தளங்களை நாசமாக்கியிருப்பதாக குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்பட்டுள்ளன.

கடும் போக்கு பொதுபல சேனா சிங்களமாக கூறி வரும் இந்தக் குற்றச்சாட்டு பற்றி செவ்வாயன்று அறிக்கையொன்றை விடுத்த அஸ்கிரிய மகா சங்க சபையினரும் குறிப்பிட்டுள்ளனர்.

முஸ்லிம் தரப்பில் இக்குற்றச்சாட்டுக்கள் மறுக்கப்படுகின்றன. எனினும் சில பௌத்த தேரர்கள் இந்தக் குற்றச்சாட்டினை தொடர்ந்து தெரிவித்து வருகின்றனர்.

கிழக்கு மாகாணத்திலிருந்து கிடைக்கும் தகவல்களின் படி முஸ்லிம்களால் திட்டமிட்டு எந்த ஒரு தொல்பொருள் தளமும் நாசமாக்கப்பட்டதாக இல்லை என்றுக்கூறப்படுகின்றது என்றும் தொடராக எழுப்பப்படும் இக்குற்றச்சாட்டினால் முஸ்லிம்கள் பற்றி பெரும்பான்மைச் சிங்கள மக்கள் மத்தியில் சந்தேகங்கள் வளர்க்கப்படுகின்றன.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் பலநூறு வருடங்களாக வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் ஏனைய இனங்களுடன் சௌஜன்யமாகவே வாழ்ந்து வருகின்றனர். அம்பாறை மாவட்டத்தில் பௌத்தர்களது புனித பிரதேசமாகக் கருதப்படும் தீகவாபி பிரதேசத்தை ஆரம்ப கால முஸ்லிம்கள் பாதுகாத்ததாக வரலாறு கூறுகிறது. அது தவிர பொலன்னறுவையில் சோமாவதி சைத்திய என்ற பௌத்தர்களின் புனிதஸ்தலத்தைக் கூட முஸ்லிம் ஒருவரே கண்டுபிடித்து கொடுத்ததாக வரலாறு கூறுகிறது. முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாச இவ்வாறு கண்டுபிடித்த முஸ்லிமைப் பகிரங்கமாக ஒரு கூட்டத்தில் பாராட்டியிருந்தார்.

முஸ்லிம் தீவிரவாதிகள் இவ்வாறு தொல்பொருள் தளங்களை நாசமாக்கியுள்ளதாக பொதுபல சேனா அமைப்பு நேற்றுமுன்தினமும் தெரிவித்து ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கும் சவால் விடுத்துள்ளனர்.

முஸ்லிம்கள் மத்தியில் தீவிரவாதம் இருக்கின்றது என அடிப்படை ஆதாரங்கள் ஏதுவுமின்றி குற்றஞ் சாட்டி வருகின்றனர்.

தொடராக மேற்கொள்ளப்பட்டு வரும் இக்குற்றச் சாட்டு தொடர்பாக விசாரணை நடத்தி உண்மையை வெளியிடுமாறு பௌத்தர்களின் முக்கிய பீடங்களில் ஒன்றான அஸ்கிரிய பீடமும் கடைசியாக விடுத்துள்ள அறிக்கையில் கோரிக்கை விடுத்துள்ளது.

இவ்வாறு தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மை இருக்கின்றதா? என்பதனைத் தேடிப் பார்ப்பதற்கு பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை நியமிக்குமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவரும் நீர்வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சருமான ரவூப் ஹக்கீம் பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த கோரிக்கைக்கு அரசு முன்னுரிமையளித்து ஒரு தெரிவுக்குழுவை நியமிக்கவேண்டும். சொல்லப்படும் குற்றச்சாட்டுக்கள் உண்மையா? இல்லையா? என்பதில் தெளிவுபடுத்த வேண்டும். தொடர்ந்து இந்தக்குற்றச்சாட்டினை எழுப்ப இடமளிப்பது சமூகங்களுக்கிடையிலான உறவில் விரிசல் ஏற்படலாம்.

அரசாங்கம் அவசரமாகப் பாராளுமன்ற தெரிவுக்குழுவொன்றை நியமித்து இக்குற்றச் சாட்டின் உண்மைத்தன்மையைக் கண்டறிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

முஸ்லிம்கள் தரப்பில் தவறு நடந்திருந்தால் அதற்குரிய பரிகாரம் காணுவதனை எவரும் எதிர்க்கமாட்டார்கள்.

அதேநேரம், சிங்கள சமூகத்தை ஒழிப்பதற்கு சிலர் முயற்சி எடுப்பதாகவும் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. இந்தக்குற்றச்சாட்டுகள் தொடர்பாகவும் அரசு தேடிப் பார்க்கவேண்டும். யார் இவற்றைச் செய்கிறார்கள் என்பதனைத் தேடி வெளிப்படுத்த வேண்டும்.

# இஸ்லாமியப் பார்வையில் போதைவஸ்தும் பாவனையும்

அட்டாளைச்சேனை மன்சூர்

குடி குடியைக் கெடுக்கும் என்பார்கள். போதைப்பொருட்களை உட்கொண்ட மனிதனின் நிலைமை ஆட்டங்காணும். அவனது சொல், செயற்பாடுகள் எல்லாமே வித்தியாசமாக இருக்கும். போதைக்கு அடிமையானவனின் நிலைமையும் பரிதாபகரமாக இருக்கும். சுயபுத்தியை பேதலிக்கச் செய்யும் அளவுக்கு சுயசிந்தனையற்றவனாக காணப்படுவான். இஸ்லாத்தில் மாத்திரமன்றி ஏனைய மதங்களும் சுயபுத்தியை இழக்கும் அளவுக்கு தன்னையும், தன்நிலையையும் போதை தருமளவுக்கு தடுமாறச் செய்கின்ற உணவுகளை உட்கொள்வதைத் தடுத்திருக்கிறது. நாட்டில் பல குடும்பங்கள் வீட்டுத் தலைவனின் குடிபோதையினால் பரிதவித்திருப்பதைக் காண்கிறோம். குறிப்பாக இளைஞர்கள், பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் போதைப் பொருள் பாவனை அதிகரித்து வருவதாக அண்மைய புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இந்த நிலை தொடருமாக இருந்தால் கல்வி, கலாசாரம், பண்பாடு, சமயரீதியான சிந்தனைவெளிப்பாடுகள், பொருளாதாரம், குடும்ப உறவுகள் அனைத்திலும் பாரிய பாதிப்பினை ஏற்படுத்தும் என்பதில் எவ்விதமான ஐயமுமில்லை. பலரின் வாழ்வின் சீரழிவுக்கு காரணமாக

பொருள் பாவனை மனிதர்களால் பாவிக்கப்பட்டு வந்திருக்கிறது. மருத்துவத் துறை வளர்ச்சியடையாத காலத்திலிருந்த மக்களின் அன்றாடப் பொழுதுபோக்குகள், தொழில்துறைகள் போன்றவற்றின் ஊக்கியாக இது இருந்து வந்திருக்கிறது. பின்னர் இது உடலுக்குத் தீங்கு விளைவிக்கிறது என்கிற காரணங்களை மருத்துவத் துறை கண்டறிந்த பின்னரும் இதனைப் பாவிப்பதானது உடலுக்கும், உளத்திற்கும், ஏன் குடும்ப உறவுக்கும், குடும்பங்களின் சீரழிவுக்கும் போதைப் பொருள்களின் பாவனை காரணமாக இருந்திருக்கிறது என்பதை திரைசனமாகவே பார்க்கிறோம். குடிபோதையில் மனைவியும் தெரிவதில்லை, மகளும் தெரிவதில்லை. போதையினால் தன்னையே சீரழித்துக் கொண்டிருக்கிறான் மனிதன். இதிலிருந்து விடுபடுவதற்கு மார்க்கத்தின் அடிப்படையில் சிந்தனை பெறவேண்டிய சமூகமாக குறிப்பாக முஸ்லிம் சமூகம் காணப்படுகின்றது.

சில முஸ்லிம் பிரதேசங்களில் அண்மைக் காலமாக அதிகரித்துள்ள போதைப் பொருள் பாவனையானது சமூகத்தின் எதிர்காலத்தை நினைக்கின்றபோது கேள்விக்குறிக்குள்ளாக்கியுள்ளது. போதைப் பொருள்கள் பாவனையானது முஸ்லிம் சமூகத்தினால் தூரமாக்கப்பட வேண்டிய நிலைமை காணப்பட்ட போதிலும் இராக்க

என்று அன்றைய தினம் மாத்திரம் மதுபானக் கடைகளை மூடுவதால் எதுவும் மாறிவிடப் போவதில்லை. காரணம் அதற்கு முன்னைய நாளில் கடைகளின் முன்னே நாளைக்கும் சேர்த்து வாங்கும் குடியானர்களின் கூட்டத்தை பார்த்தால் தெளிவாகும். ஆகவே, கடையை மூடுவதால் எந்தப் பயனும் இல்லை என்பது தெளிவாகிறதல்லவா?

## போதையூட்டும் பொருட்கள் சம்பந்தமாக அல்குர்ஆன், ஹதீஸின் பார்வை

ஈமான் கொண்டோரே! மதுபானமும், சூதாட்டமும், கற்சிலைகளை வழிபடுதலும், அம்புகள் எறிந்து குறி கேட்பதும், ஷைத்தானின் அருவருக்கத்தக்க செயல்களிலுள்ளவையாகும்; ஆகவே நீங்கள் இவற்றைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்-அதனால் நீங்கள் வெற்றியடைவீர்கள். நிச்சயமாக ஷைத்தான் விரும்புவதெல்லாம், மதுபானத்தைக் கொண்டும், சூதாட்டத்தைக் கொண்டும் உங்களிடையே பகைமையையும், வெறுப்பையும் உண்டு பண்ணி அல்லாஹ்வின் நினைவிலிருந்தும், தொழுகையிலிருந்தும் உங்களைத் தடுத்து விடத்தான்; எனவே, அவற்றை விட்டும் நீங்கள் விலகிக் கொள்ள

(ரழி)அவர்கள் கூறியிருக்கின்றார்கள். இன்று போதையூட்டும் பொருட்கள் பெருமளவில் நம்மை அறியாமலே பல்வேறு பெயர்களில் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

அண்மையில் முஸ்லிம் பிரதேசமொன்றின் விளையாட்டு மைதானத்தை துப்பரவு செய்கின்றபோது பல நூற்றுக்கணக்கான மது போத்தல்களும், பியர் ரின்களும் காணப்பட்டதை பார்க்க நேர்ந்தது. இத்தனையும் இப்பிரதேச அல்லது அயற்பிரதேச இளைஞர்களின் வயிற்றுக்குள் சங்கமாகியதே என்பதைப் பார்க்கிறபோது ஆச்சரியமாக இருந்தது. இஸ்லாத்தில் தடைசெய்யப்பட்டு ஹராமாக்கப்பட்ட ஒரு பொருளை இரகசியமாக மக்கள் நடமாட்டம் அற்ற இரவு நேரங்களில் நண்பர்களோடு இருந்து அரட்டை அடித்துக் கொண்டு ஒரு தம் பிடித்துக் கொண்டு காலம் ஓட்டுகின்ற ஒரு சமூகமாக நமது இஸ்லாமிய சமூகத்தின் இளைஞர்கள் மாறிக் கொண்டு வருகின்றனர். இதனைக் கட்டுப்படுத்த வேண்டிய கடமைப்பாடு அந்தச் சமூகத்தின் தலைவர்களிடமும், பள்ளிவாசல் நிருவாகத்திடமும், ஊர் தலைமைத்துவங்களிடமும் உருவாக்கப்பட வேண்டும். தனித்துவமான முஸ்லிம் பிரதேசங்களில் மேலே கூறப்பட்ட இவ்வாறான நிலைமைகள் இருக்குமாக இருந்தால் பல்லினங்களோடு இணைந்து வாழ்கின்ற பிரதேசங்களிலும் இவ்வாறு காணப்படுமாக இருந்தால் நமது முஸ்லிம் சமூகத்தின் பாதுகாப்பு, வாழ்வதற்கான உத்தரவாதம், மேலாதிக்க வெறித்தனம் போன்றவற்றுக்கு இறைவனிடமிருந்த எவ்விதமான தன்மைகளும் கிடைக்க மாட்டாது என்பதையும் நாம் உறுதியாக கூறமுடியும்.

உண்மையில் சில பிரதேசங்களில் சிகரட் விற்கப்படுவதில்லை. தடைசெய்திருக்கிறார்கள். உண்மையில் இது வரவேற்கத்தக்க ஒரு விடயமாகும். நாட்டில் அரசினால் மேற்கொள்ளப்படுகின்ற வியாபாரம் ஒன்றை ஒரு சமூகத்தின் அதிலும் சிறுபான்மைச் சமூகத்தினால் தடைசெய்வதற்கு முடியாத காரியமாகும். ஆனால் விற்பனையை நாம் தடைசெய்தால் குறிப்பாக அந்த பொருட்களை மாத்திரம் வாங்குவதையும், விற்பதையும் அப்பிரதேசத்தில் இருக்கின்ற ஒவ்வொரு வியாபாரியும் நடைமுறைப்படுத்தினால் காரியம் கச்சிதமாக குறைவடையும். ஒருவ

போதைப்பொருள் பாவனையே என்று கூறும் அளவுக்கு நிலைமைகள் காணப்படுவதை நாம் நமது பிரதேசங்களிலும் காண்கிறோம். ஆதலால் தான் குடி குடும்பத்தையே சீர்குலைக்கும், வாழ்வின் அத்திவாரத்தையே ஆட்டங்காணச் செய்துவிடும்.

## போதைவஸ்து என்றால் என்ன?

போதைவஸ்து குறித்து வரைவிலக்கணத்தைக் வரையறுத்தல் என்பது புதிர் நிறைந்ததொன்றாகவும், அதாவது ஏமாற்றுத் தன்மை கொண்ட தொன்றாகவுமே காணப்படுகின்றது. அதாவது, போதைவஸ்து என்றால் என்னவென்கிற ஒரு முகப்பாடான கருத்துக்களை சமூகவியலாளன், மருத்துவவியலாளன் அல்லது பொலிசாரே மற்றும் பொதுமகன், பொதுசன தொடர்பூடகங்கள் கருதுவதுமில்லை வரையறை செய்து கொள்வதுமில்லை. எனவே போதைவஸ்து என்பது மானிடம் சார்ந்த நலம் பேணும் பல்வேறு அமைப்புகளுடன் வேறுவேறான ஏற்புடைமைகளுடன் தொடர்புடையதொன்றாகவும் விளங்குகின்றது. மருத்துவத்துறையின் எந்த அளவிற்குப் போதை வஸ்துக்களை மருந்தாகப் பாவிக்கலாம் என்பது குறித்தும், சமூகவியலாளன் எந்த அளவிற்கு போதைவஸ்துக்களை பாவிப்பதற்கு அனுமதிக்கலாம் என்பது குறித்தும், அரசாங்கம் தன்னுடைய வருமானத்தை அதிகரித்துக் கொள்ள எவ்வளவு தூரம் வாய்ப்பாக்கலாம் எனவும் சட்டத்தை ஒருவாறு நிலைநாட்டத்தக்க வகையில் எவ்வளவுக்கு அனுமதிக்கலாம் என்கின்ற வகையில் பொலிசாரும் தமது நோக்கங்களை மையப்படுத்தியவாறே போதைவஸ்துக் குறித்து வரையறை செய்ய முற்படுவர். எனவே சமூக உளவியல், சமூகவியல் போன்றவற்றை முதன்மைப்படுத்தியவாறும் மருத்துவத்துறை சட்டத்துறை போன்றன போதைப்பொருள் குறித்த நிலைப்பாட்டினை புரிந்துகொள்ள ஏதுவாக அமையும்.

எனினும் போதைவஸ்து என்பது எந்த ஒரு வஸ்து. அதற்குரிய இரசாயன இயல்பு, உயிரியொன்றின் செயற்பாட்டில், அமைப்பில் அதாவது தோற்றப்பாட்டில் மாற்றத்தினை ஏற்படுத்துகின்றதோ அதாவது புத்தியை மழுங்கடிச் செய்து மயக்கத்தை ஏற்படுத்தி தன்னிலையில் தளர்வினை ஏற்படுத்துவதே போதைவஸ்தாகும். இது மருத்துவத் துறையோடு சம்பந்தப்பட்டிருக்கின்ற ஒரு விளக்கமாக இருந்தாலும், போதைப்பொருளானது எமது விரைப்புக்களின் விளைவுகளுக்கு நேர்கணியமானதொரு பாதிப்பை ஏற்படுத்த உதவுகிறது என்கிற பொதுவான முடிவுக்கு வரலாம். இதுவே போதைவஸ்துப் பாவிப்பவர்கள் முன்வைக்கின்ற ஒரு கூற்றாகும்.

இன்று மட்டுமல்ல அன்றிலிருந்தே போதைப்

ஙலங்களில், மைதானங்களிலும், கடற்கரை ஓரங்களிலும், தனிமையான இடங்களிலும், நண்பர்களுடன் இணைந்து குடித்து கும்மாளமிடும் சமூகமாக காணப்படுவதைப் பார்க்கிறபோது வேதனையாக இருப்பதாக சமூக ஆர்வலர்கள் கூறுகின்றனர். மதுக்கடைகளில் மாலைநேரங்களில் சில முஸ்லிம்களும் மதுசாரத்தை வாங்குகின்ற ஒரு நிலைமையும் காணப்படுகின்றது. அந்நிய சமூகத்தில் முஸ்லிம்களைப் பற்றிய தப்பான அபிப்பிராயத்தை இது ஊட்டிவிடுகிறது என்பதையும் மறைக்கமுடியாது.

மனித சமூகத்தை அச்சுறுத்திக்கொண்டிருக்கும் தீமைகளில் மது முதலிடம் பிடித்திருக்கிறது. அதன்மூலம் தனி மனிதன், குடும்பம், சமூகம் எண்ணற்ற துயரங்களை சந்தித்து வருவதை அன்றாடம் பார்த்தும் படித்தும் வருகிறோம். அதை ஒழித்துக்கட்டி, ஆரோக்கியமான, நிம்மதியான ஒரு சமூகத்தை கட்டமைக்கவேண்டிய கடமைப்பாடு ஒவ்வொரு பிரதேசத்திலும், அந்தந்த சமூகத்திடம் காணப்படவேண்டும். வருடந்தோறும் வரவு செலவு திட்டத்தில் வரியை அதிகரித்துள்ள போதிலும் பாவனை குறையும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும் போதை வஸ்துக்களின் பாவனை அதிகரித்திருப்பதையே காண்பிக்கிறது. இது அரசுக்கு கணிசமான வருமானமாக இருந்தாலும் சுகாதாரத்துறைக்கு இதன் பாவனையால் செலவு செய்யும் தொகை இதன் வருமானத்தைவிட அதிகமானது என்கிற கருத்தும் உண்டு. ஆதலால் அரசு போதையற்ற நாட்டை உருவாக்க வேண்டும் என்று மார்தட்டிக் கொண்டு அறைகூவல் விடுத்திருந்த போதிலும் முழுமையான விற்பனையை தடைசெய்வது, இறக்குமதியை நிறுத்துவது போன்றவற்றை மேற்கொள்ளாதவரை இதனை முழுமையாக ஒழிக்க முடியாது.

அண்மைக் காலங்களில் இந்தியாவின் கோணத்திலிருந்து கஞ்சா போன்ற போதைப்பொருள்கள் நாட்டுக்குள் பெருமளவில் இரகசியமாக வந்து கொண்டிருந்தது. தற்போது அது குறைவடைந்திருந்தாலும் சட்டவிரோதமான முறைகளில் நாட்டுக்குள் இவ்வாறான போதையூட்டும் நவீன போதைப் பொருட்கள் பல்வேறு பெயர்களுடன் வருவதும், அதனை கண்டுபிடிப்பது கஷ்டமாகவே இருக்கின்றது. இவ்வாறான போதைப் பொருள் பாவனையின் காரணமாக நாட்டில் ஆரோக்கியமற்ற சமூகம் ஒன்று உருவாக்கிக் கொண்டிருப்பதாகவே கூறமுடியும். மதுபானங்களின் விலையை உயர்த்துவதாலோ அவற்றின் மீதான வரிகளை உயர்த்துவதாலோ மது குடிப்பதைக் குறைத்துவிடுவார்கள் அல்லது விட்டுவிடுவார்கள் என்று கூறும் காரணங்கள் வெறும் மாயை என்பது புள்ளி விபரங்களிலிருந்து தெளிவாகின்றது. எனவேதான், மது ஒழிப்பு வாரம்



மாட்டீர்களா? என புனித அல்-குர்ஆன் 5:90-91 - இந்த வசனத்தில் எடுத்தியம்பிக் கொண்டிருக்கிறது.

மது அருந்துபவர், அதனை அருந்தச் செய்பவர், வாங்குபவர், விற்பவர், தயாரிப்பாளர், சுமப்பவர், இதன் மூலம் கிடைத்த வருவாயை சாப்பிடுபவர்கள் அனைவரையும் நபி (ஸல்) அவர்கள் சபித்துள்ளார்கள். (ஆதாரங்கள் : அபூதாவூத், திர்மிதி, இப்னுமாஜா) நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்: போதை தரும் அனைத்தும் மதுவாகும். போதைதரும் அனைத்தும் ஹராமாகும். அறிவிப்பவர்: இப்னு உமர் (ரலி), ஆதாரம் : முஸ்லிம் - என்னுடைய சமுதாயத்தில் சிலர் நிச்சயம் மது அருந்துவார்கள். ஆனால் அதற்கு வேறுபெயரைக் கூறிக் கொள்வார்கள் அறிவிப்பவர் : அபூமாலிக் அல்-அஷ்அரி (ரலி), ஆதாரம் : இப்னுமாஜா. மேலும், அபூமூசா அல்அஷ்அரி (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நான் அல்லாஹ்வின் தூதரே! எங்கள் எமன் நாட்டில் தேனில் அல்பித்உ எனப்படும் ஒரு வகை பானமும், வாற்கோதுமையில் மிஸ்ர் என்று கூறப்படும் ஒரு வகை பானமும் தயாரிக்கப்படுகிறது (அவற்றின் சட்டம் என்ன?) என்று கேட்டேன். அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் போதை தரக் கூடிய ஒவ்வொன்றும் தடை செய்யப்பட்டது (ஹராம்) ஆகும் என்று பதிலளித்தார்கள் அல் அஷ் அரி

ரிடமும் இல்லையென்றால் குறைவடையத்தானே செய்யும். இந்த நிலைமைகளை முஸ்லிம் பிரதேசங்களில் இருக்கின்ற விற்பனை நிலையங்கள் மேற்கொள்ள வேண்டியதும் கட்டாயமாகும்.

ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள் : அல்லாஹ்வின் தூதர் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களிடம் தேனிலிருந்து தயாரிக்கப்படும் பானம் (பித்உ) குறித்துக் கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள் போதை தரும் ஒவ்வொரு பானமும் தடை செய்யப்பட்டதாகும் என்று பதிலளித்தார்கள் - முஸ்லிம் (4071) எனவேதான், மது அருந்துவதற்கும் அதனை விற்பதற்கும் அதனை பங்கு வைப்பதற்கும் மது அருந்தப்படுவதற்கும் எவ்வகையிலேனும் உதவி புரிவதற்கும் இஸ்லாத்தில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எந்தவொரு அனுமதியும் கிடையாது என்பதற்கான பல ஆதாரங்கள் நபிகளாரின் மொழிகளில் இருந்தும், புனித வேதமான அல் குர்ஆனிலும் நிறைந்து கிடப்பதை அறியக் கூடியதாக இருக்கின்றது. சிலர் சில ஆதாரங்களைக் காண்பித்துக் கொண்டிருக்கின்றனர். இதற்குரிய விளக்கங்களை உலமாக்கள், மார்க்க அறிஞர்களே சாதாரண மக்களுக்கு விளக்க வேண்டும்.

(அடுத்தவாரம் வியாழன் தொடரும்...)

## திருகோணமலை பொது நூலக 8 ஆவது ஆண்டு நிறைவு விழா

(ஹஸ்பர் ஏ ஹலீம் கிண்ணியா)

திருகோணமலை நகராட்சி மன்ற புதிய பொது நூலகத்தின் 08ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு பொது நூலக கேட்போர் கூடத்தில் நகராட்சி மன்றத்தின் செயலாளர் தே. ஜெயவிஷ்ணு தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக திருகோணமலை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் என். சுதாகரன் சிறப்பு அதிதியாக திருகோணமலை சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். முரளிதரனும் கலந்துகொள்வார்கள். ஆரம்ப நிகழ்வாக வரவேற்புரையினை நூலகத்தின் பிரதம நூலகர் கா. இராஜேஸ்வரசிங்கம் நிகழ்த்துவதுடன் நிகழ்வின் இறுதியில் நன்றியுரையினை நூலகர் க.வரதகுமார் நிகழ்த்துவார்.

# அரசாங்கம் இனவாதிகளைத் தண்டிக்காது மௌனம் காக்கிறது

## மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளர் ரில்வின் சில்வா



தேசிய ஒற்றுமையை வளர்ப்பதாக கூறிக்கொண்டு இனவாதத்தை பரப்பி நாட்டை சீரழிக்கவே அரசாங்கம் முயற்சிப்பதாகவும் இப்போது பரப் பப்படும் இனவாதத்தின் எல்லை மிகப்பெரிய இன அழிவில் முடியும் எனவும் மக்கள் விடுதலை முன்னணி யின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

பழைய திருடர்களை விரட்டிவிட்டு புதிய கொள்ளையர்கள் ஆட்சிக்கு வந்துள்ளனர். இரு திருடர்கள் கூட்டணி யும் இணைந்தே நாட்டை கொள்ளைய டித்து வருகின்றனர்.

நாட்டில் இனவாதம் மீண்டும் தலைதூக்க ஆரம்பித்து விட்டது. நாம் இனவாதத்தில் இழந்தவை அதிகமாகும். இந்த அனுபவங்கள் எமக்கு நன்றாகவே உள்ளது. இப்போது மீண்டும் அதே பாதையில் செயற்பட்டு வருகின்றது. முன்னைய அரசாங்கம் இனவாதிகளின் பின்னணியில் இருந்தனர். சில சேனாக்கள் அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்டது. இந்த அரசாங்கம் இனவாதிகளை தண்டிக்காது மௌனம் காக்கின்றது.

அரசாங்கம் சூழலை பாதுகாப்பதை விடுத்து சூழலை மேலும் மாசுபடுத் தும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. அதேபோல் சர்வதேச நாடுகளுக்கு நிலங்களை விற்று பிரச்சி னைகளை மேலும் மோசமாக்கி வருகின்றனர் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.








தெஹிவளை மூர் நன்னோக்குச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட வருடாந்த இப்தார் நிகழ்வு தெஹிவளை ஜனஜய வரவேற்பு மண்டபத்தில் அதன் தலைவர் எஸ்.எச். எம் இஸ்மாயில் தலைமையில் நடைபெற்றது. பௌத்த, இந்து, கிறிஸ்துவ இஸ்லாம் ஆகிய மதஸ்தானங்களின் தலைவர்கள் கலந்து கொண்டு இன ஐக்கியம் நோன்பு பற்றி உரையாற்றினார்கள். அத்துடன் பொலிஸ் நிலைய பொறுப்பாதிகரிகள், ஐ.தே.கட்சியின் அமைப்பாளரும் முன்னாள் அமைச்சருமான திருமதி சுனேத்திரா ரணசிங்கவும் கலந்து கொண்டார். (அஷ்ரப் ஏ சமத்)

## நிர்வாகிகள் தெரிவு

ஓய்வு பெற்ற கிராம அதிகாரிகள் நலன்புரிச் சங்கத்தின் ஐந்தாவது வருடாந்த நிறைவு விழா 13.05.2017 இல் நடைபெற்றபோது தெரிவு செய்யப்பட்ட நிருவாக சபை உறுப்பினர் வருமாறு, ஆலோசகர், எம்.கந்தப்பன், தலைவர் ஏ. காலிதீன், உப தலைவர் பி.தாமோதிரம், பொதுச் செயலாளர் எம்.ஐ. உதுமாலெப்பை, உப செயலாளர் எம்.எஸ். சத்து தம்பி பொருளாளர் டி. மோகன சிங்கம்

நிர்வாக சபை உறுப்பினர்கள், எம்.எஸ்.எம். இக்பால் -கிண்ணியா, ஐ.எம். சம்சுதீன் -சம்மாந்துறை, ரி.எல். இஸ்ஸதீன்- பாலமுனை, ஏ.எல். மஹ்றூப்- நிந்தவூர், யூ.எல். சல்தீன்- சம்மாந்துறை எம்.எம். அஜிவத்-நிந்தவூர்.





சாய்ந்தமருது பிரதேச செயலக நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவரும் பிரதேச செயலாளரு மான ஐ.எம்.ஹனிபா தலைமையில் இடம்பெற்ற வருடாந்த இப்தார் நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படங்கள். (நியாத் ஏ. மஜீத்)

# கல்விக் கல்லூரியிலிருந்து வெளியேறும் பெண் ஆசிரியர்களுக்கு அம்பாறையில் நியமனம் வழங்குக

## அம்பாறை முஸ்லிம் லீக் வாலிப முன்னணி கோரிக்கை

கல்விக்கல்லூரியிலிருந்து பயிற்சியை முடித்து வெளியேறும் அம்பாறை மாவட்ட பெண் ஆசிரியைகளுக்கு வெளி மாவட்டங்களில் நியமனம் வழங்காது அம்பாறை மாவட்டத்திலே நியமனங்களை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அம்பாறை மாவட்ட முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனம் கிழக்கு மாகாண கல்வி அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

சம்மேளனத்தின் மாவட்ட நிறைவேற்றுப்பணிப்பாளர் எம்.ஜே. உதுமா லெப்பை கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் தண்டாயுதபாணியிடம் விடுத்துள்ள வேண்டுகோளில் மேலும் கூறியுள்ளதாவது, கல்விக்கல்லூரிகளிலிருந்து பயிற்சியை முடித்து வெளிவரும் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கும் பொழுது உரிய மாவட்டத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்கு நியமனங்கள் வழங்கப்படுகிறது. இதனால் பெண் ஆசிரியைகள் மிகவும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றார்கள். அத்துடன் சிலர் தொழிலை விட்டும் சென்றுள்ளனர். பொதுவாக மட்டக்களப்பு அட்டாளைச்சேனை ஆகிய கல்விக்கல்லூரிகளிலிருந்து வெளியான ஆசிரியர்களில் பெண்களுக்கு அம்பாறை மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்கு நியமனம் வழங்க ஆவண செய்யுமாறு அம்பாறை மாவட்ட சம்மேளனம் சார்பாக கேட்டுக்கொள்கின்றோம். இதன்பிரதிகள் கிழக்கு முதலமைச்சர் மற்றும் மாகாண கல்விப்பணிப்பாளருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.





ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் அக்கரைப்பற்று மத்திய குழு ஏற்பாடு செய்த இப்தார் நிகழ்வு அண்மையில் மத்திய குழுவின் புதுப்பள்ளியடி காரியாலயத்தில் அமைப்பாளர் எஸ்.எல்.எம்.ஹனிபா மதனி தலைமையில் நடைபெற்றது. இதன் போது சுகாதாரா பிரதி அமைச்சர் பைசால் காசிம் உரையாற்றுவதனையும், கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஆரிப் சம்சுதீன், நகரத் திட்டமிடல் நீர் வழங்கல் அமைச்சின் இணைப்பாளர் மர்ஜூன் மற்றும் ஆதரவாளர்கள் கலந்து கொண்டிருப்பதனையும் படங்களில் காணலாம். (இகாமடுல்ல நிருபர்)

# கிரிக்கெட் சுற்றுப்போட்டி

(ஒலுவில் நிருபர்)

ஒலுவில் அல்-ஹம்றா மகா வித்தியாலய கா.பொ. சாதாரண பழைய மாணவர்கள் ஒன்றிணைந்து ரியல் பிறன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் அனு சரணையில் நோன்புப் பெருநாளையொட்டி மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஒன்று நடாத்தப்படவுள்ளது.

இப்போட்டி ஒலுவில் அல்-ஹம்றா மகாவித்தியாலய அதிபர் அஷ்ஷெய்க் யூ.கே. அப்துர் ரஹீம் தலைமையில் ஜூலை மாதம் 01,02ஆம் திகதிகளில் அல்-ஹம்றா மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் இருபது அணிகளாக பிரிக்கப்பட்டு ஓர் அணியில் எட்டுபேர் கொண்ட ஐந்து ஓவர் மென்பந்து சுற்றுப்போட்டியே இடம்பெறவுள்ளது. இதற்கான ஆரம்பக் கூட்டம் நேற்று பொலிஸ் அதிகாரி எம்.எஸ். ஆசீர் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் 20 அணிகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

**மர்ஹூம் நாகூர் நிகாஹ் சேவை**

உண்மையான உறுதியான மஹர் அடிப் படையில் சிறந்த துணைகளைத் தேடித் தருவதற்கு எம்மை நாடவும். 30 வருட சேவையுடைய தர்ஹ் முகவர் M.A.S. Hameed (p.m), No. 460A, Mosque Lane, Kalmunaikkudy - 09. (077 3249459), N. Rahmathullah (R.I.)T.P:0772810009. WhatsApp: 0779697790 Email - nrahmathullah786@yahoo.com

**குறிப்பு - 14.06.2017 இல் வெளியான கீழேயுள்ள விளம்பரத்தில் விண்ணப்பிக்கும் இறுதித் திகதி தவறுதலாக 06.06.2017 என வெளிவந்திருந்தது. ஆனால், 06.07.2017 என்பதே சரியானது.**

## கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு

## கூட்டுறவு மொத்த விற்பனை நிலைய கட்டுமான மற்றும் பொறியியல் (தனியார்) நிறுவனம்

## கேள்விமனு அறிவித்தல்

1. கூட்டுறவு மொத்த விற்பனை நிலைய கட்டுமான மற்றும் பொறியியல் (தனியார்) நிறுவனத்தின் பெறுகைக்குழு தலைவர், தகுதிவாய்ந்த, தகுதிபெற்ற மனுதாரர்களிடமிருந்து, இலங்கை சதொச நிறுவனத்துக்காக மன்னாரில் அமைக்கப்படவுள்ள லங்கா சதொச விற்பனை நிலையத்தை அமைப்பதற்கு, மூடப்பட்ட கேள்விமனுக்களை கோருகிறார்.

| கேள்விமனு விடயம் | ICTAD தரம் | மொத்த மதிப்பீடு (வரி இல்லாமல்) | கேள்வி பாதுகாப்பு தொகை | மீளளிக்கப்படா கேள்விமனு கட்டணம் |
|---|---|---|---|---|
| மன்னாரில் முன்மொழியப்பட்டுள்ள லங்கா சதொச கட்டடத்தை அமைத்தல் | C4 மற்றும் அதற்கு மேல் | ரூபா. 84 மில்லியன் | ரூபா. 1.4 மில்லியன் | ரூபா. 15,000.00 |

2. தேசிய போட்டி செயல்முறை (NCB) மூலம் கேள்விமனு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஒப்பந்தம் வழங்கப்பட வேண்டுமாயின், மனுதாரர் C.I.D.A இல் பதிவுசெய்யப்பட்டிருக்க வேண்டும். அத்தோடு, தடுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கக் கூடாது.

3. ஆர்வமுள்ள மனுதாரர்கள், மேலதிக விபரங்களை பின்வரும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம். அத்தோடு, அதே இடத்தில் 15 ஜூன் 2017 முதல் 05 ஜூலை 2017 வரையிலும் எந்தவொரு வேலை நாட்களிலும் 9.00 மணி முதல் 15.00 மணி வரை மனு ஆவணங்களை பரிசோதிக்கலாம்.

   பதில் பொது முகாமையாளரின் (நிர்வாக) செயற்றிட்ட பிரிவு அலுவலகம்,
   கூட்டுறவு மொத்த விற்பனை நிலைய கட்டுமான மற்றும் பொறியியல் (தனியார்) நிறுவனம்,

   கூட்டுறவு மொத்த விற்பனை நிலைய செயலாளர் கட்டிடம்,
   07ஆம் மாடி, இலக்கம்: 27, வொக்ஷோல் வீதி,கொழும்பு 02.
   (தொலைபேசி: 011-2307053)

4. ஆர்வமுள்ள மனுதாரர் பின்வரும் முகவரிக்கு, 15 ஜூன் 2017 முதல் 05 ஜூலை 2017 வரையிலும் 9.00 மணி முதல் 15.00 மணி வரையில் எழுத்து மூலமான விண்ணப்பத்தை வழங்குவதன் மூலம், மீளளிக்கப்படா கட்டணமான 15,000 ரூபாவை திட்டமிடப்பட்டிருக்கின்ற வகையில் தனித்தனியாக செலுத்துவதன் மூலம், ஆங்கில மொழியிலான முழுமையான கேள்விமனு ஆவணத்தை வாங்கலாம். கட்டணங்கள் கூட்டுறவு மொத்த விற்பனை நிலைய கட்டுமான மற்றும் பொறியியல் (தனியார்) நிறுவனத்தின் இலங்கை வங்கிக் கணக்கான: 73263950 இல் வைப்பிலிடப்பட வேண்டும்.

   கூட்டுறவு மொத்த விற்பனை நிலைய கட்டுமான மற்றும் பொறியியல் (தனியார் நிறுவனம்,
   கூட்டுறவு மொத்த விற்பனை நிலைய செயலாளர் கட்டிடம்,
   07ஆம் மாடி, இலக்கம்: 27, வொக்ஷோல் வீதி, கொழும்பு 02.

5. கேள்விமனுக்கள் 06 ஜூலை 2017 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில், கூட்டுறவு மொத்த விற்பனை நிலைய கட்டுமான மற்றும் பொறியியல் (தனியார்) நிறுவனத்தின் செயற்றிட்ட பிரிவு அலுவலகத்துக்கு அனுப்பப்பட வேண்டும். கேள்விமனுக்கள் பெறப்படுவது நிறைவடைந்த உடனே மனுதாரரின் அல்லது அவர்கள் தெரிவுசெய்யும் பிரதிநிதிகளுக்கு முன்னால் மனுக்கள் திறக்கப்படும்.

6. கேள்விமனு சமர்ப்பிக்கப்படும் திகதி முடிவடைந்ததிலிருந்து 120 நாட்களுக்கு கேள்விமனு செல்லுபடியாகும்.

7. அனைத்து கேள்விமனுக்களுடனும் கூட்டுறவு மொத்த விற்பனை நிலைய கட்டுமான மற்றும் பொறியியல் (தனியார்) நிறுவன தலைவருக்கு 1.4 மில்லியன் பாதுகாப்பு தொகை இணைக்கப்பட வேண்டும். பாதுகாப்பு தொகை நிபந்தனையற்ற வங்கி உத்தரவாத வடிவத்தில் இருக்க வேண்டும். அத்தோடு, அது கேள்விமனு மூடப்படும் திகதியிலிருந்து 148 நாட்களுக்கு செல்லுபடியாக இருக்க வேண்டும்.


8. கட்டுமான காலப் பகுதி 150 (நூற்றி ஐம்பது) நாட்காட்டி நாட்களாகும்.

9. தாமதித்துக் கிடைக்கும் கேள்விமனுக்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**கூட்டுறவு மொத்த விற்பனை நிலைய கட்டுமான மற்றும் பொறியியல் (தனியார்) நிறுவனம்,**
**கூட்டுறவு மொத்த விற்பனை நிலைய செயலாளர் கட்டிடம்,**
**07ஆம் மாடி, இலக்கம்: 27, வொக்ஷோல் வீதி, கொழும்பு 02.**

# தற்கொலைகளைத் தடுக்க இஸ்லாமிய போதனைகள்

**எம்.எம்.எம். ரம்ஸீன்-கெலிஓயா**



அல்லாஹ்வின் படைப்புக்களில் உயர்ந்த படைப்பு மனிதனாகும். மனிதனைப் படைத்த அல்லாஹ், மனிதன் எவ்வாறு தனது வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற வழிகாட்டலையும் வழங்கியுள்ளான். இந்த வழிகாட்டல் இறுதித்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மூலம் மனித குலத்திற்கு முன்வைக்கப்பட்டது. உலகில் வானம், பூமியில் மனிதனுக்காக பல்வேறு பொருட்களையும் உயிரினங்களையும் படைத்துள்ளமை அல்லாஹ் மனிதன் மீது வைத்துள்ள அன்பைப் புலப்படுத்துகின்றது.

மத்தியில் தற்காலத்தில் தற்கொலை சம்பவங்கள் ஆங்காங்கே இடம்பெற்று வருவதை ஊடகங்கள் பதிவு செய்து வருகின்றன. பெரும்பான்மை மக்கள் மத்தியில் முஸ்லிம் சமூகம் கட்டுக்கோப்பும் தனித்துவமும் கொண்டதாக காணப்படும் நிலையில் முஸ்லிம் சமூகத்திற்குள் நிகழும் இத்தகைய சம்பவங்கள் ஊடகப் பதிவுகளில் பெரிதும் சிலாகித்துப் பேசப்படுவது தவிர்க்க முடியாததாகும்.

இதில் ஒரு முஸ்லிம் இத்தகைய முடிவுக்கு செல்ல முடியாது என்ற யதார்த்தமும் நோக்கி நம்பிக்கை கொண்டோம் என்று கூறியதன் காரணத்தினால் சோதிக்கப்படாமல் விடப்படுவார்கள் என மனிதர்கள் நினைத்து விட்டார்களா? (அல்குர்ஆன்)

ஒரு மனிதனுக்கு (மறுமையில்) நன்மை செய்ய நாடினால் இவ்வுலகிலேயே அவற்றுக்குரிய தண்டனையை முன்கூட்டியே அளித்து விடுவான். (ஆதாரம்: திர்மிதி)

முஸ்லிம் சமூகத்திற்கு இன்றைய காலகட்டம் பெரிதும் உள, நல ஆலோசனை வழிகாட்டல்கள் அவசியப்படும் காலகட்டமாக மாறியுள்ளது. நமக்கு மத்தியில் இத்துறைகளில் கல்வி பயின்றவர்கள் சமூகப்பணியாக இப்பணியை புரிய முன்வர வேண்டும்.

கல்வி அமைச்சு மாணவர்களுக்கான உள, நல ஆலோசனை வழிகாட்டல்களின் தேவையை அறிந்து ஆசிரியர்களை பயிற்றுவித்து பாடசாலைகளில் தனி அலகுகளை நிறுவுமாறு அதிபர்களைக் கேட்டுள்ளது. இதன் அடிப்படையில் இந்த உள, நல ஆலோசனை வழிகாட்டல் அலகுகள் பாடசாலைகளில் இயங்கி வருகின்றன. இவற்றின் மூலம் மாணவர்கள் ஆற்றுப்படுத்தப்பட வேண்டும். குறிப்பாக புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள், அவர்களின் பெற்றோர்கள், சாதாரண தர உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு உள, நல ஆலோசனை வழிகாட்டல்கள் கிடைக்கப் பெறுவதற்கு வழிசெய்யப்பட வேண்டும். இது விடயத்தில் முஸ்லிம் சமூகத்தில் அதிபர்கள், ஆசிரியர்களுக்கு பொறுப்பு உண்டு என்பதை குறிப்பிட்டாக வேண்டும்.

பாடசாலைகளில் மாணவர்களுக்கு மத்தியில் காதல் மலர்வதும் அதனால் மாணவர்களின் கல்வி பாழாகுவதும் தொடர்வதை ஆசிரிய சமூகம் நன்கறியும். இத்தகைய மாணவர்களுக்கு உரிய வழிகாட்டல்களை உள, நல ஆலோசனை வழிகாட்டல் அலகுகள் முன்னெடுக்க வேண்டியது கட்டாயத் தேவையாகும். ஆனால் இதில் கவலைக்குரிய விடயம் என்னவென்றால் இதனை சிலர் மனித உரிமை மீறலாகி விடும் என்ற தோரணையில் மாணவர்களின் பக்கம் நியாயம் கற்பித்து விடுவதாகும்.

ஏனெனில் முஸ்லிம்கள் செறிந்து வாழும் மலையக பகுதியொன்றில் கடந்த க.பொத. சாதாரண தர பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகிய நிலையில் மூன்று முஸ்லிம் மாணவிகள் தற்கொலைக்கு முயற்சித்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும். எனவே, சமூக உள, நல ஆலோசனை வழிகாட்டல்கள் விடயத்தில் முஸ்லிம் சமூகம் பொடுபோக்குத் தனமாக இருப்பது ஆரோக்கியமானதல்ல.

றது.

உலகில் மனிதன் என்ற படைப்பு உயர்வானது. இம்மனிதனின் உயிர், மானம் என்பன பெறுமதிமிக்கது. அல்லாஹ் தஆலா வழங்கிய உயிரை ஒரு மனிதன் தான் விரும்பி மாய்த்துக்கொள்ள முடியாது. இவ்வாறு ஒரு மனிதன் தனது உயிரை தானே மாய்த்துக் கொள்வதை தற்கொலை என்று பொதுவாக குறிப்பிடலாம். இஸ்லாம் தற்கொலையை தடுத்துள்ளது. எனவே ஒரு முஸ்லிம் எக்காரணத்தைவிட்டும் தற்கொலை என்ற தீர்மானத்திற்குச் செல்லமுடியாது.

உலக வாழ்வில் அல்லாஹ்தஆலாவின் ஏற்பாட்டில் (கத்ர்) அமைந்த நியதிகளை முழுமையாக அறிந்து கொள்ளும் மனிதன் இத்தகையதொரு முடிவுக்கு வருவது சாத்தியமில்லை. எனவே ஒவ்வொரு முஸ்லிமும் இஸ்லாம் கூறும் வாழ்வியல் நியதிகளை சரியாக அறிந்து வைத்திருப்பது அவசியமாகும். ஒருவன் வாழ முடியாது என்ற மனநிலையில் தற்கொலையை நாடுகின்றான். ஒரு மனிதன் தனது இறப்பின் மூலம் மற்றவர்களை பழிவாங்க வேண்டும் என்ற உள்ளார்ந்த குணவியல்பு காரணமாகத் தற்கொலை நிகழ்கின்றது. இதன் மூலம் ஒருவன் தான் இறந்து மற்றவனை பழிவாங்க முற்படுகின்றான். இதன் மூலம் நபிகளார் கூறியதற்கிணங்க சுவர்க்கம் ஹராமாக்கப்படுகின்றது. இது வாழ்வின் இலட்சியத்தை தொலைப்பதாக அமையும் துரதிஷ்டவசமான நிலையாகும். இவர்களின் மறுமை வாழ்வும் மிகப் பரிதாபகரமாக அமையும்.

யார் விசத்தை குடித்து தற்கொலை செய்து கொண்டாரோ அவர் நரகத்தில் அதனையே செய்து கொண்டிருப்பார். (ஆதாரம்: புஹாரி)

இலங்கை வாழ் முஸ்லிம்கள் நிற்கின்றது.

எமது நாட்டில் முஸ்லிம் கிராமங்களைப் பொறுத்தவரை சமூகத்தின் உள ஆரோக்கியத்திற்கான பணிகளை முன்னெடுக்க வேண்டிய பொறுப்பு பள்ளிவாசல் நிருவாகிகளை சார்ந்துள்ளது. பள்ளிவாசலைக் நிர்மாணித்தல், அழகுபடுத்துதல், கடமையாற்றும் உலமாக்களுக்கு வேதனம் வழங்குதல், பள்ளிவாசலில் தான் சார்ந்த இயக்கத்தை வளர்த்தல், நோன்புக்கான ஏற்பாடுகளை செய்தல் என்பவற்றுடன் பள்ளிவாசல் நிர்வாகிகளின் பொறுப்பு நிறைவடைவதில்லை என்பதை ஞாபகமூட்டாமல் இருக்க முடியாது. இதன் அடிப்படையில் சமூக உள ஆரோக்கியத்தைக் கட்டியெழுப்பி ஆளுமைமிக்க சமூகத்தை கட்டியெழுப்பும் பள்ளிவாசல்களின் பணிகள் விரிவடைய வேண்டும். இதற்கான வேலைத்திட்டங்கள் ஊர் மட்டத்தில் வகுத்து அமுலாக்கப்பட வேண்டும்.

முஸ்லிம் சமூகம் இன்று உடல் மற்றும் உள ரீதியான ஆரோக்கியத்தின் தேவையை வேண்டி நிற்கின்றது. வடகிழக்கில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள், பொருளாதார நெருக்கடிகளால் துன்பப்படும் குடும்பங்கள், சுனாமியால் உறவுகளை இழந்த குடும்பங்கள் என்று பல குடும்பங்கள் இன்னும் மீளாத்துயரில் சிக்குண்டு வாழ்க்கையை கடத்தும் நிலையை காண முடிகின்றது. இவர்களுக்கான உள நல ஆலோசனை வழிகாட்டல்களை செய்ய முஸ்லிம் சமூகம் முன்வர வேண்டும்.

ஒரு முஸ்லிமுக்கு துன்பங்கள், இன்னல்கள், சோதனைகள் ஏற்படும் போது அதனை ஏற்றுக்கொள்வது அவசியமாகும். இதற்கான உளவியல் அறிவுரைகளை அல்குர்ஆனும் நபிமொழிகளும் முன்வைக்கின்றன.

# றமழான் வேண்டிநிற்கும் மனிதப் புனிதர்கள்

**- எம்.டி.எம்.உவைஸ்- சீனங்கோட்டை**



ஆதில் அலி சப்ரி

புனிதம் பொருந்திய ரமழான் மாதத்தில் இருக்கும் நாம் இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் ஒன்றான நோன்பை நோற்கிறோம். மகத்துவமிக்க இம்மாதம் ஆண்டுதோறும் வந்துபோய்க்கொண்டுதான் இருக்கின்றது. நாமும் நோன்பு நோற்கத்தான் செய்கிறோம். ஆனால் எம்மத்தியில் ஏதும் நல்ல மாற்றங்கள் ஏற்படுகின்றனவா? என்பதை சிந்திக்க கடமைப்பட்டுள்ளோம்.

புனித மாதம் வந்ததும் தொழுகிறோம், நோன்பு நோற்கிறோம், திருக்குர்ஆனை ஓதுகிறோம், ஏழைகளைப் பற்றி சிந்திக்கிறோம், முடிந்தால் தான தர்மங்களும் செய்கிறோம். புனித ரமழான் விடைபெற்றுச் சென்றதும் மீண்டும் பழைய கதைதான். தொழுகையில்லை, அல்குர்ஆனை தொடுவதுமில்லை. ஏழைகள் பற்றிய சிந்தனையே இல்லை. கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்ற நிலை ஏற்பட்டுவிடுகிறது.

''நம்பிக்கையாளர்களே! நீங்கள் விசுவாசங்கொண்டோராக (இறைவனுக்கு பயந்து, அவன் கட்டளையை பின்பற்றுவோராயின், அவனது சட்டத்திற்கு மாறு செய்யாதவர்களாயின்) ஆக இருக்க வேண்டும் என்பதற்காக, உங்களுக்கு முன்பிருந்தவர்களுக்கு கடமையாக்கப்பட்டது போன்றே, உங்கள் மீதும் நோன்பு கடமையாக்கப்பட்டுள்ளது'' என அல்லாஹ் புனித மறையில் வலியுறுத்துகின்றான்.

எமது வாழ்வில் எத்தனையோ நோன்புகளை சந்தித்துவிட்டோம். நாம் முத்தகீ ஆகிவிட்டோமா? இல்லை. காரணம், நோன்பின் உண்மையான நோக்கத்தை புரிந்துகொண்டு செயற்படவில்லை. எல்லோரும் நோன்பிருக்கிறார்கள், தொழுகிறார்கள், ஓதுகிறார்கள் என்பதற்காக நாமும் அப்படியே செய்கிறோம். அவ்வளவுதான். முஸ்லிம்கள் அல்லாஹ்வுக்கு அடிபணிந்து, அவனது கட்டளைகளை பின்பற்றி, அவனுக்கு மாறுசெய்யாத நிலைக்கு ஆளாகவேண்டும் என்பதற்காக நோன்பு அருளப்பட்டது. நோன்பின் இந்த நோக்கம் நிறைவேறினால் முஸ்லிம்கள் முழுமையடைவார்கள். சாந்தி, சமாதானம், சமத்துவம், சகோதரத்துவம் மலரும். பிரச்சினைகள் தீரும். வறுமை ஒழியும்.

நோன்பிருக்கும் ஒரு முஸ்லிம் தீயதை நினைக்கவோ, செய்யவோ முடியாது. நல்லதை நினைத்து நல்லதை செய்ய முற்பட்டால் பிரிவு, பிளவு, பேதமேது.

அண்மைக் காலத்தில் இலங்கை முஸ்லிம்கள் பெற்ற அனுபவங்கள் பற்பல. ஆயுத முனையில் சில கோஷ்டிகள் ஆட்டிப்படைத்தன. வர்த்தக நிலையங்கள் தீக்கிரையாகின. வீட்டை விட்டு வெளியேற முடியாத பயம் நிலவியது. இவை, உலகத்தில் ஏதும் நிலையானதல்ல என்பதை நடந்துமுடிந்த சம்பவங்கள் உறுதிசெய்தன. இப்படியிருக்க முஸ்லிம்கள் இனியும் உலக வாழ்வை மட்டும் நம்பியிருக்கமுடியுமா?

எனவே, பணம் படைத்தவர்கள் இனியாவது உலக வாழ்க்கைக்காக சேர்த்து வைக்காது மறுமை வாழ்வுக்காக சேமிக்கவேண்டும். இறைவனின் கட்டளைப்படி ஏழை எளியோர்க்கு கரம்கொடுக்க வேண்டும்.

தொழுகை, நோன்பு, ஸக்காத், ஹஜ் ஆகிய கடமைகளை உரிய முறையில் நிறைவேற்றி, உண்மை முஸ்லிம்களாக வாழ்ந்து, மற்றவர்களுக்கு உதவி, இஸ்லாத்தை வாழ்வில் எடுத்தொழுகவேண்டும்.

புனித ரமழான் வந்தது, போனது என்ற நிலை இனியும் நீடிக்கக்கூடாது. ரமழான் எனும் பயிற்சிப் பாசறை எம்மில் மாற்றங்களை ஏற்படுத்தவேண்டும்.





- கியாஸ் ஏ. புஹாரி

# ஜூன் 30 முதல் வட்ஸ்அப் செயற்படாது




தினசரி அனைவராலும் பயன்படுத்தக்கூடிய சமூக வலைதளமான வாட்ஸ் அப் ஜூன் 30ஆம் திகதி முதல் குறிப்பிட்ட சில மொபைல் போன்களில் செயற்படாது என அந்நிறுவனம் தெரிவித்துள்ளது. பழைய மொடல் மொபைல் போன்கள் மற்றும் குறிப்பிட்ட சில ஆண்டிராய்டு இயங்குதளம் கொண்ட மொபைல் போன்கள் போன்றவற்றில் வாட்ஸ் அப் செயல்படாது.

அந்த மொபைல் போனின் மொடல்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:-


- பிளாக் பெர்ரி 10
- நோக்கியா S40
- நோக்கியா Symbian S60
- அண்ட்ராய்ட் 2.1 மற்றும்
- அண்ட்ராய்ட் 2.2
- விண்டோஸ் 7.1 மொபைல்
- ஐபோன் 3 3GS / iOS 6

மேலே குறிப்பிட்டுள்ள மாடல்கள் கொண்ட மொபைல் போன்களில் வாட்ஸ் அப் சேவை வழங்க முடியாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது பாதுகாப்பை அதிகரிக்க வாட்ஸ் அப் புதிய அப்டேட்டுடன் செயல்பட்டு வருவதால், பழைய இயங்குதளம் கொண்ட மொபைல் போன்களில் வாட்ஸ் அப் சேவை அளிக்க முடியாது என காரணம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பி.எம்.டபள்யூ வின் எலெக்ட்ரிக் ஸ்கூட்டர்

புகழ்பெற்ற பி.எம். டபள்யூ மோட்டார் நிறுவனம் தனது எலெக்ட்ரிக் ஸ்கூட்டரை இந்த ஆண்டு அறிமுகம் செய்யவுள்ளது. எதிர்காலத்தில் ஏற்படும் எரிபொருள் பற்றாக்குறையை சமாளிக்க பி.எம்.டபள்யூ நிறுவனம் இந்த ஆண்டில் மின்சாரத்தால் இயங்கும் ஸ்கூட்டரை அறிமுகப்படுத்த உள்ளதாக அறிவித்துள்ளது. பி.எம். டபள்யூ மோட்டார் நிறுவனம் கடந்த ஆண்டு சூப்பர் சார்ஜ்டு ஆர்5, கன்சப்ட் 90 போன்ற பெயர்களில் பைக்குகளை அறிமுகப்படுத்தியது. இதற்கு நல்ல வரவேற்பு கிடைத்தது.

இதை பின்பற்றி பி.எம்.டபள்யூ நிறுவனம் இந்த ஆண்டு சுற்றுச்சூழலுக்கு கேடு விளைவிக்காத வகையில் மின் சாரத்தால் இயங்கும் ஸ்கூட்டரை வெளியிடுகிறது. முன்னதாக இத்தாலியில் பழங்கால கார்களுக்கான கண்காட்சி ஒன்றில் நடைபெற்றது. அப்போது பி.எம்.டபள்யூ நிறுவனம் இந்த மின்சார ஸ்கூட்டரை அறிமுகம் செய்தது.



## ஸ்கூட்டரின் சிறப்பம்சம்

இதில் சிராமிக் எல்.இ.சி விளக்கு முகப்பில் அமைக்கப்படுகிறது. ஆங்கில ''சி'' எழுத்து வடிவத்திலான விளக்குகள் பின்புறத்தில் அமைக்கப்படுகிறது. இதனுடைய இருக்கைகளில் பயணிகளின் எண்ணிக்கையை பொறுத்து மாற்றக்கூடிய சிறப்பம்சம் உள்ளது. தொடுதிரை வசதியுடன் கூடிய இன்ஃபோடெய்ன்மெண்ட் சிஸ்டம் இதில் உள்ளது. டிஸ்பிளேயில் வண்டியின் வேகம், போகும் பாதை மற்றும் ஹேண்டில் பார்களை பயன்படுத்தும் முறை ஆகியவை உடனே திரையில் தோன்றும். மேலும் இந்த ஸ்கூட்டரின் விற்பனை குறித்த விவரங்களை விரைவில் பி.எம்.டபள்யூ நிறுவனம் வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# சில பழங்களின் தூய தமிழ் சொல் !

தமிழில் தவறாக பயன்படுத்தப்படும் சில பழங்களின் தூய தமிழ் சொற்கள் இங்கு தொகுக்கப்பட்டுள்ளன.

**அவை:**

அப்பிள் (Apple) : குமளி, அரத்தி
அன்னாசி (Pineapple) : செந்தாழை
திராட்சை (Grapes) : கொடி முந்திரி
ஆரஞ்சு / ஓரேஞ் (Orange) : கிச்சிலி
துரியான் / டூரியான் (Durian): முள்நாறி
வாட்டர்மலோன் / வோட்டர்மலூன் (Watermelon) : குமட்டிப்பழம்
ஸ்ரோபரி / ஸ்ராபரி (Strawberry) : செம்புற்றுப்பழம்



# 20 ஆண்டுகளில் ஏலியன்களை கண்டுபிடித்தே தீருவோம்

**விஞ்ஞானிகள் தெரிவிப்பு**



வேற்று கிரகவாசிகள் இருப்பதாகவும், அவர்கள் அவ்வப்போது பூமிக்கு பறக்கும் தட்டுக்கள் மூலம் வந்து செல்வதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால் இதுவரை எந்த ஆதாரமும் சிக்கவில்லை.

இந்நிலையில் 20 ஆண்டுகளில் ஏலியன்களை கண்டுபிடித்தே தீருவோம் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். அமெரிக்காவின் அரிசோனா பல்கலைக்கழக நிபுணர்கள் இதுகுறித்து ஆய்வு நடத்தி வருகின்றனர்.

# 10 ஆபத்தான காரணிகளை தடுத்துக் கொள்ளுங்கள்

இன்று மனித உயிர்களை நீக்கு கின்ற முக்கியபத்துக்காரணிகள் இனம் காணப்பட்டுள்ளது. இவற்றை முறியடிப்போமாயின் மனித ஆரோக்கியம் நீடிக்கும். இந்தப்பத்து விளைவுகளை அறிந்து கொள்ள ஆவ லாக உள்ளீர்களா?

1. போசணைக்குறைபாடு 2. உயர் இரத்த அழுத்தம் 03. தூய்மையற்ற நீர் 4. கொலஸ்ரோல் மட்ட அதிகரிப்பு 05. அடுப்பு மற்றும் வாகனப்புகை எரித்தல் 06. இரும்புச்சத்து பற்றாக் குறை 07. கழிவு அகற்றல் 08. உடல் நிறை அதிகரிப்பு 09. புகைத்தலும் மது பாவனையும் 10. தூய்மையற்ற பாதுகாப்பற்ற பாலுறவு, உலகில் 50 சதவீதம் மரணங்களுக்கு மேற்கூறிய காரணிகளே காரணமாகின்றன.

முதலில் போசனைக்குறைபாட்டை எடுப்பின் தாய் சேய் மரணங்களுக்கு முக்கிய காரணியாக போசணையின் அளவு குறைவாக இருப்பதே காரணமா கின்றது, கலோரிப்பெறுமானம் புரதம், விற்றமின்கள், கனியுப்புக்களின் பற்றாக் குறைகள் உலகில் அதிகளவில் காணப் படுகிறன்றது. வறுமையான நாடுகளில் தாய்ப்பால் ஊட்டுவதுடன் மரக்கறி பச்சை இலைகளை வேளை உண வுகளில் சேர்த்துக்கொள்வர். சுற்றுப் புறமும் மலசல கூடச்சுத்தமும் வயிற் றோட்டமும் புழுநோய்கள் நிமோனியா என்பவற்றால் பிள்ளைகள் பாதிப்புறா மல் தடுக்கக் கூடியதாகவிருக்கும்.

அடுத்து உயர் இரத்த அழுத்தம் கார ணமாக 49 சத வீதம் மரணங்கள் உல கில் ஏற்படுகின்றன. உயர் அழுத்தம் காரணமாக பாரிசவாதம் இதயநோய் களும், உருவாகி பாதிப்பை ஏற்படுத் துகின்றன. உயர் இரத்த அழுத்தமும் அதிக கொலஸ்ரோல் மட்டமும் சேர்ந்து பாரிய விபரீதங்களைத் தற்காலத்தில் ஏற்படுத்துகின்றன.

உயர் இரத்த அழுத்தம் எனப்படுவது நாடிக்குழாய்களில் ஏற்படுத்தப்படும் அமுக்கமாகும். இவ் அழுத்தம் அதிகரிப்படும் போது மூளை, இதயம், சிறுநீரகம், போன்ற முக்கிய அங்கங்க ளுக்குக் குருதி செலுத்தப்படும் குருதிக் குழாய்களில் பாதிப்பு ஏற்படும்.

குருதியில் கொழுப்பு வகை காணப்ப டுவதனால் இவை குருதிக்குழாய்களின் உட் சுவர்களில் படியலாம் அதுவே அதி குளோரோசிஸ் என்றும் நிலைக்கும் காரணமாகின்றது. இந்நிலைமையுள் ளோர். கொழுப்புணவுகளைத் தவிர்க்க வேண்டியது கட்டாயமாகும். அவர்கள் அதிகளவு மரக்கறி வகைகளையும் பழவகைகளையும் அதிகமாக உண்ணல் வேண்டும். இவ்வாறானவர்கள் புகைத் தலை முற்றாகக் கைவிட்டு தேகப்பயிற் சியில் ஈடுபடுவது அத்தியவசியமாகும்.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுக ளில் வயிற்றோட்டம் உடல் நீர் குறைவ டைதல் புழுநோய்கள், செங்கமாரிக்காய்ச்சல் போன்ற நோய் களால் அவதியுறுகின்றனர். சுத்தமான நீரைப்பாவனைக்குள்ளாக்குதல் சுகா தார வழிகளைப் பின்பற்றுதல் சரியான வழிகளில் கழிவகற்றல் என்பன முக்கி யமாகும். நீரை இயலுமானவரை சுத்தப் படுத்தி குடிநீரை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டியது அத்தியவசியமா னதாகும். அவர்கள் அதிகளவு மரக்கறி வகைகளையும் பழவகைகளையும் அதிகமாக உட்கொள்ள வேண்டும்.

இவ்வாறானவர்கள் புகைத்தலை முற்றாகக் கைவிட்டு தேகப்பயிற்சியில் ஈடுபடுவது அத்தியாவசியமாகும். சுத்தமாக நீரை குடித்தல், சுகாதார வழிமுறைகளை பின்பற்றல் முக்கியமாகும்.

(தொடரும்)

**ஹஜிமா ஏ.ஆர். ஜெஸிமா**
(Rtd.Chief Project Officer Science)
(N.I.E. Maharagama)

## நலம் வாழ

செ.தர்ஷிகா

# யோகா செய்வதன் பயன்கள்

நாம் உடலளவிலும், மனதளவிலும் ஒருங்கிணைக் கப்பட்ட ஒரு மனிதராக இருப்பதால் இருபத்துநான்கு மணி நேரத்தில் நிறைய வேலைகளை நம்மால் செய்ய முடியும். இவற்றை கையாள் வதற்கான திறமை உங்களுக்கு இல்லாவிட்டால் உங்கள் செயல்களை நீங்கள் குறைத் துக் கொள்ள வேண்டும் அல்லது உங்களுடைய திற மையை அதிகரித்துக் கொள்ள முடியுமானால் அதை நீங்கள் செய்ய வேண்டும்.

யோகப் பயிற்சியை தினம் 25 நிமிடங்கள் நீங்கள் செய் தால் போதும். ஒருநாளில் பெருமளவு நேரத்தை நீங்கள் மிச்சப்படுத்துவீர்கள். ஏனென் றால் உங்களுடைய தூங்கு கிற நேரம் மிகவும் குறைந்து விடும்.



உதாரண மாக ஒருநா ளைக்கு 8 மணி நேரம் தூங் கு கிறீர்கள் என்று வைத்துக் கொள்ளலாம். அப்படியா னால் உங்கள் வாழ்க்கையில் மூன்றில் ஒருபகுதி நேரத்தை தூங்கியே கழிக்கிறீர்கள், உங் களுடைய உடலும், மனமும் மிகவும் சக்தி ஓட்டத்துடன் சுறுசுறுப்பாக இயங்குமா னால் உங்களுடைய தூங்கும் நேரம் இயல்பாகவே குறைந் துவிடும். அப்படியானால் ஒருநாளில் 3லிருந்து 4 மணி நேரங்களை சேமிப்பது என்பது மிகப்பெரிய விஷ யமாகும்.

அது மட்டுமல்ல. உங்க ளுடைய உடலும், மனமும் மிகவும் ஒருங்கிணைந்து செயல்படுகிறது. இந்த எளிய பயிற்சியை மேற்கொண்ட பலரது அனுபவம் இது. இந்த பயிற்சியை 6லிருந்து 8 வாரங்கள் தொடர்ந்து செய்த ஒருசிலர் தங்களது அனுப வங்களைப் பகிர்ந்திருக்கிறார் கள். அவர்கள் தங்கள் அலு வலகத்தில் அல்லது வேறு பணியில் இருக்கும்போது 8 மணி நேரத்தில் மற்றவர்கள் செய்யக்கூடிய செயலை மிக சாதாரணமாக 3இலிருந்து 4 மணி நேரத்தில் செய்து முடிக் கிறார்கள்.

ஏனென்றால் ஒரு நாள் முழுவதும் உங்களை கவனித்துப் பார்த்தால், அதாவது நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர் கள் என்பதை உங்களுக் குத் தெரியாமலேயே ஒரு வீடியோ படமாக எடுத்தால், ஒருநாளில் தேவை யில்லாமல் எவ்வளவு அசை வுகளைச் செய்கிறீர்கள், தேவையில்லாமல் எவ்வளவு வார்த்தைகளை நீங்கள் உப யோகிக்கிறீர்கள், தேவையில் லாமல் எவ்வளவு செயல்க ளில் நீங்கள் ஈடுபடுகிறீர்கள் என்பதை நீங்கள் கவனிக்க முடியும்.

ஒரு நாளைக்கு இப்படி செய்து நீங்கள் பரிசோதித்துப் பார்க்க வேண்டும். தேவை யில்லாமல் எவ்வளவு செயல்களைச் செய்கிறீர்கள் என்பதை நீங்கள் அப்போது கண்டு கொள்வீர்கள். உங்க ளுடைய மனம் முற்றிலும் ஒருங்கிணைக்கப்பட்டதாக ஆகிவிட்டால் தேவையில் லாமல் பேசுகின்ற வார்த் தைகளும், தேவையில்லாத செயல்களும், தேவையில்லாத விஷயங்களும் தானாகவே மறைந்துவிடும். அவை விலகி விட்டாலே உங்களுக்கு பெரு மளவு நேரம் மிச்சப்படும். உங்களுக்கு ஒரு நாளில் இருபத்திநான்கு மணி நேரம் இருக்கிறது. இந்த இருபத்தி நான்கு மணி நேரத்தை இரு பத்திஆறு மணிநேரமாக நாம் ஆக்கத் தேவையில்லை. இந்த இருபத்திநான்கு மணி நேரமே போதும். இருபத்திநான்கு மணிநேரத்தில் நிறைய செயல் களைச் செய்ய முடியும்.

எனவே ஒருநாளில் இருபது நிமிடங்களை உங்களுக்கென ஒதுக்குங்கள். முடிந்தால் காலை 5.30 மணிக்கு எழுந் திருங்கள். சட்டென உங்களு டைய வாழ்க்கையின் தரம் முற்றிலும் வித்தியாசமாக இருப்பதைக் காண்பீர்கள். 'எனக்கு நேரமில்லை என்று தொடர்ந்து விவாதம் செய்து கொண்டிருக்க வேண்டாம். உங்களுக்கான நேரத்தை ஒதுக்கிப் பாருங்கள். இது மிகப் பெரிய வித்தியாசத்தை தரும்.

# சர்க்கரை நோயாளிகளுக்கு சர்க்கரை கிழங்கா?



சர்க்கரை வள்ளிக்கிழங்கு எனப் பெயரிலேயே இனிப்பு இருப்பதால், சர்க்கரை நோயாளிகள் இதனைச் சாப் பிடக்கூடாது என்பதே பலரது கருத்தாக இருக்கிறது. அது தவறு. 'உண்மையில் இதற்கு மாறான குணங்களைக் கொண் டது. இதற்கு சர்க்கரைநோயை வராமல் தடுக்கும் குணமும் உண்டு.

வேர்க் கிழங்கு வகையைச் சேர்ந்தது இந்தத் தாவரம். இனிப்புச்சுவை மிகுந்த கிழங்கு என்பதால், 'சர்க்கரை வள்ளிக்கிழங்கு எனப்படுகிறது. சர்க்க ரைவள்ளிக்கிழங்கின் தாவரவியல் பெயர் இபோமோயபட்டடாஸ்' (Ipomoea batatas).

சர்க்கரைநோயை எப்படித் தடுக்கும்?

இன்சுலின் என்பது கணையத்தில் சுரக்கும் ஒரு ஹார்மோன். இந்த ஹார் மோன்தான் ரத்தத்திலுள்ள சர்க்கரை யின் அளவைச் சீராக வைத்திருக்கும் பணியைச் செய்கிறது. இன்சுலின் சுரப் பில் குறைபாடு அல்லது சுரந்த இன்சுலி னில் போதிய ஆற்றல் இல்லாதபோது, இரத்தத்திலுள்ள சர்க்கரையின் அளவு அதிகரித்து, சர்க்கரைநோயை ஏற்படுத்தி விடும். ஆகவே, சர்க்கரைநோய் ஏற்ப டாமலிருக்க வேண்டுமானால், இன்சு லினின் அளவைச் சீராகப் பராமரிக்க வேண்டும்.

சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்தும் சர்க்கரைவள்ளிக்கிழங்கில் குறைந்தள வில் கிளைசெமிக் இன்டெக்ஸ் (Lower Glycemic Index) இருப்பதால், சர்க்கரைநோய் உள்ளவர்களும் இதைச் சாப்பிடலாம். அதாவது, இதைச் ச ாப்பிடுகிறவர்களுக்கு உடலில் இன்சு லின் சீராகச் சுரக்கவும், இரத்தத்தில் ச ர்க்கரையின் அளவைச் சீராக வைத்திருக் கவும் இந்தக் கிழங்கு உதவும். மேலும், 'இதில் உள்ள நார்ச்சத்து உணவிலுள்ள குளுகோஸை இரத்தத்தில் சேர்க்கும் வேகத்தை வெகுவாகக் குறைக்கும். இது இரத்தத்தில் சர்க்கரையின் அளவை மெதுவாகவே உயர்த்தும்' என்றும் சமீபத்திய ஆராய்ச் சிகள் கூறுகின்றன. இது இரைப்பையின் ஆரோக்கியத்துக்கு உகந்தது என்பதையும் இதன் மூலம் அறிந்துகொள்ளலாம்.

மற்றக் கிழங்கு வகைகளைவிட இதில் அதிகளவில் பீட்டா கரோட்டின் மூலக்கூ றுகள் உள்ளன. இவை நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கக் கூடியவை.ச ர்க்கரைவள்ளிக்கிழங்கில் குறைந்தளவு கொழுப்புச்சத்தும், அதிகளவு நார்ச் சத்தும் உள்ளன. இரும்பு, கால்சியம், மக்னீசியம், மாங்கனீஸ், பொட்டாசியம் போன்ற உடலுக்கு அவசியமான தாது உப்புகளும், ஆன்டி-ஆக்ஸிடன்டுகளும் உள்ளன.

## நீத்தார் பெருமை

# கல்விப்பணி புரிந்தோரை காலம் அழிக்காது

■ எம்.எஸ்.எம். ஸாகிர்

"கற்பவனாய் இரு கற்பிப்பவனாய் இரு கல்விக்கு உதவுபவனாய் இரு" என்ற வச னத்திற்கு ஏற்ப வாழ்ந்த ஓய்வு பெற்ற அதி பரும் முன்னைநாள் குவாசி நீதிபதியுமாகிய எஸ். ஆதம்பாவா எம்மை விட்டும் மறைந்து இன்றுடன் ஒன்பது வருடங்களாகின்றன.



ஆர்ப்பரிக்கும் கடலும் பச்சைப் பசேலென்ற வயல் வெளியும் சூழ்ந்திருக்கும் தென் கிழக்கின் முக வெற்றிலையாம் கல்முனையில் கல்முனைக்கு டிக்கிராமத்தில் மீராலெப்பை சிக்கந்தருக்கும் காசிம் பாவா அவ்வாஉம்மாவிற்கும் தலை மகனாக 1930. 08.07ஆம் திகதியன்று பிறந்தார்.

தனது ஆரம்பக்கல்வியை இன்று கமு/ அல்-அஸ்ஹர் வித்தியாலயம் என்று அழைக் கப்படுகின்ற கல்முனைக்குடி அரசினர் ஆண்கள் பாடசாலையில் கற்றார். 1943ஆம் ஆண்டு இலங்கையின் வரலாற் றில் முதற்தடவையாக நடைபெற்ற 5ஆம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சையில் சி த்தியடைந்து காத்தான்குடி மத்திய கல்லூரி யில் கல்வியைத் தொடர்ந்தார். இவருடன் அதேபாடசாலையிலிருந்து முன்னாள் வர்த் தக வாணிப அமைச்சர் சட்டத்தரணி ஏ.ஆர். மன்சூரும் புலமைப்பரிசில் பரீட்சையில் சி த்தியடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

கல்விப் பொதுத்தராதர பரீட்சையில் சி த்தியடைந்ததன் பின்னர் தனது சொந்தச் செலவில் அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் இருவருட ஆசிரியர் பயிற்சியை முடித்துக் கொண்டார். அதன் பின்னர் முதல் ஆசிரிய நியமனம் 1.06.1954 இல் ஹம்பாந்தோட்டை முஸ்லிம் வித்தி யாலயத்திற்குக் கிடைத்தது. அப்பாடசாலை இன்று ஹம்பாந்தோட்டை ஸாஹிறா கல்லூரி என்று அழைக்கப்படுகின்றது. எஸ். ஆதம்பாவா அதிப ரிடம் கல்வி கற்ற பலர் இன்று உயர் பதவிகளை வகிக்கின்றனர்.

அதனைத் தொடர்ந்து சாய்ந்தமருது ஆண்கள் வித்தியாலயம் கல்மு னைக்குடி ஆண்கள் வித்தியாலயம் மற்றும் ஓட்டமாவடி முஸ்லிம் மஹா வித்தியாலயம் போன்றவற்றிலும் ஆசிரிய ராகக் கடமையாற்றினார். மீண்டும் 01.01.1962 இல் தான் கற்ற பாடசாலையான கல்மு னைக்குடி ஆண்கள் வித்தியாலயத்திற்கு மீள நியமனம் கிடைத்தும். அன்றிருந்த அரசியல்வாதிகள் மூலம் இப்பாடசா லையை அபிவிருத்தி செய்தார்.

தனது சிறப்பான சேவையின் காரண மாக 01.01.1963ஆம் ஆண்டு அதிப ராகப் பதவி உயர்வு பெற்று அ/ கஹட் டகஸ்திகிலிய முஸ்லிம் வித்தியாலயத்தில் அதிபராகப் பதவியேற்றார். அக்காலத்தில் சிங்களப்பாடசாலையின் ஒரு பகுதியாக விளங்கிய அப்பாடசாலையை தனிப்பாட சாலையாக அமைத்து ஆறரை வருடங்கள் கடமையாற்றி அப்பாடசாலையை மஹா வித்தியாலயமாக தரமுயர்த்தினார். இதனை அப்பகுதி மக்கள் இன்றும் நினைவு கூருகின்றனர். பின்பு 01.10.1968 இல் கல்முனை அல்- மிஸ்பாஹ் வித்தியாலயத் தில் கடமையேற்று அப்பாடசாலையின் அபிவிருத்திக்காக பாடுபட்டார். இவரது அதிபர் சேவையின் அதிகமான காலத்தை அன்றைய கடற்கரை பாடசாலை என்ற ழைக்கப்பட்ட இன்றைய அல்- பஹ்ரியா மஹா வித்தியாலயம் பெற்றுக் கொண்டது. 01.11.1974 இல் இப்பாடசாலையின் அதிபராகக் கடமையேற்று தான் ஓய்வு பெறும் வரை சுமார் பதினேழு ஆண்டுகள் இப்பாடசாலையின் அதிபராகக் கடமை யாற்றினார். இப்பாடசாலை பெயர் மாற்றம் பெற்றதோடு, பாடசாலையின் பௌதீக கல்வி வளர்ச்சியில் அதீத அக்கரை காட்டி னார். தனது பாடசாலை நண்பனான அன் றிருந்த மக்கள் பிரதிநிதி ஏ.ஆர். மன்சூர் மூலம் பாடசாலையின் கட்டடத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டன. பாடசாலை கல்வி நிலையிலும் வளர்ச்சி கண்டது. இவரது சே வை காரணமாக 61 வயது மட்டும் சேவை நீடிப்பு வழங்கப்பட்டது. அன்றைய காலத் தில் இலங்கையில் இத்தகைய சேவை நீ டிப்பு வழங்கப்பட்டவர்கள் இருவரே இருந் தனர். ஒருவர் எஸ். ஆதம்பாவா மற்றைய வர் முன்னைநாள் ம. எஸ். சேனநாயக்க கல்லூரி அதிபர். ஆர். ஐ.ரி. அலஸ்.

தான் கல்விச் சேவை புரிந்து கொண் டிருந்தபோது சமூக சேவையிலும் அதீத ஈடுபாடு காட்டுபவராக இருந்து வந்தார். கல்முனைக் குடி ஜும்ஆப் பள்ளிவாசலின் நம்பிக்கையாளராக 1975ஆம் ஆண்டு தொடக்கம் 1989ம் ஆண்டு வரை கடமை புரிந்தார். இவர் நம்பிக்கையாளராக இருந்த காலத்திலேயே பள்ளிவாசல் புனரமைப்புப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அகில இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினராகவும் கல்முனை மாவட்டக் கிளைத்தலைவரா கவும் கடமையாற்றியவர்.

இவ்வாறு பல பணிகளில் ஈடுபட்ட இவர், 1996ஆம் ஆண்டு தொடக்கம் 2004ம் ஆண்டு வரையான காலப்பகுதி யில் முழுக்கரைவாகுப்பிரதேசத்திற்குமான குவாசி நீதிபதியாகப் பணியாற்றினார். சமாதான நீதவானான ஆதம்பாவா தான் வாழ்ந்த சமூகத்தின் முன்னேற்றத்திற் காக பல்வேறு வழிகளிலும் முன்னின்று உழைத்தார். கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளராக மரணிக்கும் வரை சுமார் 15 ஆண்டுகள் கடமையாற்றினார்.

எழுத்து ஆக்கத் துறையில் ஈடுபாடு காட்டிய அவர், நாடாரிலக்கியத்தில் பாண் டித்தியம் பெற்றவர். இவருடைய ஆக்கங் கள் பல புத்தகங்களிலும் பத்திரிகைகளிலும் வெளிவந்துள்ளன.

ஹாஜி உஸ்மான் சாஹிபுடன் இணைந்து கல்முனைக்குடி ஜும்ஆப்பள்ளிவாசல் வரலாறு மற்றும் வரலாற்று பேழை ஆகிய நூல்களை இணையாசிரியராக இருந்து வெளியிட்டார்.

என்றும் கோட் அணிந்தவராக புன்முறுவல் பூத்த முகத்துடன் தன்னை நாடி வருவோருக்கு சேவை செய்பவராகவே இருந்து வந்தார்.

கல்முனைக்குடியின் முதல் பயிற்றப்பட்ட பெண் ஆசிரியையான ஓய்வு பெற்ற அதிபர் ஆமினா ஆதம்பாவாவை தனது வாழ்க்கைத் துணையாக கரம் பிடித்த எஸ். ஆதம்பாவா வுக்கு இரு பெண் பிள்ளைகள். சிரேஷ்ட புதல்வி ஆத்திகா சேகு முகம்மட் கல்முனை அல்- மிஸ்பாஹ் வித்தியாலய ஆசிரியை, இவரது கணவர் எம். எல். முகம்மட் கல் முனை ஸாஹிறா தேசிய பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றுகின்றார். கனிஷ்ட புதல்வி சிரேஷ்ட சட்டத்தரணி ஆரிகா காரி யப்பர் இவரது கணவர் சிரேஷ்ட சட்டத் தரணி முகம்மட் ஷாரிக் காரியப்பர். ஏழு சகோதர சகோதரிகளுடன் பிறந்த அதிபர் எஸ். ஆதம்பாவாவின் மூத்த சகோதரியின் மகனே விளையாட்டுத்துறைப் பிரதியமைச் சர் சட்டத்தரணி. எச்.எம்.எம். ஹரீஸ் ஆவார்.

தான் வாழும் போதே பிறருக்கு உதவு வதையும் வழிகாட்டுவதையும் வழக்கமா கக் கொண்டிருந்தவர். இப்பிரதேசத்தில் இன்று ஆசிரியர்களாக இருப்பவர்கள் அத் தொழிலைப் பெற்றுக் கொள்ள உந்து சக்தி யாக இருந்தவர்.

தனது ஓய்வு நிலையில் மார்க்கப் பணிக ளில் அதிகம் ஈடுபாடு கொண்டிருந்தவர் தனது மனம் போன்று தனது உடன்பிறப்பு கள் பிள்ளைகள் கற்றுத்தவர் சூழ்ந்திருக்க றமழான் மாதம் 26ஆம் நாளன்று 2008 ஆம் ஆண்டு செப்டம்பர் 27ஆம் திகதி தனது 78ஆம் வயதில் இறைவடி சேர்ந்தார்.

அன்னாருக்கு எல்லாம் வல்ல அல்லாஹ் ஜென்னதுல் பிர்தவ்ஸை வழங்குவானாக!

# கிராம அதிகாரிகளின் சங்கத்தலைவர்



கின்னியாவை பிறப்பிடமாக கொண்ட ஏ. காஸ்தீன் என்பவர் ஓய்வு பெற்ற கிராம நிலதாரிகள் நலன்புரிச்சங்கத்தின் தலைவராக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

இவர் கின்னியா பல நோக்க கூட்டுறவு சங்க சமாசத்தின் முன்னாள் தலைவராகவும் கின்னியா பட்டின சபையின் முன்னாள் தவிசாளராகவும் இருந்த பல சமூக சேவைகளை செய்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஓய்வு பெற்ற கிராம நிலதாரிகள் நலன் புரிச்சங்கத்தின் 5 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்ற போது தெரிவு செய்யப்பட்டார். சுமார் 25 வருடங்கள் கிராம நிலதாரியாக கடமையாற்றியுள்ளார்.

# குப்பைகளை வீசிய நால்வருக்கு வழக்கு

(ஹட்டன் க.கிஷாந்தன்)

ஹட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹட்டன் எல்லைப்பகுதியில் நேற்றைய தினம் குப்பையினை வீதிக்கு வீசிய நான்கு பேருக்கு எதிராக ஹட்டன் பொலிஸார் வழக்கு பதிவு செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஹட்டன் நகர சபை எல்லை பகுதியில் வீதியில் குப்பையினை வீசுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக விசேட குழு சிவில் உடையில் நியமிக்கப்பட்டு பழைய குப்பை தொட்டிகளுக்கு அருகாமையில் கடமையில் அமர்த்தப்பட்டுள்ளனர்.அத்தோடு குப்பைகளை வீதியில் வீச வேண்டாம் என அறிவுறுத்தல் பலகைகள் போடப்பட்டுள்ளதோடு, சீ.சீ.ரீவி கெமராக்களுக்கும் பொருத்தப்பட்டுள்ளன.

இதனால் இவ்விடங்களில் குப்பையினை வீசுவதற்காக வருகை தந்தவர்களுக்கே இவ்வாறு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு பொலிஸார் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளதுடன் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஹட்டன் நீதி மன்றத்தில் ஆஜராகுமாறு பணித்தனர். ஹட்டன் டிக்கோயா நகர சபை அதிகாரிகள், ஹட்டன் பொலிஸார், இராணுவத்தினர், சுகாதார பரிசோதகர் ஆகியோர் இணைந்து குப்பைகள் முகாமைத்துவப்படுத்துவது தொடர்பாக மக்களுக்கு துண்டுபிரசுரங்களை விநியோகித்ததோடு, இது தொடர்பாக மக்களுக்கு தெளிவுபடுத்தினர்.

# யாழ். முஸ்லிம் பிரதிநிதிகள் வடக்கு முதலமைச்சருடன் சந்திப்பு





(யாழ். பாறுக் ஷிஹான்)

யாழ்ப்பாண முஸ்லிம் பிரதிநிதிகள் வடமாகாண முதலமைச்சர் சி.வி விக்னேஸ்வரன் தலைமையிலான குழுவினரை சந்தித்தனர். யாழ் முஹம்மதியா ஜூம்மா பள்ளிவாசலுக்கு நேற்றுமுன்தினம் வருகை தந்திருந்த இக்குழுவினர் யாழ் முஸ்லிம் சார் சமய பிரதிநிதிகள் மற்றும் அரசியல் பிரதிநிதிகள் ஆகியோருடன் கலந்துரையாடினர்.

இந்த கலந்துரையாடலில் வடக்கு மாகாண முதலமைச்சருடன் மாகாண சபை உறுப்பினர்களான அனந்தி சசிதரன் ,எம்.கே.சிவாஜிலிங்கம்,வலி வடக்கு பிரதேச சபை முன்னாள் தவிசாளர் சஜீவன் சண்முகம் உள்ளிட்டோரும் யாழ் முஸ்லிம் பிரதிநிதிகள் சார்பாக யாழ் கிளிநொச்சி உலமா சபை கிளை உப தலைவர் அஸிஸ் காசிமி யாழ் முஹம்மதியா ஜூம்மா பள்ளிவாசல் தலைவர் எம்.சி.முபீன், யாழ் மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் சரபுல் அனாம்,யாழ். பெரிய முஹயதின் ஜூம்மா பள்ளிவாசல் தலைவரும் ஊடகவியலாளருமான எம்.எல் லாபீர் யாழ் கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத்தின் தலைவர் ஜமால் முஹமட் அதன் செயலாளர் ஆர்.கே.சுவர் ஹான் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதன் போது இக்கலந்துரையாடல் குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த முதலமைச்சர் சி.வி விக்னேஸ்வரன், மக்களிடையே பல்வேறு விதமான முரண்பாடுகள் ஏற்படுகின்ற போது அல்லது தீவிரம் அடையும் போது எங்களிடையே பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

ஆகவே இவ்வாறான சந்தர்ப்பங்களில் சமயத்தலைவர்கள் சமூகத்தலைவர்களுடன் பேசி அவர்களது நல்லெண்ணங்களை பெற்றுக்கொள்வது வழக்கம். அந்த நல்லெண்ணத்தை பெறுவதற்காகவே யாழ் முஸ்லிம் பிரதிநிதிகளை சந்தித்துள்ளேன்.அந்த வகையில் அவர்கள் முழுமையான ஆதரவினை தருவதாக கூறினர்.

மேலும் இந்த ஆதரவானது தனிப்பட்ட முறையில் எமக்கு என்று இல்லாமல் எங்களது வடக்கு மாகாண சபை நிலைத்து நிற்க வேண்டும் எனவும் மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் எனவும் கூறி முழு வடக்கு மாகாண சபைக்கும் ஆதரவு வழங்குவதாக தமது நல்ல கருத்துக்களை எமக்கு தெரிவித்துள்ளார்கள் என கூறினார்.

# பிரேமதாச நினைவாக சமய வழிபாடு

முன்னாள் ஜனாதிபதி ஆர் பிரேமதாச மற்றும் பிரதமர் டட்லி சேனாநாயக்க நினைவாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சமய வழிபாட்டு நிகழ்ச்சி ஒன்று 23 ஆம் திகதி மாலை 4 மணிக்கு மாவடிகம வத்தவல ஸ்ரீ சுதர்சனாராம விஹாரையில் நடைபெறவுள்ளது.

யூ.எப்.எம். பாருக் மற்றும் மூன்று கோரளை பிரஜைகள் முன்னணி என்பன இதனை ஏற்பாடு செய்துள்ளன. முன்னாள் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் யூ.எப்.எம். பாருக்கின் நெறிப்படுத்தலில் நடைபெறும் இந்த நிகழ்வு கொழும்பு மாவட்ட பிரதம சங்க நாயக்கர் பெரஹர ஆரியவங்ச தலைமையில் நடைபெறும்.

# றிசாத்துக்கு பாராட்டு

கொழும்பின் குப்பைகளை புத்தளத்திற்கு எடுத்துச் செல்வதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சிக்கு அமைச்சரவையில் தமது பலத்த எதிர்ப்பினைத் தெரிவித்த கைத்தொழில் வணிக அமைச்சர் றிசாத் பதியுதீனை நாம் பாராட்டுகிறோம்.

அமைச்சர் றிசாத் புத்தளம் மக்கள் எதிர்நோக்கும் அனைத்து பிரச்சினைகளையும் அமைச்சரவையின் கவனத்துக்கு கொண்டுவந்து புத்தளம் மக்களுக்காக குரல் கொடுத்துள்ளார் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முஸ்லிம் பிரிவின் அமைப்பாளர் ஏ.ஏ. முஹாரிஸ் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



இலங்கை துறைமுக அதிகாரசபை, முஸ்லிம் மஜ்லிஸினூடாக வருடாந்தம் நடத்தும் இப்தார் நிகழ்வு இவ்வாண்டு இரத்துச் செய்யப்பட்டு அதற்கு ஒதுக்கப்பட்ட ரூபா பத்து இலட்சம் அண்மையில் ஏற்பட்ட வெள்ள நிவாரணத்திற்கு வழங்கப்பட்டது. இதேநேரம் எளிமையான முறையில் துறைமுக பள்ளிவாசலில் இடம்பெற்ற வழமையான இப்தார் நிகழ்வில், துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சர் மஹிந்த சமரசிங்க, அமைச்சின் செயலாளர் ஜயம்பதி, இலங்கை துறைமுக அதிகாரசபையின் தலைவர் பாராக்ரம திஸாநாயக்க உள்ளிட்ட உயர் அதிகாரிகள் மற்றும் துறைமுக முஸ்லிம் ஊழியர்கள் எனப் பலரும் இப்தார் நிகழ்வில் கலந்து கொண்டதைப் படங்களில் காணலாம். ஏ.சீ.எம்.கலீலுர் ரஹ்மான் நிகழ்வினை தொகுத்து வழங்கினார்.
(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

# தேசிய உதைபந்தாட்ட பயிற்சி அணி தெரிவுக்கான நேர்முகத்தேர்வு

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

கல்வியமைச்சு அகில இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் பாடசாலை மட்ட தேசிய பயிற்சிப் பட்டறைக்காக உதைபந்தாட்ட வீரர்களை தெரிவு செய்யும் நேர்முகத்தேர்வு தற்போது கொழும்பில் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் நடைபெற்று வருகிறது.

வயது 16, 18, 20 ஆகிய வற்றின் கீழான பாடசாலை உதைபந்தாட்ட வீரர்களுக்காகவே இந்த நேர்முகத்தேர்வு நடைபெற்று வருகிறது. இதன் பிரகாரம் 16 வயதின் கீழ் அகில இலங்கை உதைபந்தாட்ட போட்டிக்காக தெரிவாகியுள்ள பலாங்கொடை ஜெயிலானி தேசிய பாடசாலை அணியைச் சேர்ந்த 7 வீரர்கள் இப்பயிற்சிப் பட்டறைக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஜெயிலானி தேசிய பாடசாலையிலிருந்து இந் நேர்முகத்தேர்வுக்கு எம்.எச்.எம். ஹாதிக் எம்.கே.எம்.அம்ஜட் எம்.எச்.எம்.நிம்சான் எம்.எம்.எம்.முர்ஷித் எம் எம்.எம்.சாஜித் எம்.எப்.எம்.ஹாமித் எம்.ஆர்.எம்.திஸ்னி ஆகிய மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# சிரியாவில் வான்வழித் தாக்குதல்: அவுஸ்திரேலியா நிறுத்தி வைப்பு



சிரியா போர் விமானத்தை அமெரிக்கப் போர் விமானம் சுட்டு வீழ்த்தியதால் அமெரிக்காவுக்கும், ரஷ்யாவுக்கும் இடையே பதற்றம் அதிகரித்து வரும் நிலையில், அமெரிக்கக் கூட்டுப் படையில் அங்கம் வகிக்கும் அவுஸ்திரேலியா தனது சிரியா நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க முடிவு செய்துள்ளது.

இதுகுறித்து ஆஸ்திரேலிய பாதுகாப்புத் துறை அமைச்சக செய்தித் தொடர்பாளர் தெரிவிக்கையில்,

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, சிரியா வான் எல்லையில் எங்களது நடவடிக்கைகளை தாற்காலிகமாக நிறுத்தி வைக்க முடிவு செய்துள்ளோம். சிரியாவிலுள்ள அமெரிக்கக் கூட்டுப் படையில் நாங்கள் தொடர்ந்து அங்கம் வகிப்போம் என்றார்.

எனினும், வான்வழி நடவடிக்கைகளை நிறுத்தி வைத்திருப்பதற்கான காரணத்தை அவர் விளக்கமாகத் தெரிவிக்கவில்லை.

சிரிய ஜனாதிபதி அல்அஸாத் ஆதரவுப் படையைச் சேர்ந்த போர் விமானத்தை அமெரிக்க விமானம் அண்மையில் சுட்டு வீழ்த்தியது. அமெரிக்கா ஆதரவளித்து வரும் கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டுப் பகுதியில் தாக்குதல் நிகழ்த்தியபோது, சிரியா விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

எனினும், ஐ.எஸ் தீவிரவாதிகளைக் குறிவைத்து தாக்குதல் நிகழ்த்தச் சென்ற விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதாக சிரியா அரசு தெரிவித்தது. சிரியா போர் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதற்கு, ரஷ்யா கடும் கண்டனம் தெரிவித்தது. மேலும், சிரியா விமானங்களுக்குப் பாதுகாப்பாக தங்கள் போர் விமானங்கள் எதிரி விமானங்களை எதிர்கொள்ளும் என்று ரஷ்யா எச்சரித்தது.

இதனால் ஏற்பட்டுள்ள பதற்ற சூழலில், ரஷ்ய விமானங்களால் தாக்கப்படுவதைத் தவிர்க்கவே சிரியாவில் தனது வான்வழித் தாக்குதல்களை நிறுத்தி வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பிரித்தானிய இளவரசர் பிலிப் வைத்தியசாலையில் அனுமதி

பிரித்தானிய மகாராணி எலிசபெத்தின் கணவரும் எடின்பரோ கோமகன் என்றழைக்கப்படும் அந்நாட்டின் இளவரசருமான பிலிப்(96) வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இளவரசர் பிலிப், இந்த ஆண்டு கோடை காலத்துக்கு பின்னர் அரச பணிகளிலிருந்து ஓய்வு பெறுவார் என பக்கிங்ஹோம் அரண்மனை கடந்த மே மாதம் அறிவித்தது.

இந்நிலையில், பிலிப் முன் எச்சரிக்கை நடவடிக்கையாக நேற்றிரவு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பக்கிங்ஹோம் அரண்மனை நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

தற்போது 96 வயதாகும் இளவரசர் பிலிப்புக்கு கடந்த 2013 ஜூன் மாதம் வயிற்றில் ஒரு அறுவை சிகிச்சை நடந்தது. அதன்பிறகு பெரிய அளவிலான உடல்நலக் குறைவு எதுவும் அவருக்கு ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும், சிறிய உடல் உபாதைகளால் அவர் அவ்வப்போது பாதிக்கப்பட்டு, அதற்கான தொடர் சிகிச்சைகள் பெற்று வந்தார். இருப்பினும், பக்கிங்ஹோம் அரண்மனை சார்ந்த சில பொது நிகழ்ச்சிகளிலும் அவர் அவ்வப்போது கலந்து கொண்டு வருகிறார்.

இந்நிலையில், நோய்த்தொற்று அதிகரிப்புகளால் அவர் தற்போது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பிரித்தானிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# சவூதியில் புதிய வரி விதிப்பின் பாதிப்பு: வெளியேறும் அபாயத்தில் வெளிநாட்டினர்



புதிய வரி விதிப்பால் இலட்சக்கணக்கான வெளிநாட்டினர் சவூதியிலிருந்து வெளியேறும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

எண்ணெய் வளம் மிகுந்த சவூதி அரேபியாவில் இலட்சக்கணக்கான வெளி நாட்டினர் தங்கி பணி புரிகின்றனர். அவர்களில் ஏராளமானோர் தங்கள் மனைவி மற்றும் குழந்தைகளுடன் தங்கியுள்ளனர். இந்நிலையில் சவூதியில் பணிபுரியும் தொழிலாளர்களுடன் தங்கியிருக்கும் வெளிநாட்டினருக்கு புதிய வரி விதிக்கப்பட்டுள்ளது.

அதாவது அங்கு தங்கியிருக்கும் வெளிநாட்டினர் மாதம் 100 ரியால் செலுத்த வேண்டும். இது எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி முதல் அமுலுக்கு வருகிறது.

மாதம் 5 ஆயிரம் ரியால் சம்பாதிக்கும் வெளிநாட்டினருக்கு சவூதி அரசு குடும்ப விசா வழங்குகிறது. அதன்படி அங்கு தங்கியிருக்கும் தொழிலாளி தனது மனைவி மற்றும் 2 குழந்தைகளுக்கு என 3 பேருக்கு மாதம் ரூ.300 ரியால் வரி செலுத்த வேண்டும்.

இது எதிர்வரும் 2020ஆம் ஆண்டு வரை அமுலிலிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொழிலாளர்களுக்கு கட்டுப்படியாகாது என்பதால் இந்தியாவை சேர்ந்த 41 லட்சம் பேர் சவூதியிலிருந்து வெளியேறும் அபாயம் உள்ளதாக இந்திய தகவலொன்று தெரிவிக்கின்றது. அத்தோடு கடந்த 4 மாதங்களாக இந்தியர்கள் தங்கள் குடும்பத்தினரை அங்கிருந்து அனுப்பி வைக்க தொடங்கி விட்டனர்.

ஜூலைமுதலாம் திகதி முதல் பானங்கள் மற்றும் புகையிலையின் விலை 100 சதவீதம் உயருகிறது. அதனால் குடும்பம் நடத்த முடியாத நிலை உள்ளது. மேலும் மசகு எண்ணெயின் விலை குறைந்து விட்டது. இதனால் அங்கு பெரும்பாலான கம்பெனிகள் மூடப்பட்டு வருகின்றன.

இதனால் வேலை இழக்கும் அபாயமும் உள்ளது. பொதுவாக அங்கு ஐ.டி., கட்டுமானம் மற்றும் மருத்துவம் சார்ந்த பணிகளில் பெரும்பாலானோர் அங்கிருந்து வெளியேறும் முடிவிலுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# இந்தியாவுக்கு 8 பிரதமர்களை தந்த உ.பியிலிருந்து முதல் ஜனாதிபதி!



இந்தியாவின் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த மாநிலம் உத்தரப்பிரதேசம். மிகப் பெரிய மாநிலம் என்பதோடு மக்கள் தொகையிலும் முதலிடம் வகிக்கிறது இது வரை, இந்திய பிரதமராக இருந்தவர்களில் 8 பேர் இந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்கள்.

ஜவஹர்லால் நேரு, லால் பகதூர் சாஸ்திரி, இந்திராகாந்தி, சரண்சிங், ராஜீவ் காந்தி, வி.பி.சிங், சந்திரசேகர், அடல்பிகாரி வாஜ்பாய் வரை பட்டியல் நீளுகிறது. ஆனால், உத்தரப்பிரதேசத்தில் இருந்து யாரும் குடியரசுத் தலைவர்(ஜனாதிபதி) பதவியை அலங்கரித்ததில்லை.

கடந்த 1969ஆம் ஆண்டு குடியரசுத் தலைவராக இருந்த ஜாகிர் உசேன் இறந்ததையடுத்து, தலைமை நீதிபதியாக இருந்த உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த முகமது ஹிதாயதுல்லா, தற்காலிக குடியரசுத் தலைவராக சில மாதங்கள் மட்டுமே பதவி வகித்தார். ராம்நாத் கோவிந்த் குடியரசுத் தலைவர் ஆகும்பட்சத்தில், உத்தரப்பிரேசத்தைச் சேர்ந்த முதல் குடியரசுத் தலைவர் என்கிற பெருமையை பெறுவார்.

ஆர்.எஸ்.எஸ் இயக்கத்தைப் பின்னணியாகக் கொண்ட ராம்நாத் கோவிந்த் சர்ச்சைகளுக்கு பெயர்போனவர்.

கடந்த 2010ஆம் ஆண்டு ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி ரங்கநாத் மிஸ்ரா கமிஷன், இஸ்லாமியர்களையும் கிறிஸ்தவர்களையும் எஸ்.சி பிரிவில் சேர்க்க பரிந்துரைத்தது. அப்போது, பாரதிய ஜனதா கட்சி செய்தித் தொடர்பாளராக இருந்த ராம்நாத் கோவிந்த் அதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்ததோடு, இஸ்லாமியர்களும் கிறிஸ்தவர்களும் இந்தியாவுக்கு வெளியே இருந்து வந்தவர்கள் 'எனப் பேசி சர்ச்சையை கிளப்பினார். அதுபோல், கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய மதத்தைத் தழுவிய தலித் மக்களுக்கு எதிரான மனநிலையை ராம்நாத் கோவிந்த் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அமெ. வில் 20 கோடி பேரின் இரகசிய தகவல்கள் அம்பலம்

அமெரிக்காவில் சுமார் 20 கோடி பேரின் இரகசிய தகவல்கள் கசிந்துள்ளன.

குடியரசு கட்சியின் ஓர் அங்கமான குடியரசு தேசியக் குழுவால் ஒப்பந்தம் செய்யப்பட்ட டீப் ரூட் அனலிட்டிக்ஸ் நிறுவனத்தின் மூலம் இந்தத் தகவல் கசிந்துள்ளதாக செய்தி இணையத்தளமான கிஸ்மோடோ தெரிவித்துள்ளது.

பல்வேறு ஆதாரங்கள் மூலம் திரட்டப்பட்ட அத் தரவுகள் 1.1 டெராபைட்ஸ் அளவு கொண்டது என்றும், அதில் 20 கோடி பேர் பற்றிய தனிப்பட்ட தகவல்கள் இடம்பெற்றுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

தனிப்பட்ட தகவல் மட்டுமின்றி, அவர்களின் மதச்சார்பு, இனம் பற்றிய விவரம், துப்பாக்கி கட்டுப்பாடு, கருக்கலைப்பு உள்ளிட்ட முக்கிய பிரச்சினையில் அவர்கள் கொண்டுள்ள நிலைப்பாடு உள்ளிட்ட விவரங்களும் கசிந்துள்ள தகவல்களில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# கிழக்கில் பொருத்தமற்ற ஆசிரிய இடமாற்றங்கள்

## உதுமாலெப்பை அவசர பிரேரணை

எஸ்.அஷ்ரப்கான், முஹாஜிரீன்



கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் இவ்வாண்டின் நடுப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள வருடாந்த ஆசிரியர் இடமாற்றங்களினாலும் ஏனைய ஆசிரியர் இடமாற்றங்களினாலும் சிறந்த முறையில் இயங்கி வந்த பாடசாலைகளின் கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், அதிபர்களும் ஆசிரியர்களும் கல்வி அதிகாரிகளும் பாடசாலை சமூகங்களும் பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றன. மேலும் இந்நடவடிக்கைகளினால் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளும் நிருவாக செயற்பாடுகளும் சீர்குலைந்து காணப்படுவதாக கிழக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் எம்.எஸ். உதுமாலெப்பை தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபையின் 79 வது அமர்வு தவிசாளர் சந்திரதாச கலப்பதி தலைமையில் நேற்று முன்தினம் (20) நடைபெற்றது. இதன் போது கிழக்கு மாகாணத்தில் பொருத்தமற்ற நேரத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆசிரியர் இடமாற்றங்களினால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டு வருவதாகவும் அவ்விடமாற்றங்களை உடனடியாக இரத்துச்செய்யுமாறும் கோரி அவசரப் பிரேரணை ஒன்றை சமர்ப்பித்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

குறிப்பாக அக்கரைப்பற்று வலயப் பாடசாலைகளில் புதிய சுற்று நிருபத்தின் படி 300 ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் நிலவுகின்ற நிலையில் அக்கரைப்பற்று வலயத்தை சேர்ந்த 40 ஆசிரியர்கள் இடமாற்றப்பட்டுள்ளனர். இதனால் அக்கரைப்பற்று வலய பாடசாலைகளின் கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டில் ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை, கா.பொ.த சாதாரண, உயர்தரப் பரீட்சைகள் நடைபெறவுள்ள இக் காலப்பகுதியில் இவ் ஆசிரியர் இடமாற்றங்கள் பாரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் இவ்விடமாற்றங்களால் க.பொ.த உயர்தரப் பரீட்சை ஆயத்தங்கள், பயிற்சிகள், நடாத்துவதில் தாமதங்கள் ஏற்படும் இதனால் பெறுபேறுகள் வீழ்ச்சியடையும் தூரநோக்கில் சமூகத்திற்கு ஈடுசெய்ய முடியாத தாக்கம் ஏற்படும். அதே போன்று புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களை ஆற்றுப்படுத்துவதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பதில் பாரிய குழப்பநிலை ஏற்படும் இதனால் பரீட்சை பெறுபேறுகளில் பாரிய தாக்கம் ஏற்படும். வலய, மாவட்ட, மாகாண மட்டப் போட்டி நிகழ்வுகளுக்காக மாணவர்களை ஆற்றுப்படுத்துவதற்கான செயற்பாடுகள் ஸ்தம்பிதமடைவதன் காரணமாக மாணவர்களின் திறன் வளர்ச்சி பன்முக ஆளுமைத்திறன் வளர்ச்சியில் குந்தக நிலை ஏற்படுவதற்கு நிறைவான வாய்ப்புக்கள் உள்ளன.

அதேபோன்று சில அதிகாரிகளின் இடமாற்றங்களால் கடந்த வருடம் நடைபெற்ற பெரும்பாலான கட்டிட வேலைகள் இன்றுவரை பூர்த்தியடையவில்லை குறிப்பாக அண்மையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை திட்டத்தில் பூர்த்தியடைந்த வேலைகளுக்கான நிதிகள் வழங்கப்படாமை இடைநடுவில் இடமாற்றம் வழங்கப்பட்டால் நிதிசார் செயற்பாடுகளை கையாள்வதில் பாரிய சிக்கல் தன்மை ஏற்பட்டுள்ளது. அதிபர்கள் ஆசிரியர்களின் செயற்பாடுகளில் இயங்குதிறன் தன்மை மேற்பார்வை இல்லாமை காரணமாக குறைவடைந்து குழப்ப நிலை ஏற்பட்டு மாணவர்களின் ஒழுக்கநிலைகளுக்கு கூட பாதிப்புக்கள் ஏற்பட்டு எதிர்காலத்தில் ஆரோக்கியமற்ற சமூகம் உருவாகுவதற்கான வாய்ப்புக்கள் நிறையவே உள்ளது.

க.பொ.த சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேற்றில் கிழக்கு மாகாணம் ஏற்கனவே எட்டாவது (08) நிலையில் உள்ளது. விளைத்திறனான செயற்பாடுகள் குறைவடைவதன் காரணமாக ஒன்பதாவது(09) நிலைக்குப் போட்டி போடவேண்டிய நிலை கூட ஏற்படும். கல்விச் சமூகத்திலும் நடுநிலையாகச் சிந்திக்கும் பொதுச் சமூக மட்டத்திலும் திட்டமிட்ட பழிவாங்கல்கள் நடைபெறுகின்றது எனும் வலுவான சிந்தனை ஏற்பட்டு சமூக ஒத்துழைப்பை பெறுவதில் கூட உவப்பான தன்மை ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் பூச்சியமாகவே உள்ளது. இது எதிர்காலச் சமூகத்திற்கு கல்விக் கருமத் தொடரை கையாள்வதில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.

நியமிக்கப்படும் புதியவர்கள் உடனடியாக உள்வாங்கி நிருவாகக் கட்டமைப்பை தனக்கு ஏற்றாற் போல் மாற்றி அமைத்து விடமுடியாது. அவ்வாறு மாற்றியமைப்பதற்கு குறைந்தது ஆறு(06) மாதங்களுக்கு மேற்செல்லும். அதற்கிடையில் எதிர்வரும் ஆகஸ்ட், டிசம்பர் மாதங்களில் அரச பொதுப் பரீட்சைகள் வந்துவிடும்.



நிருவாகத்தை மாற்றிவிடுவோம் என்ற தெளிவான நோக்கில்லாது குறுகிய நோக்கில் சிந்தித்துச் செயற்பட்டால் பாதிக்கப்படப் போவது நாமல்ல. எதிர்காலச் சமூகமும் எதிர்கால இருப்பியலுமே ஆகும் என்பது யதார்த்தமான உண்மையாகும்.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஆசிரியர்களை பொருத்தமற்ற முறையில் இடமாற்றங்கள் வழங்கி அவர்களின் மனநிலையில் குழப்பங்களை ஏற்படுத்திய நிலையில் ஆசிரியர் சமூகத்திடம் நாம் எதிர்பார்க்கும் கல்விச் செயற்பாடுகளை பெறமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. கல்முனை வலயத்தைச் சார்ந்த ஆசிரியர் தமது முதலாவது நியமனக் காலத்தின் போது கல்முனை வலயத்திற்கு வெளியே கடமையாற்ற வேண்டிய வருடத்தை பூர்த்தி செய்யாது, அதற்கு முன்னர் கல்முனை வலயத்திற்கு இடமாற்றம் பெற்று வந்தவர்களை அந்த கால கட்டத்தை நிறைவு செய்யும் வகையில் மீண்டும் வெளி வலயத்திற்கு அனுப்பப்பட்டுள்ளமை கவலை தரும் விடயமாகும். இதிலும் குறிப்பாக இன்னொன்றை சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. வெளிவலயத்தில் 60 மாதங்களை பூர்த்தி செய்ய வேண்டிய ஓர் ஆசிரியரை 57 மாதங்களை நிறைவு செய்த நிலையில் அவருக்கு மீண்டும் மூன்று மாதங்கள் வெளி வலயத்திற்கு இடமாற்றம் வழங்கியிருப்பது பெரும் அநீதியாகும்.

எனவே, வருட நடுப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இவ்வாசிரியர் இடமாற்றங்களை ரத்து செய்து கிழக்கு மாகாண சபையினால் மிக விரைவில் வழங்கப்படவுள்ள பட்டதாரிகளுக்கான ஆசிரிய நியமனங்கள் ஊடாக கிழக்கு மாகாண பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறைக்கு தீர்வுகளைக் காண்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதுடன் கிழக்கு மாகாண கல்வி அமைச்சரினால் கிழக்கு மாகாண அமைச்சரவைக்கு சமர்ப்பித்த கிழக்கு மாகாணத்திற்கான தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கையினை அமுல்படுத்தி எதிர்காலத்தில் கிழக்கு மாகாண ஆசிரியர்களுக்கு தேசிய இடமாற்றக் கொள்கையூடாக ஆசிரிய இடமாற்றங்களை மேற்கொள்ள வேண்டும்.

கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் 37 பேரும் கடந்த 2010ம் ஆண்டு தென் மாகாண சபைக்கு சிநேக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு அந்த மாகாண சபை அமர்வுகளிலும் கலந்து கொண்டு அமைச்சுக்களின் செயற்பாடுகளையும் நாம் அவதானித்தோம். அவ்வேளையில் இரு மாகாண சபைகளின் உறுப்பினர்களுக்குமிடையில் நடைபெற்ற முக்கிய கலந்துரையாடலில் தென் மாகாண சபையில் ஆசிரியர் இடமாற்றம் தொடர்பில் எவ்வாறான நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றது என்பது தொடர்பில் தென்மாகாண கல்வி அமைச்சரிடம் நான் வினவினேன். அப்போது அவர் தெரிவிக்கையில் நாங்கள் அரசாங்கத்தினதும் கல்வி அமைச்சினதும் சுற்று நிருபங்களை ஒருபுறம் வைத்துவிட்டு ஆசிரியர்கள் பாதிக்கப்படாத வகையில் இடமாற்றங்களை செய்து வருகின்றோம்.

மேலும் 20கிலோ மீற்றர் தூரத்திற்குள்ளே ஆசிரியர் இடமாற்றங்களை செய்து வருகின்றோம். இதனூடாக எங்களுக்கு எவ்வாறான பிரச்சினைகளும் தென்மாகாண சபையில் எழுந்ததில்லை எனத் தெரிவித்தார். ஒரே நாட்டில் ஒரே மாகாண சபை முறைமையின் கீழ் அமைந்துள்ள தென் மாகாணத்தில் 20 கிலோ மீற்றர் தூரத்தில் ஆசிரியர் இடமாற்றம் செய்கின்ற முறைமை பின்பற்றப்படுகின்ற போது கிழக்கு மாகாணத்தில் மாத்திரம் 200கிலோ மீற்றருக்கு அப்பால் இடமாற்றம் செய்கின்ற ஒரு துர்ப்பாக்கிய நிலைமை காணப்படுகிறது. இவ்வாறான நிலை உடனடியாக சீர்செய்யப்பட வேண்டும்.

அக்கரைப்பற்று வலயத்தில் தற்போது 300 ஆசிரியர்கள் வெற்றிடம் நிலவும் இவ்வேளையில் பொத்துவில் மக்கள் பொத்துவில் பிரதேசத்திற்கான தனியான கல்வி வலயம் கோருவதற்கான பிரதான காரணம் அவர்களின் ஆசிரியர் பற்றாக்குறை, வளப்பற்றாக்குறை, கல்வித் தேவைகள் தொடர்பான குறைபாடுகளாகும். அவர்களின் கோரிக்கை நியாயமானதாகும்.

இவ்வாறான வேளையில்தான் அக்கரைப்பற்று வலயத்தில் 40 ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இச்செயற்பாடானது அவ்வலயப்பாடசாலை மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

---

ஏம்.எம்.முஹம்மத் ஸப்வான்
சீனன்கோட்டை, பேருவளை

# பேருவளையில் இஸ்லாமிய கோள்மண்டலம்

## ஜாமிஆ நளீமிய்யா வளவில் நிறுவவேண்டும்

இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றை படிக்கும் எவரும் பேருவளையை மறக்கமுடியாது. அது இலங்கையில் முஸ்லிம்கள் முதன் முதல் குடியேறிய வரலாற்று முக்கியத்துவமிக்க பூமியாகும். அங்கு வாழ்ந்த பல மூதாதையர்கள், பிரமுகர்கள் அவ்வூரின் எதிர்கால மேம்பாடுகருதியும் மற்றும் சமூக நோக்கிலும் அடிப்படையை சரியாகவே நங்கூரமிட்டு அமைத்துள்ளனர். அது ஓர் உறுதியான ஊராகும்.



சரித்திர முக்கியத்துவம் பெற்ற இலங்கையின் முதல் பள்ளிவாசலான அல் அப்ரார் பள்ளிவாசல், சரித்துவ முக்கியத்துவம் பெற்ற கெச்சிமலை தர்கா, சங்கைமிகு வைதும் முபாரக் புகாரி தக்கியா, கொடை வள்ளலும் இலங்கையின் இஸ்லாமிய மறுமலர்ச்சியில் பங்குகொண்டவர்களின் ஒருவருமான அறிஞத்தை எம்.ஐ.எம்.நளீம் ஹாஜியாரின் எண்ணத்தில் உருவாகி இன்று வெற்றிநடை போட்டுக்கொண்டிருக்கும் ஜாமியா நளீமிய்யா இஸ்லாமிய கலாபீடம் மற்றும் இக்ரஃ தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் அரச, தனியார் தேசிய பாடசாலைகள், சர்வ தேச ஆங்கில பாடசாலைகள், க.பொ.த.உயர்தர விஞ்ஞான வதிவிடக்கற்கைப்பிரிவு இன்னும் பல சமூக நல நல்லியக்கங்கள் என அனைவரையும் அரவணைக்கும் நல்லூராகும்.

இறைத்தூதர் நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் படைப்புக்களை ஆராய்வது, தொழுகையைவிடச் சிறந்தது என்கிறார்.

புனிதமிகு அல்குர் ஆனும் அறிவியல் ஆய்வை ஊக்குவிக்கின்றது. இதற்கு பின்வரும் புனித குர்ஆனிய வசனங்களை உதாரணம் காட்டலாம்.

ஒட்டகை எவ்வாறு படைக்கப்பட்டிருக்கின்றது? வானம் எவ்வாறு உயர்த்தப்பட்டிருக்கின்றது? மலைகள் எவ்வாறு நாட்டப்பட்டிருக்கின்றன? பூமி எவ்வாறு விரிக்கப்பட்டிருக்கின்றது? என்று அவர்கள் கவனிக்க வேண்டாமா?(புனித அல்குர் ஆன் 17:20)

நம்பிக்கை கொண்டவர்களுக்கு வானத்திலும் பூமியிலும் நிச்சயமாகச் சான்றுகள் இருக்கின்றன. (புனித குர்ஆன் 45:63)

வானங்களிலும், பூமியிலும் உள்ள அனைத்தையும் தன்னிடமிருந்து அவனே உங்களுக்கு வசைப்படுத்திக் கொடுத்தான். (புனித அல்குர் ஆன் 45:13)

சூரியனும் சந்திரனும் வானத்தில் தங்களுக்குரிய வட்டப்பாதையில் தங்கள் சுய உந்துசக்தியால் மண்டலமாக (பலக்) சுற்றுக்கிறது. (புனித ...21:23)

நாமே வானத்தை சக்தியால் படைத்தோம். நிச்சயமாக நாம் அதை விரிவாகத்தருகிறோம்.(மூஸிலூன்) என்று இதையே புனித அல்குர் ஆன் கூறுகின்றது.

சூரியன் தன் தங்குமிடம் (முஸ்தகர்) நோக்கி விரைகிறது. (புனித அல்குர் ஆன் 36:38)

மனிதன் விண்வெளியில் பயணம் செய்வான் என்ற முன்னறிவிப்பும் (55:33) புனித குர்ஆனில் காணப்படுகிறது.

ஏழுவானங்களைப் போலவே ஏழு பூமிகளையும் படைத்திருக்கின்றான். (புனித அல்குர்ஆன் 65:12) என்று அல்குர்ஆன் கூறுகின்றது. இவ்வாறு வானவியல் பற்றி அல்குர்ஆன் வசனங்களை அடுக்கிக்கொண்டே போகலாம்.

ஒரு காலத்தில் இஸ்லாமிய உலகம் வானியல் ஆராய்ச்சிகளில் கொடிக்கட்டிப் பறந்தது. வான நூல் ஆராய்ச்சிக்காக மாஸ்கஸ், பக்தாத், நிஷாப்பூர் ஆகிய இடங்களில் வானாய்வு நிலையங்கள் அமைக்கப்பட்டன.

முஸ்லிம் அறிவிப்பாளர்களே வானியலை சோதிடத்திலிருந்து பிரித்தனர்.

அபூரைஹான் முஹம்மத் இப்னு அபூ அஹ்மத் அல் பிரூனி மாபெரும் முஸ்லிம் அறிவியல் அறிஞராக திகழ்ந்தார். அவர் பல நூல்களை எழுதினார். அதில் வானியல் நூல்களும் இருந்தன.

கைஸர் இப்னு அபில்காஸிம் என்ற வானியல் அறிஞர் வான் கோள்களை உருவாக்கினார்.

வானியலில் முஸ்லிம்கள் தனிக் கவனம் செலுத்தினர். அவர்கள் 11 ஆம் நூற்றாண்டுவரை செய்த ஆராய்ச்சிகள்; ஐரோப்பியருக்கும் அடிப்படைகளாக அமைந்தன.

இப்ராஹீம் இப்னு உறப்பல் ஃபஸாரி என்பவரே முதல் விண்ணாய்வு நிலையத்தை அமைத்தார்.

புகழ்பெற்ற கவிஞர் உமர் கையாம் வானவியல் மேதையாகவும் இருந்தார். இன்னும் அரபியர்கள் வைத்த பெயர்களே நட்சத்திரங்களுக்கு வழங்கி வருகின்றன.

மதங்களையே வெறுக்கும் நாத்திக நாவலரான இங்கல்சால் கூட நவீன அறிவியலுக்கும் விஞ்ஞானிய முஸ்லிம்களுக்கும் நாம் மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம் என்று கூறுகின்றார்.

மேலைநாட்டவர்களில் ஒரு சிலர் இவ்வாறு முஸ்லிம்களின் அறிவியல் பங்களிப்பைப் பாராட்டினாலும் மேலை நாடுகள் முஸ்லிம்களின் அறிவியல் சாதனைகளைத் திட்டமிட்டு மறைத்து வருகின்றனர். இதனை மேலை நாட்டவரில் ஒருவராகிய ஜான் வில்லியம் ட்ரேபர் என்பவரே ஒப்புக்கொண்டு இவ்வாறு கூறுகின்றார். அறிவியல் முஸ்லிம்களிடம் நாம் பட்டிருக்கும் கடனை ஐரோப்பிய நூல்கள் திட்டமிட்டு மறைத்து வருவதைக் கண்டு நான் வருந்துகிறேன். ஆனால் நெடுங்காலம் அவற்றை மறைத்து வைக்க முடியாது.

அந்தவகையில், இஸ்லாமியர்கள் வானவியலுக்கு மிகச் சிறந்த பங்களிப்பை செலுத்தியுள்ளார்கள். அதனடிப்படையில் அல்குர்ஆனும் ஹதீஸில்; குறிப்பிடுகின்ற வானியல் விடயங்களுடன் ஓர் இஸ்லாமிய சமூக வானியல் எழுச்சி கருதி ஓர் இஸ்லாமிய கோள்மண்டலம் பேருவளைக்கு வேண்டும். அதுவும் ஜாமிஆ நளீமிய்யா கலாபீட வளவில் அமையுமானால் மிகவும் பொருத்தமாக இருக்கும். இதுபற்றி முஸ்லிம் சமூக அபிமான தனவந்தர்கள் கவனத்திற்கொள்வார்களா?

'அறிவைத் தேடி வருபவர்களின் வரவு நல்வரவாகட்டும்' - நபி முஹம்மது (ஸல்).

# சவூதி இளவரசர் பதவியிலிருந்து அப்துல்யாஸிஸ் நீக்கம்: புதிய இளவரசராக முகமது பின் சல்மான் நியமனம்





சவூதி இளவரசர் பதவியிலிருந்து முகமது பின் நவிப் பின் அப்துல்யாஸிஸ் நீக்கப்பட்டார். புதிய இளவரசராக மகன் முகமது பின் சல்மானை சவூதி மன்னர் அறிவித்துள்ளார்.

சவூதி இளவரசர் பதவியிலிருந்து முகமது பின் நவிப் பின் அப்துல்யாஸிஸ்(57) நீக்கப்பட்டார்.

புதிய இளவரசரை தேர்வு செய்வது தொடர்பாக மக்காவிலுள்ள அல் சபா மாளிகையில் சவூதி அரசின் வாரிசு குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இக் கூட்டத்தில் மொத்தமுள்ள 43 உறுப்பினர்களில் 31 பேர் முகமது பின் சல்மானுக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

இதனையடுத்து, முகமது பின் சல்மானை புதிய இளவரசராக அவரது தந்தையும் சவூதி அரசருமான சல்மான் பின் அப்துலாஸிஸ் அல் சவூத் நியமித்தார். 31 வயதான முகமது பின் சல்மான் மேலும் துணை பிரதமராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். அதனோடு, தான் பொறுப்பு வகித்து வந்த பாதுகாப்பு துறை அமைச்சு பதவியையும் தக்க வைத்துள்ளார். முன்னதாக முகமது பின் சல்மான் துணை இளவரசராக இருந்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## யெமனை அச்சுறுத்தும் கொலரா: அதிகரிக்கும் உயிரிழப்புகள்!



யெமனில் கொலரா நோய் காரணமாக கடந்த 2 மாதங்களில் சுமார் 1000 பேர் இறந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

யெமனில் தொடர்ந்து ஹவுதி கிளர்ச்சியாளர்களால் தொடர்ந்து உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. யெமன் தலைநகர் சானாவையும் ஹவுதி படையினர் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். இதனால், யெமனின் சுகாதார கட்டமைப்பு கடுமையாக பாதிப்படைந்துள்ளது. மேலும், அங்கு வைத்தியசாலைகளும் முறையாக செயற்படாமலுள்ளன. இதனால் அங்குள்ள மக்கள் பல்வேறு நோய் தாக்குதலுக்கு ஆளாகி வருகின்றனர்.

இந்நிலையில், யெமனில் கடந்த 2 மாதங்களில் சுமார் 1000இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது. கடந்த ஏப்ரல் 27இலிருந்து ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டோர் கொலரா நோயால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருப்பதாகவும், அதில் 1,146 பேர் உயிரிழந்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது. யெமனைச் சேர்ந்தவர்களுக்கு அமெரிக்க ஜனாதிபதி விசா கட்டுப்பாடு விதித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## குளவியை சத்துணவாக்கிக்கொண்ட கோஸ்டோரிக்கா ஜனாதிபதி



கோஸ்டோரிக்காவின் ஜனாதிபதி செய்தியாளர் சந்திப்பின் போது வாய்க்கு முன் பறந்த குளவியை லபக்கென பிடித்து சாப்பிட்டார். அந்த வீடியோ காட்சிகள் சமூகவலைத் தளங்களில் பரவி வைரலாகியுள்ளன.

மத்திய அமெரிக்க நாடுகளில் ஒன்றான கோஸ்ட்டாரிக்காவின் ஜனாதிபதி கிலர்மோ, சுவையான செய்தி ஒன்றுக்கு சொந்தக்காரர் ஆகிவிட்டார். கோஸ்ட்டாரிக்காவின் பட்னாரில் நகரில் செய்தியாளர் சந்திப்பொன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் அந்நாட்டு ஜனாதிபதி கிலர்மோ சோலிஸ் கலந்துகொண்டார்.

கெமராக்கள் அனைத்தும் ஒன் செய்திருக்க, பேசத் தொடங்கினார் ஜனாதிபதி கிலர்மோ. அப்போது அழைக்கப்படாத விருந்தாளியாக பிரஸ் மீட்டிற்கு வந்த குளவியொன்று அவரது வாய்க்கு முன் நீண்ட நேரமாக பறந்து கொண்டிருந்தது. வாய்க்கு மிக அருகில் சென்ற குளவியை லபக்கென பிடித்த ஜனாதிபதி அதனை அப்படியே மென்று தின்றார். பின்னர் அதனை நான் தின்றுவிட்டேன் என்றும் படு மகிழ்ச்சியாக தெரிவித்தார். அதனை கேட்டு நிருபர்களும் சிரித்து விட்டனர். இதைத்தொடர்ந்து தண்ணீர் குடித்த அவர், இது எல்லா நாளும் கிடைக்காது. தூய்மையான புரோட்டின் என்றார். ஜனாதிபதியின் இந்த வீடியோ சமூக வலைத்தளங்களில் பரவி வைரலாகியுள்ளது.

## பங்களாதேஷில் சோகம்: மின்னல் தாக்கி 22 பேர் பலி



பங்களாதேஷில் அடுத்தடுத்த துயரமாக 48 மணிநேரத்தில் மின்னல் தாக்கி 22 பேர் உயிரிழந்துள்ளனர்.

பங்களாதேஷில் பருவமழை காலம் தொடங்கியுள்ள நிலையில் கடும் மழை பெய்து வருகிறது. கடும் மழையினால் கடந்த வாரம் பல்வேறு இடங்களில் மண்சரிவு ஏற்பட்டது. மண்சரிவால் 160இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை மற்றும் திங்கட்கிழமையில் வங்கதேசத்தை புயல் தாக்கியது.

கடந்த 48 மணிநேரத்தில் மட்டும் மின்னல் தாக்கி 22 பேர் உயிரிழந்துள்ளனர். பங்களாதேஷில் ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கானோர் மின்னல் தாக்கி பலியாகின்றனர். பருவநிலை மாற்றத்தால் இந்த பிரச்சினை தீவிரமடைந்துள்ளதாக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

### அகதியை கௌரப்படுத்திய ஐ.நா:

## நல்லெண்ண தூதராக 19 வயது சிரிய அகதி



உலக அகதிகள் தினத்தை முன்விட்டு 19 வயது சிரிய அகதியை யுனிசெபின் நல்லெண்ணத் தூதராக நியமித்து ஐ.நா. கௌரவப்படுத்தியுள்ளது.

ஜூன் 20 ஆம் திகதி உலக அகதிகள் தினமாகக் கொண்டாடப்படுகிறது. இந்நிலையில் உலக அகதிகள் தினத்தை முன்விட்டு சிரியா அகதி முசூன் அல்மெலெஹான், யுனிசெபின் நல்லெண்ணத் தூதராக நியமிக்கப்பட்டுள்ளார். 19 வயதான இவர் இதன்மூலம் யுனிசெபின் இளம் தூதர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

2013ஆம் ஆண்டு நடைபெற்ற சிரிய உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்டு அகதியாக ஜோர்தானுக்கு புலம்பெயர்ந்தார் சிறுமி முசூன். மேலும் அவர் புலம் பெயர்ந்தவர்களின் கல்வி குறித்து தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறார்.

இதனால் அவருக்கு இந்த கௌரவம் அளிக்கப்பட்டுள்ளது. முன்னதாக இது குறித்து பேசிய முசூன் சிறு வயதில் இருந்தபோதே கல்விதான் எனது எதிர்காலத்தை தீர்மானிக்கும் என்று தோன்றியது. நான் சிரியாவிலிருந்து வெளியேறியபோது எனது புத்தகங்களை மட்டுமே எடுத்துக் கொண்டேன்' எனத் தெரிவித்துள்ளார்.

## குழந்தையை அந்தரத்தில் தொங்கவிட்டு பேஸ்புக்கில் 1000 லைக்ஸ் கேட்ட தந்தை



பேஸ்புக்கில் அதிக லைக்ஸ் வாங்க வேண்டும் என்பதற்காக, தனது குழந்தையை உயரமான மாடியிலிருந்து வெளியே நீட்டி, விபரீதச் செயலைச் செய்திருக்கிறார், அல்ஜீரியத் தந்தையொருவர்.

பேஸ்புக்கில் 1,000 லைக்குகள் வாங்க வேண்டும் என்பதற்காக, 15ஆவது மாடியின் ஜன்னலிலிருந்து தன் குழந்தையின் சட்டையைப் பிடித்து அந்தரத்தில் தொங்கவிட்டிருக்கிறார். குழந்தை அந்தரத்தில் தொங்கிக்கொண்டிருக்கும்போது புகைப்படம் எடுத்து, அதை பேஸ்புக்கில் பதிவுவேற்றி, ''எனக்கு 1,000 லைக்குகள் வேண்டும்; இல்லையென்றால் குழந்தையை விட்டுவிடுவேன்'' என்ற வாசகத்தையும் பதிவுசெய்திருக்கிறார்.

இதை, பேஸ்புக்கில் பார்த்து அதிர்ச்சியடைந்த மக்கள், குழந்தையை மீட்கக் கோரியும், குழந்தையின் தந்தையைக் கைதுசெய்யவும் உடனடியாகக் பொலிஸில் முறையிட்டுள்ளனர். இதனால், சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், 'குழந்தையின் பாதுகாப்புக்குப் பாதிப்பு உண்டாக்கியதாகக் குற்றச்சாட்டு பதிவுசெய்யப்பட்டு' அந்தக் கொடூரத் தந்தையைக் கைதுசெய்ததோடு மட்டுமல்லாமல், குழந்தையையும் பத்திரமாக மீட்டுள்ளனர்.

இந்நிலையில், அந்த நபருக்கு 2 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

## பாலின பாகுபாடுமின்றி அனைவரும் சமமாக வழிபடுவதற்கான பள்ளிவாசல்



ஆண், பெண் என பாலின பாகுபாடு மின்றி அனைவரும் சமமாக வழிபடுவதற்கான பள்ளிவாசலொன்று ஜெர்மனியின் பேர்லின் நகரில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஜெர்மனில் 40 இலட்சத்திற்கும் மேலான இஸ்லாமியர்கள் வாழ்கின்றனர். இந்த பள்ளிவாசலுக்கு வரும் பெண்கள் பர்தாவை அணிந்து வர அவசியமில்லை என்றும், இமாம்கள் போல் பெண்களும் போதிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மதத்தின் பேரால் உலகெங்கும் வன்முறை சம்பவங்கள் அதிகரித்து வரும் நிலையில், சமத்துவத்தை விரும்பும் இஸ்லாமியர்களின் முகங்கள் தெரிய வேண்டும் என்று இந்த பள்ளிவாசலை திறப்பதற்காக 8 ஆண்டுகளுக்கு மேல் போராடி வந்த செய்ரன் ஏட்ஸ் என்ற வழக்கறிஞர் தெரிவித்துள்ளார்.

### லண்டன் 'கிரன்பெல் டவர்' தீ:

## உயிரிழப்புகள் 79ஆக அதிகரிப்பு ஒரே அறையில் 42 சடலங்கள்

லண்டனின் கிரன்பெல் டவர் அடுக்குமாடி குடியிருப்பில் நடந்த தீ விபத்தின் உயிரிழப்புகளின் எண்ணிக்கை 79 ஆக அதிகரித்துள்ள நிலையில், குறித்த அடுக்குமாடியில் ஒரே அறையில் 42 சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

லண்டன் கிரன்பெல் டவர் அடுக்குமாடி குடியிருப்பில் கடந்த 14ஆம் திகதி பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. தீ விபத்து நிகழ்ந்த கட்டடத்தில் சோதனை செய்து வரும் பொலிஸார் வெளியிட்டுள்ள தகவலில், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 79 ஆக அதிகரித்துள்ளது என தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவிக்கையில் ''கட்டடம் மிகவும் சேதமடைந்துள்ள இந்நிலையில் விரைவாக தேடுதல் பணியை முடக்கி விடுவது ஆபத்தை ஏற்படுத்தும். கட்டடத்திற்குள் உயிரிழந்தவர்களின் சிலரை அடையாளம் காண்பது சிரமாக உள்ளது. எனவே, தேடுதல் பணி சில வாரங்கள் வரை தொடரும்'' என தெரிவித்துள்ளார்.

தீ விபத்து நிகழ்ந்து இரண்டு தினங்களுக்கு பின்னர் கட்டடத்திற்குள் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 100 வரை அதிகரிக்க வாய்ப்புள்ளது என பொலிஸார் ஏற்கனவே தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் நபர் ஒருவர் யூடியூபில், அடுக்குமாடி குடியிருப்பில் நடந்த தீ விபத்தின் போது, 42 உடல்கள் ஒரே அறையில் இருந்ததாகவும், அதில் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை என அனைவரும் இருந்ததாகவும், ஆனால், அவர்கள் அனைவரும் அடையாளம் காணப்படமுடியாத நிலையில் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

## உலகச் செய்திகள்

## பலஸ்தீனில் இஸ்ரேலின் புதிய யூத குடியிருப்புகள்



பலஸ்தீனத்தின் மேற்குக் கரைப் பகுதியில் இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ள பகுதியில் புதிதாக யூதக் குடியிருப்புகளை அமைக்க அந்த நாட்டுப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு உத்தரவிட்டுள்ளார்.

பாலஸ்தீனப் பிரச்சினையில் யூதக் குடியிருப்புகள் மிக முக்கியப் பங்கு வகிக்கும் நிலையில், அமெரிக்காவின் அமைதி முயற்சிகளுக்கு இடையே இந்த அறிவிப்பு வெளியாகியிருப்பது குறிப்பிடத்தக்கது.

19

2017 ஜூன் 22
ஹிஜ்ரி 1438 ரமழான் 27

நவமணி மற்றும் ஜம்மியத்துஷ் ஷபாப் நிறுவனம்
ஐந்தாவது தடவையாக இணைந்து நடாத்தும்
மாபெரும் பரிசுப்போட்டி

ரமழான் முபாறக்
பரிசு மழை
நவமணி

**போட்டி - 01**
(திங்கள் – வெள்ளி)
1ஆம் பரிசு : உம்ரா பொதி
2ஆம் பரிசு : மடிக் கணனி
3ஆம் பரிசு : கணனி
22 ஆறுதல் பரிசுகள்

**போட்டி - 02**
(வெள்ளிக்கிழமை)
கட்டுரைப் போட்டியில் முதல் 3 இடங்களுக்கு பெறுமதியான பரிசில், நினைவுச் சின்னம், சான்றிதழ் வழங்கப்படும்

**போட்டி நிபந்தனைகள்**

- தினமும் 5 கேள்விகள்
- 30 நாள் கேள்விகளில் 25 நாட்களுக்கு மாத்திரம் விடையளித்தல் போதுமானது. (5 நாட்களுக்கு விடையளிக்காது விடலாம்)
- வெள்ளிக்கிழமைகளில் வழங்கப்படும் தலைப்புக்கு (போட்டி 02) 200 சொற்களில் கட்டுரை எழுதி அனுப்பவேண்டும்.
- போட்டி 02 இல் பங்குபற்றுவது விருப்பத்துக்குரியது
- போட்டி 01 மற்றும் 02 இற்கான விடைகளை ஒட்டுமொத்தமாக ஜூலை 15ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவையுங்கள். தனியாக அனுப்பப்படுபவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- போட்டிகளின் முடிவுத்திகதி – ஜூலை 15, 2017

1. ஸஹாபாக்களில் இறுதியாக மரணமெய்தியவர் யார்?
2. 'குர்வுன்' எனும் அரபுப்பதம் எதனைக் குறிக்கிறது?
3. 'அல் - கிதாஸ்' எனும் பெயர் அறியப்படும் சூறா எது?
4. 'நார்' எனும் சொல் அல் - குர்ஆனில் எத்தனை தடவைகள் இடம்பெற்றுள்ளது?
5. 'ஸஹீஹ் முஸ்லிமில்' எத்தனை ஹதீஸ்கள் இடம்பெற்றுள்ளன?

நவமணி **போட்டி - 19**
**22.06.2017 - வியாழக்கிழமை** நவமணி

பெயர் : ..........
முகவரி : ..........
தொலைபேசி : ..........
தே.அ.அ. இல. : ..........
கையொப்பம் : ..........

Freelanka Media Ltd, 156, Hospital Road, Kalubowila, Dehiwala

மேலதிக விபரங்களுக்கு
எம்.எஸ்.எம். சாஜஹான் - 0778751032,
வாரித் - 0772604964, அஷ்ஷெய்க் ரிஷாத் 077 2415415

## கடுமையான...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

மூன்று தடவைகள் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார்.

கொழும்பு, கொம்பனித் தெரு, நிப்போன் ஹொட்டலில் வட்டரக்க விஜித தேரர் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அத்துமீறி நுழைந்து குழப்பத்தை ஏற்படுத்தியமை மற்றும் கொம்பனித் தெரு பொலிஸில் வைத்து குர்-ஆனை அவமதித்தமை ஆகிய வழக்குகள் தொடர்பிலான விசாரணைகளுக்கு நீதிமன்றில் ஆஜராக வேண்டும் என்று ஞானசார தேரருக்கு உத்தரவிடப்பட்டிருந்தது.

எனினும், தனக்கு உயிர் அச்சுறுத்தல் இருப்பதாக பொலிஸாருக்கு முறைப்பாடொன்றை வழங்கியிருந்த அத்தேரர், தொடர்ந்தும் இதுகுறித்த விசாரணைக்கு சமூகமளிக்காதமையால் நீதிமன்றினால் அவருக்கு எதிராக கடந்த சில வாரங்களுக்கு முன்னர் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

இதற்காக இவரை தேடும் நடவடிக்கையில் நான்கு விசேடப் பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டதோடு, குறித்த தேரர் வெளிநாடுகளுக்குத் தப்பிச் செல்ல முடியாதவகையில் அவரின் கடவுச்சீட்டும் முடக்கிவிடப்பட்டிருந்தது. இந்நிலையில், இவருக்கு அரசின் அனுசரணை கிடைத்துக்கொண்டிருக்கின்றது என்றும் அமைச்சரான விஜயதாஸ ராஜபக்ஷவின் பாதுகாப்பில் தான் அவர் இருக்கிறார் என்றும் சில தரப்புக்களால் பகிரங்கமாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இவ்வாறு தேரர் தொடர்பிலான சர்ச்சைகள் நாளுக்கு நாள் அதிகரித்து, பாராளுமன்றிலும் இவ்விவகாரம் ஒரு பேசுபொருளாக மாறியுள்ள நிலையிலேயே நேற்று காலை 10 மணியளவில் திடீரென கொழும்பு, நீதிவான் நீதிமன்றில் இவர் ஆஜரானார். இதன்போது விஜித தேரரின் ஊடகவியலாளர் மாநாட்டில் அத்துமீறி நுழைந்தமை, வெலிக்கடையில் கடமையில் இருந்த பொலிஸாருக்கு இடையூறு விளைவித்தமை மற்றும் பொலன்னறுவையில் வைத்து அல் குர்-ஆன் மற்றும் அல்லாஹ்வை அவமதித்தமை ஆகிய மூன்று வழக்குகளின் கீழ் திட்டமிடல் குற்றத்தடுப்புப் பிரிவினரால் ஞானசார தேரர் கைது செய்யப்பட்டார்.

ஒரு வழக்கில் முன்பிணையில் கைது செய்யப்பட்ட இவர், பின்னர் ஒரு வழக்கில், ஒரு இலட்சம் தனிநபர் பிணை மற்றும் 2 சரீரப் பிணையிலும், இன்னொரு வழக்கில் 10 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் 5 இலட்சம் ரூபா சரீரப் பிணை இரண்டிலும் மேலதிக நீதிவான் புத்திக ஸ்ரீ ராகலவினால் விடுவிக்கப்பட்டார்.

அத்தோடு, இவ்விவகாரத்தில் பொலிஸார் செயற்பட்ட விதம் குறித்து தனது அதிருப்தியை வெளியிட்ட நீதிவான் புத்திக ஸ்ரீ ராகல, இவ்வாறான சம்பவங்களில் இனிமேல் ஈடுபட்டால் தற்போது வழங்கப்பட்டுள்ள பிணை இரத்து செய்யப்படும் என்று ஞானசார தேரருக்கும் கடுமையான எச்சரிக்கையும் விடுத்தார்.

மேலும், இவ்விவகாரம் குறித்த அடுத்தக்கட்ட விசாரணைகள் எதிர்வரும் ஓகஸ்ட் 10 ஆம் திகதி நடைபெறும் என்றும் அப்போது ஞானசார தேரர் நீதிமன்றில் ஆஜராக வேண்டும் என்றும் நீதிவான் உத்தரவிட்டார்.

இவ்வழக்கு விசாரணைகளின்போது ஞானசார தேரர் சார்பில், ஜனாதிபதி சட்டத்தரணியான டிரந்த வலலியத்த, ஐயந்த டயஸ் நாணயக்கார, சுதர்சனி குணரத்ன ஆகிய வழக்கறிஞர்கள் ஆஜராகியிருந்ததோடு, ஞானசார தேரருக்கு உயிராபத்து காணப்படுவதால், நீதிமன்றுக்கு ஆஜராகும்போது உரிய பாதுகாப்பு வழங்குமாறு அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி டிரந்த வலலியத்த நீதிமன்றிற்கு சுட்டிக்காட்டினார் என்பதும் ஞானசார தேரர் நீதிமன்றில் ஆஜராகியிருந்தபோது நீதிமன்ற வளாகத்தைச் சூழ பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஞானசார...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

திணைக்களத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அதாவது, இனவாத செயற்பாடுகள் தொடர்பில் எமக்கு இரண்டு வகையான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அதில் முதலாவது வகையான, இனவாதத் தாக்குதல் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கு இணங்க இதுவரை 12 சிங்களவர், இரண்டு முஸ்லிம்கள், ஒரு தமிழர் என மொத்தமாக 15 பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அடுத்ததாக, இனவாத மற்றும் வெறுப்புப் பிரசாரங்கள் குறித்து இதுவரையிலும் கிடைக்கப்பெற்றுள்ள 21 முறைப்பாடுகள் தொடர்பிலான விசாரணைகளையும் நாம் ஆரம்பித்துவிட்டோம்.

இதில், அமைச்சர் ரிஷாத், ஞானசார தேரர், சிவாஜிலிங்கம் ஆகியோருக்கு எதிராகவும் முறைப்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன. இனவாதத்தை எவர் வெளியிட்டாலும் அவருக்கு எதிராக பாரபட்சம் பாராது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதால் தற்போதே இதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. இதற்காக சட்டமா அதிபரின் ஆலோசனையையும் நாம் பெற்றுக்கொள்வோம் என்று தெரிவித்தார்.

## சுகாதார...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பல்கலைக்கழக மாணவர்களை கட்டுப்படுத்த பொலிஸ் அதிரடிப்படை களத்தில் இறங்கவேண்டுமென சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க உத்தரவிட்டார்.

அதனடிப்படையில், பல்கலைக்கழக மாணவர்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தைக் கலைக்க பொலிஸார் பொல்லுகள் மற்றும் நீர்த்தாரை பிரயோகத்தை மேற்கொண்டனர்.

சுகாதார அமைச்சுக்குள் அத்துமீறி போராட்டக்காரர்கள் நுழைய முற்பட்டதை அடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால் 30 மாணவர்கள் படுகாயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், இருதரப்பினருக்கிடையில் ஏற்பட்ட மோதலில் அமைச்சின் சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது. நீர்த்தாரை பிரயோகத்தினால் குறித்த மாணவர்கள் கொழும்பு மாநகரசபையை நோக்கி சென்றனர்.

இதேநேரம், கொழும்பு, கோட்டை பகுதியில் இடம்பெறவிருந்த சைட்டம் நிறுவனத்திற்கு எதிரான போராட்டம் அமைதியாக நடத்தப்பட வேண்டும் என கோட்டை நீதவான் நீதிமன்றம் முன்னதாகவே உத்தரவு பிறப்பித்திருந்தது.

இதன்படி, பேரணி, போராட்டத்தை அமைதியாகவும் சட்ட ரீதியான முறையிலும் நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக, பொலிஸ் தலைமையகம் குறிப்பிட்டது.

மேலும், பொது மக்கள் மற்றும் வாகனங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் குறித்த போராட்டத்தை நடத்த வேண்டும் என குறிப்பிட்டுள்ள நீதிமன்றம், ஜனாதிபதி செயலகத்திற்குள் அத்துமீறி நுழைவது மற்றும் அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் வகையிலான நடவடிக்கைகளுக்கும் தடை விதித்து உத்தரவு பிறப்பித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## அசாத்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அசாத் சாலி ஊடகவியலாளர் மாநாடொன்றில் கருத்து வெளியிட்டதாக சிங்கலே அமைப்பின் சாலிய ரணவன பொலிஸ் தலைமையகத்தில் மேற்கொண்டிருந்த முறைப்பாட்டிற்கமையவே மேற்படி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அசாத் சாலிக்கெதிரான குற்றச்சாட்டை விசாரணை செய்ய வீடியோ ஆதாரங்களை பெற கொழும்பு பிரதான நீதிவானுக்கு திட்டமிட்ட குற்றங்கள் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஜனக குமார சமர்ப்பித்திருந்த பீ அறிக்கைக்கமையவே மூன்று தொலைக்காட்சி நிறுவனங்களில் இருந்து வீடியோ காட்சிகளை பெற உத்தரவிட்டுள்ளார்.

அசாத் சாலி கடந்த 2016 ஜூலை 2ஆம் திகதி நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பே இவ்வாறு சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பில் விசாரணைகள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவால் திட்டமிட்ட குற்றங்கள் தடுப்புப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையிலேயே நேற்று முன் தினம் சிறப்பு பீ அறிக்கை ஒன்றினை தாக்கல் செய்து அசாத் சாலிக்கு எதிரான விசாரணைகள் தொடர்பில் சாட்சிகளைப் பெற்றுக் கொள்ள அனுமதி பெறப்பட்டுள்ளது.

இந்த தேரர் கூடுதலாக துள்ளினால் குண்டைக் கட்டிக்கொண்டு தற்கொலை தாக்குதல் நடத்துவேன் என அசாத் சாலி ஊடகவியலாளர் சந்திப்பில் குறிப்பிட்டதாகவும் முறைப்பாட்டாளர் தனது முறைப்பாட்டில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந் நிலையிலேயே இது தொடர்பில் திட்டமிட்ட குற்றங்கள் தடுப்புப் பிரிவு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## ரயில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

யில், பிரதமர் ரணில் விக்கரமசிங்கவின் செயலாளரான சமன் ஏக்கநாயக்கவுடன் நேற்று முன்தினமும், நேற்றையதினமும் கலந்துரையாடலில் குறித்த சங்கத்தினர் ஈடுபட்டுள்ளதோடு, கலந்துரையாடலில் சுமுகமான தீர்மானம் எட்டப்பட்டதனையடுத்து போராட்டம் கைவிடப்பட்டது.

அந்தவகையில், காவலர்கள் மற்றும் புகையிரத ஓட்டுநர்களின் தரங்களில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் குறித்து புகையிரத என்ஜின் ஓட்டுநர்கள் சங்கத்தினால் நேற்றுமுன்தினம் நள்ளிரவில் வேலைநிறுத்தப் போராட்டம் முன்னெடுப்பட்டிருந்த நிலையில் நேற்றுமுன்தினம் பிரதமரின் செயலாளரின் கலந்துரையாடலின் பின்னர் தற்காலிகமாக கைவிடப்பட்டது.

போக்குவரத்து அமைச்சரின் செயலாளருடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் எவ்வித தீர்வுகளும் எடுக்கப்படாத நிலையில் இச்சங்கம் வேலைநிறுத்த போராட்டத்தை முன்னெடுக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## ஐ.நாவின்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அமைச்சர்கள் அடங்கிய குழுவொன்றை நியமிப்பதற்கும், அக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக அதிகாரிகள் அடங்கிய குழுவொன்றை அமைப்பதற்கும் தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## உண்மையான...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

நிகழ்வுகளை நோக்குகையில் அந் நோக்கம் பொலிஸாருக்கு இருந்ததா, இல்லையா என்பதை இலகுவில் புரிந்துகொள்ள முடிகிறது எனவும் சிராஸ் நூர்தீன் சுட்டிக்காட்டினார்.

# சகல வசதிகளும் கொண்ட வைத்தியசாலை கிழக்கில்

கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் மற்றும் அமெரிக்க தூதரக அதிகாரிகளுக்கிடையிலான சந்திப்பொன்று நேற்று பிற்பகல் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண சபைக்கட்டடத்தில் நேற்று இடம்பெற்ற இந்த சந்திப்பில் ஐக்கிய அமெரிக்க தூதரக அதிகாரிகளான ராபர்ட் ஹோல்புரூக்,ஸ்டீபன் எம் பாக்ஸ்டன் ஆகியோர் பங்கேற்றதுடன் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான ஞா.கிருஷ்ணபிள்ளை,எம் லாஹிர் உட்பட முதலமைச்சின் செயலாளர் யூ எல் ஏ அசீஸ் ஆகியோரும் பங்கேற்றனர்.

இதன் போது கிழக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளை அபிவிருத்தி செய்வது தொடர்பில் இதன் போது கலந்துரையாடப்பட்டது. அமெரிக்க நிதியுதவியுடன் கிழக்கில் சில பாடசாலைகளின் திருத்தப்பணிகள் மற்றும் அபிவிருத்திகள் இடம்பெற்று வரும் நிலையில் கிழக்கின் பின்தங்கிய பகுதிகளில் உள்ள பாடசாலைகளுக்கு இந்த திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கான யோசனைகள் கிழக்கு முதலமைச்சரால் முன்வைக்கப்பட்டன.

அத்துடன் வைத்தியசாலையின் வசதிகளை மேம்படுத்தல் மற்றும் கிழக்கு முதல்வரின் கனவுத் திட்டமான சகல வசதிகளையும் கொண்ட வைத்தியசாலையொன்றை கிழக்கில் உருவாக்குவதற்கு அமெரிக்கா உதவ முன்வர வேண்டும் என கிழக்கு முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் கேட்டுக்கொண்டார்.

# நேத்ரா ரீவி யில் நோன்புப் பெருநாள் விசேட நிகழ்ச்சி

எதிர்வரும் நோன்புப் பெருநாள் தினத்தன்று ரூபவாஹினி நேத்ரா அலைவரிசையில் மாலை 3 மணி முதல் 6 மணிவரை பெருநாள் விசேட நிகழ்ச்சி ஒளிபரப்பாகும்.

முஸ்லிம் சேவை பணிப்பாளர் எம்.கே.எம். யூனுஸ் மேற்பார்வையில் நடைபெறும் நிகழ்ச்சிகளை மபாஹிர் மௌலானா, ஹஸாரியா பேகம், முபாரக் மொஹிதீன், சீ.பி. எம். ஷியாம் ஆகியோர் வழங்குகின்றனர்.

எடிட்டிங் திவான் முஹம்மத், கிராபிக்ஸ் எனிமேஷன் பணி ஹஸ்மத் ஸஜீ ஆகியோரும் மேற்கொண்டுள்ளனர்.

சட்டத்தரணிகளான மர்சூம் மௌலானா மற்றும் அஷ்ஷெய்க் இஸட்.ஏ. அஷ்ரப் (நளீமி) ஆகியோர் சிறப்பதிதிகளாகக் கலந்துகொண்டு தேசிய சர்வதேச மட்டத்தில் முஸ்லிம்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் குறித்து ஒரு தொடர் கலந்துரையாடலை வழங்குகின்றனர்.

இந் நிகழ்ச்சியில் தமிழ், மலையாள சிறுவர் பாடல்களும், சிங்கள மொழியில் நோன்பு பற்றிய விவரணமும் இடம்பெறுகிறது. இக்காமம் ஏ.எல்.ஜபீர் எழுத திரைக்கதை, வசனம், இயக்கம் ஆகிய பொறுப்புகளை மபாஹிர் மௌலானா ஏற்றுள்ள 'ஆனந்தத்தில் ஓர் அனல்' எனும் சமூக நாடகம் ஒளிபரப்பாகும்.

ஹஸாரியா பேகம் தயாரித்து வழங்கும் இசைத்தென்றல் இஸ்லாமிய கீத நிகழ்ச்சி மூத்த இசையமைப்பாளர் கே.எம். சவாஹிரின் இசையமைப்பில் இடம்பெறும். என்.நஜ்முல் ஹுசைன், ராஹிலா ஹலாம், காத்தான்குடி மதியன்பன், எம்.சி.முஹம்மத் அலி, கம்மல்துறை இக்பால் ஆகியோரின் பாடல் வரிகளுக்கு பிரபல பாடகர் டோனி ஹஸன், உபைதுல்லாஹ் மஹ்தூம், ஷப்னாஸ் சமுருதீன், சிம்லா மாஹிர், எம். சி.முஹம்மத் அலி ஆகியோர் குரல் கொடுக்கின்றனர். இந்த நிகழ்ச்சியினை ஒலுவில் ஜே. வஹாப்தீன் தொகுத்து வழங்குகிறார்.

முத்தாய்ப்பு நிகழ்ச்சியாக தமிழ்த் தென்றல் அலி அக்பர் தலைமையில் நோன்புப் பெருநாள் விசேட கவியரங்கம் இடம்பெறும். மன்னார் விடத்தல்தீவு சுஜப் ஏ.காசிம், பாணந்துறை கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ், காத்தான்குடி முகைதீன் சாலி ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

## பிக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

கைது செய்ய முடியாது போனது என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளரான பிரியந்த ஜயகொடி தெரிவித்தார்.

அத்தோடு, ஞானசார தேரரை கைது செய்யமுடியாது போனமையானது தமக்கான வெற்றியல்ல என்றும் அவர் குறிப்பிட்டார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று மதியம் இடம்பெற்ற அமைச்சரவையின் வாராந்த முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டிருந்த பேச்சாளரிடம், ஞானசார தேரரை கைது செய்ய முடியாது போன காரணம் குறித்து வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அதாவது, பொலிஸார் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்து சிவில் இடங்களுக்கு சர்வசாதாரணமாக செல்ல முடியும். ஆனால், இந்த நடைமுறை விகாரைகளுக்குள் சாத்தியப்படாது.

அதேபோல், ஒரு குற்றத்துக்காக பொது மகன் ஒருவரை கைது செய்வதற்கும் தேரர் ஒருவரை கைது செய்வதற்கும் இடையில் பாரிய வித்தியாசங்கள் காணப்படுகின்றன. இதன் காரணமாகவே எம்மால் ஞானசார தேரரை கைது செய்ய முடியாது போனது என்பதை அனைவரும் புரிந்துக்கொள்ள வேண்டும்.

அத்தோடு, நாமும் அவரை கைது செய்ய கடந்த மூன்று வாரங்களாக தொடர்ந்தும் நடவடிக்கை எடுத்துக்கொண்டு தானே இருந்தோம். எனினும், எம்மால் கைது செய்ய முடியாது போய்விட்டது என்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம். இவ்விடயமானது நிச்சயமாக எமக்கு வெற்றியான ஒன்றல்ல என்றுத் தெரிவித்தார்.

## முஸ்லிம்களுக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அமெரிக்கத்தூதுவர் அதுல் கேசாப் தெரிவித்தார்.

இலங்கைக்கான அமெரிக்க தூதரகம் ஏற்பாடுசெய்திருந்த இப்தார் நிகழ்வு மட்டக்களப்பு ஈஸ்ட் லகூன் ஹோட்டேலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் எம்.எம்.எம்.நாஜிம் உள்ளிட்ட கல்வியாளர்களும் வர்த்தகம் மற்றும் ஊடகத்துறையினரும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அதுல் கேசாப்,

இனங்களுக்கு இடையேயான ஒற்றுமையின் ஊடாகவே நாட்டை அபிவிருத்தி செய்யமுடியும் என்றும் அமெரிக்கா, இலங்கையில் சமாதானத்துக்காகவும் அபிவிருத்திக்காகவும் கடந்தகாலங்களில் பல்வேறு வகையில் பொருளாதார மற்றும் இராஜதந்திர முறைகளில் உதவிவருவதாகவும் எதிர்காலத்திலும் இவ்வாறான செயற்பாடுகளில் அதிக கரிசனை செலுத்தும் என்றும் தெரிவித்தார்.

இப்தார் நிகழ்வில் மட்டக்களப்பு ஜாமிஆ பள்ளிவாசலின் பிரதம கதீப் அஷ்செய்க் நளீம் பலாஹி மார்க்கச் சொற்பொழிவாற்றினார்.

நிகழ்வில் இலங்கைக்கான அமெரிக்க தூதரக உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டிருந்த அதேவேளை கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கான நகர்வுகளை இலங்கைக்கான அமெரிக்க தூதரகத்தைச் சேர்ந்த ஏ.ஜெ.எம்.நௌசாத் மேற்கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## அஸ்கிரிய...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பதிலை அரசு இன்று வியாழன் அல்லது நாளை வெள்ளிக்கிழமை வழங்கும் என்று அமைச்சரவையின் இணைப் பேச்சாளரும் சுகாதார அமைச்சருமான ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவையின் வாராந்த முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டிருந்த அவரிடம், இவ்விவகாரம் குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அதாவது, பௌத்த மதம் மற்றும் தொல்பொருட்களை பாதுகாக்கும் பொருட்டு செயற்படும் தேரர் ஒருவருக்கு இனவாத முத்திரைக் குத்துவது பிழையான செயற்பாடாகும் என்று ஞானசார தேரருக்கு சார்பாக அஸ்கிரிய பீடத்தால் அறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது. இதுதொடர்பில் அரசின் நிலைப்பாடு என்ன? என்று வினவப்பட்டது.

இதற்கு விடைக்கொடுத்த அமைச்சர் ராஜித, ஞானசார தேரர் தொடர்பில் சட்டம் தான் செயற்பட்டு வருகின்றது. அத்தோடு, அவருக்கு எதிராக மட்டுமன்றி இனவாதக் கருத்துக்களை பரப்பிய ஏனைய நபர்களுக்கு எதிராகவும் தற்போது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டே உள்ளது.

நாட்டின் சட்டமானது அனைவருக்கும் பொதுவானதாகும். இதற்கு தேரர் மட்டுமன்றி ஏனைய மதகுருமார்களும் கட்டுப்பட்டே ஆகவேண்டும்.

மேலும், தேரர் ஒருவர் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்ற ஒழுக்கமும் இருக்கின்றது. இவற்றையெல்லாம் ஆராய்ந்து நாம் நாளை (இன்று) நாளை மறுதினம் (நாளை) அஸ்கிரிய பீடத்துக்கான உரிய பதிலை வழங்குவோம் என்றார்.

## மகாநாயக்க...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அதற்கு வருத்தம் தெரிவித்து மன்னிப்பு கோருவதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் இதனை கூறியுள்ளார்.

அஸ்கிரிய மாநாயக்க தேரர் உட்பட சங்க சபை நேற்று கூடிய போது வெளியிட்டுள்ள விசேட அறிக்கையில் தனக்கு எதிராக சில விடயங்களை முன்வைத்துள்ளதால், தான் அவர்களிடம் இந்த மன்னிப்பை கோரியதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஞானசார தேரரின் பெயரை மாத்திரம் பயன்படுத்தி, மரியாதை இன்றி பேசுவதாக மாநாயக்க தேரர் தன் மீது குற்றம் சுமத்தியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

எது எப்படி இருந்த போதிலும் கடந்த காலத்தில் ஞானசார தேரர், வெளிநாடுகளிலும் இலங்கையிலும் நடந்து கொண்ட விதத்தை எண்ணிப் பார்த்ததால், அவர் மீது இருந்த மரியாதை குறைந்து போனது என்றும் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

## ரோஹிங்கிய...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தடையாக இருந்த மொழிபெயர்ப்பாளர்கள் பிரச்சினைக்கு நேற்று நீதிமன்றத்தால் தீர்வு வழங்கப்பட்டது.

அங்கீகரிக்கட்ட ரோஹிங்கிய மொழிப் பெயர்ப்பாளர்கள் நாட்டில் இல்லாத நிலையில் அந்த மொழி தெரிந்த எவரையும் பயன்படுத்தி வாக்குமூலம் பெறுமாறு நேற்று நீதிமன்றம் பொலிஸாருக்கு அனுமதி வழங்கியது.

இதன்படி இப்பத்திரிகை அச்சுக்குப் போகும் வரை பொலிஸார் ரோஹிங்கிய மொழி தெரிந்த மொழி பெயர்ப்பாளர்களின் உதவியுடன் குறித்த யுவதியிடமிருந்து வாக்குமூலத்தைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதேநேரம் வெளிவிவகார அமைச்சு மியன்மார் தூதுவராலயத்தின் ஊடாக ரோஹிங்கிய மொழிபெயர்ப்பாளர் ஒருவரை பெற்றுக்கொள்ள விடுத்த வேண்டுகோளுக்கு நேற்று காலை கொழும்பிலுள்ள மியன்மார் தூதுவராலயம் பதில் அளித்தனர்.

குறித்த யுவதி தங்களது நாட்டைச் சேர்ந்தவர் அல்ல எனவும், அவ்வாறு ரோஹின்யா மொழிப் பேசக்கூடியவர்கள் தங்களது தூதுவராலயத்தில் கடமை புரியவில்லை எனவும் வெளிவிவகார அமைச்சினூடாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

கடந்த 17ஆம் திகதி மிரிஹான தடுப்பு முகாமில் குறித்த 21 வயதான யுவதி தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து குறித்த யுவதி சுகவீனமடைந்த காரணத்தினால் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தடுப்புக் காவலில் ஏற்பட்ட நட்பின் அடிப்படையில் பாதுக்க பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வரும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் குறித்த யுவதியை பார்வையிட வைத்தியசாலைக்கு சென்றுள்ளார். அதன் பின்னர் பொலிஸ் கான்ஸ்டபிள் குறித்த மியன்மார் யுவதியை முகாமுக்கு அழைத்துச் செல்வதாகக் கூறி கையெழுத்திட்டு வெளியே அழைத்துச் சென்றுள்ளார்.

அதன்பிறகு ஹோட்டல் அறை ஒன்றுக்கு அழைத்துச் சென்றுள்ள குறித்த பொலிஸ் கான்ஸ்டபிள் குறித்த யுவதியை பாலியல் பலாத்காரம் செய்துவிட்டு தடுப்பு முகாமிற்கு அருகில் கைவிட்டுச் சென்றுள்ளார். இந்த வாக்குமூலத்தின் படி குறித்த பொலிஸ் கான்ஸ்டபிள் எதிராக கொஹுவலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மறுபடியும் சுகவீனமடைந்த யுவதி வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கை ஊடாக அவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டது.

ஆனால் ரோஹின்யா மொழிபெயர்ப்பு செய்யக்கூடிய அம்மொழியை நன்கு பேசுகின்ற நபர் ஒருவரின் உதவி கிடைக்காத காரணத்தால் பொலிஸார் குறித்த வாக்குமூலத்தை உறுதி செய்வதில் தயக்கம் காட்டி வந்தமை குறிப்பிடத்தக்கது.

## தடைகள்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

கட்டார் மீது விதித்த தடை அந்த நாடுகளுக்கு ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாக கட்டாரில் வெளிவரும் பெனின்சுலா பத்திரிகையின் பிரதம ஆசிரியர் கலாநிதி காலித் முபாரக் அல் ஷாபி தெரிவித்துள்ளார். கட்டார் டிவியில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான நெருக்கடியான நிலைகளை எதிர் கொள்வதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைளையும் கட்டார் அரசு நீண்ட நாட்களுக்கு முன்பே மேற்கொண்டிருந்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, இந்த நிலைமை தொடர்பில் கட்டார் எந்த ஒரு நாட்டிலோ அல்லது அமைப்பிலோ தங்கி நிற்பதில்லை என தெரிவித்த அவர், ஐக்கிய நாடுகள் சபையிடமோ தங்கிநிற்பதில்லை என தெரிவித்தார்.

பலஸ்தீன் பிரச்சினை போன்ற ஏனைய பிரச்சினைகளுக்கு இந்த அமைப்புகள் மூலம் இன்றும் தீர்வு காணப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உண்மையில், இந்த தடையின் எந்த விதமான விளைவுகளையும் நாம் உணரவில்லை, அது ஊடகப் பிரச்சாரங்களின் மட்டுமே காணப்படுகின்றது. என கலாநிதி காலித் முபாரக் அல் ஷாபி மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# Sports

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் போட்டிகள்:

## அணித் தலைவராக மஞ்சுள நியமனம்: இலங்கைக் குழாம் 25இல் இந்தியா பயணம்



பீ.எப்.எம் நிஷாட்

எதிர்வரும் ஜுலை மாதம் 6ஆம் திகதி முதல் 9ஆம் திகதி வரை இந்தியாவின் ஒடிசாவில் நடைபெறவுள்ள 22ஆவது ஆசிய மெய்வல்லுனர் போட்டிகளில் பங்கேற்கும் 22 வீர, வீராங்கனைகள் மற்றும் 11 பேர் கொண்ட பயிற்சியாளர்களைக் கொண்ட இலங்கைக் குழாம் எதிர்வரும் 25ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) இந்தியா நோக்கி பயணமாகவுள்ளதுடன், போட்டித் தொடர் நடைபெறவுள்ள ஒடிசாவின் காலிங்கா மைதானத்தில் ஒருநாள் விசேட பயிற்சிகளிலும் இலங்கை அணி பங்குபற்றவுள்ளதாக இலங்கை மெய்வல்லுனர் சம்மேளனம் அறிவித்துள்ளது.

இந்நிலையில், ஆசிய மெய்வல்லுனர் போட்டித் தொடரில் பங்கேற்கும் வீரர்களுக்கு இந்திய மெய்வல்லுனர் சம்மேளனத்தின் பூரண அனுசரணையுடன் போட்டிகள் நடைபெறும் மைதானத்தில் விசேட பயிற்சிகளை மேற்கொள்வதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன்காரணமாக இம்முறை போட்டித் தொடரில் பங்கேற்கவுள்ள இலங்கை வீரர்களுக்கு அங்குள்ள காலநிலை மற்றும் களட்டு மைதானத்தில் பயிற்சி பெறும் வாய்ப்பும் கிட்டவுள்ளது.

இந்நிலையில், கடந்த சில தினங்களுக்கு முன் நிறைவடைந்த தாய்வான் மற்றும் கிரிகிஸ்தான் திறந்த மெய்வல்லுனர் பங்கேற்ற இலங்கை வீரர்கள் திறமைகளை வெளிப்படுத்தியிருந்த போதிலும், ஆசிய மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் போட்டிகளுக்கான அடைவு மட்டத்தை எந்தவொரு வீரரும் பூர்த்தி செய்யாத காரணத்தினால் இம்மாத முற்பகுதியில் தியகமவில் நடைபெற்ற தகுதிகாண் போட்டியில் திறமைகளை வெளிப்படுத்தி அடைவு மட்டத்தை பூர்த்தி செய்த தெரிவில் 20 வீரர்கள் மாத்திரமே இப்போட்டித் தொடரில் பங்கேற்கவுள்ளனர். அத்துடன் இதில் அடைவு மட்டத்தை நெருங்கிய நிமாலி மதுஷிகா, இதுனில் ஹேரத், சஜ்சய ரணிங்க மற்றும் ஹிமாஷ ஏஷான் ஆகிய வீரர்களும் இலங்கை குழாமில் இடம்பெற்றுள்ளனர்.

அத்துடன் இக்குழாமில் இடம் பெற்றுள்ள 11 வீரர்கள் அஞ்சலோட்டப் போட்டிகளில் பங்குபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. கடந்த காலங்களில் நடைபெற்ற ஆசிய மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றிகளைப் பெற்றுக்கொண்டுள்ள உயரம் பாய்தல் வீரர் மஞ்சுள குமார இம்முறை போட்டித் தொடரின் இலங்கை அணியின் தலைவராகச் செயற்படவுள்ளார்.

வீரர்கள் குழாம்:

விநோத் சுரன்ஜய சில்வா (100 மீற்றர், 200 மீற்றர் 4*100), அஜித் பிரேமகுமார (400 மீற்றர், 4*400), எச். எம்.திலிப் ருவன் (400 மீற்றர், 4*400), பிரதீப் குமார, தருஷ தனஞ்சய, காலிங்க குமாரகே (400*400), தனுக வியனபத்திரன, மஞ்சுள குமார (உயரம் பாய்தல்), வருண லக்ஷான் (ஈட்டி எறிதல்), சன்ஜய ஜயசிங்க (முப்பாய்ச்சல்), ஹிமாஷ ஏஷான் (100 மீற்றர், 4*100), இதுனில் ஹேரத்(800 மீற்றர்), ஷெஹான் அம்பேபிட்டிய, மொஹமட் அஷ்ரப் மற்றும் மொஹமட் சப்ரான் (4*100)

வீராங்கனைகள் குழாம்:

ருமேஷிகா ரட்நாயக்க (100, 200 மீற்றர்), நில்ஹானி லேகம்கே (ஈட்டி எறிதல்), நிமாலி லியனாரச்சி, கயன்திகா அபேரத்ன (800 மீற்றர்), விதூஷா லக்ஷானி (முப்பாய்ச்சல்), திலானி ரத்னாயக்க (3000 மீற்றர் தடை தாண்டல்), நிமாலி மதுஷிகா (400 மீற்றர்)

பயிற்றுவிப்பாளர்கள் குழாம்:

சஜித் ஜயலால், பிலிப் ரஞ்சித், பத்ரா குணவர்தன, ஏ.ஜே ரொட்ரிகோ, சமிந்த பெரேரா மற்றும் ஹரில் மெரெண்டா



பீ.எப்.எம் நிஷாட்

இலங்கை கிரிக்கெட் அணியில் உள்ள சில வீரர்கள் உள்ளூரில் பயிற்சிகளைப் பெற்று இந்தியாவில் போய் பணத்துக்காக விளையாடுவதாகவும், அவ்வாறு விளையாடுகின்ற வீரர்களும் எதிர்வரும் காலங்களில் தமது உடல் தகுதியை உறுதிப்படுத்திய பிறகுதான் தேசிய அணியில் விளையாட ஒப்புதல் அளிக்கப்படும் என விளையாட்டுத் துறை அமைச்சரும், அமைச்சரவை இணைப் பேச்சாளருமான அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

போட்டிகளில் பங்குபற்றுகின்ற வீரர்களுக்கு உடற் பயிற்சி அவசியம் என்றும்,எதிர்வரும் காலங்களில் போட்டிகளில் கலந்துகொள்ள செல்லும் வீரர்கள் உடல் தகுதிப் பரிசோதனைகளுக்கு முகங்கொடுக்க வேண்டும். அதில் தேர்ச்சி பெறும் வீரர்கள் மட்டுமே போட்டிகளுக்கு அனுமதிக்கப்படுவர்.மாறாக உடல் தகுதி அதிகக்கைகள் இல்லாமல் எவ்விதமான விளையாட்டு வீரர்களுக்கும் எதிர்வரும் காலங்களில் உடல் தகுதி அறிக்கையையும் ஆய்வு செய்த பிறகுதான் எந்தவொரு போட்டிகளிலும் பங்கேற்க சந்தர்ப்பம் வழங்கப்படும் எனவும், இதற்கு விரைவில் புதிய சட்டமொன்று கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

# உடல் தகுதி இல்லையேல்; அணியில் இடமில்லை

விளையாட்டுத்துறை அமைச்சர் மீண்டும் எச்சரிக்கை

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கலந்துகொண்ட போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையின் கூத்தம் இல்லாத காரணத்தால் இலங்கை வீரர்களுக்கு இராணுவப் பயிற்சி தேவையில்லை என வேகப்பந்துவீச்சாளர் லசித் மாலிங்க ஊடகமொன்றுக்கு தெரிவித்திருந்தார் ஊடகவியலாளர் ஒருவர் விளையாட்டுத்துறை அமைச்சரிடம் கேள்வி எழுப்பி இருந்தார்.இதற்கு அவர் பதிலளிக்கையில்,

ஒவ்வொரு வீரருக்கும் தனிப்பட்ட முறையில் பதிலளிக்க நான் தயாரில்லை.சம்பியன் கிண்ணப் போட்டிகளில் இலங்கை வீரர்கள் விளையாடிய விதம் தொடர்பில் தான் நான் எனது கருத்துக்களை முன்வைத்தேன். எனவே எதிர்வரும் காலங்களில் இலங்கை சார்பாக அணிகளுக்கும் ஒப்புதல் அளிக்கப்போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

குறிப்பாக, லசித் மாலிங்க, கடந்த 10 வருடங்களாக இலங்கை கிரிக்கெட் அணியில் பயிற்சிகளை பெற்று இந்தியாவில் போய் விளையாடி வருகின்றார். அவர் இலங்கைக்காக விளையாடியதை விட பணத்துக்காகவே உண்மையில் விளையாடியுள்ளார் என்பது அனைவரும் அறிந்த உண்மை. எனவே அவருக்கு முதலில் 50 ஓவர் போட்டியில் விளையாடுவதற்குத் தேவையான உடற்தகுதியை பெற்றுக்கொண்டு அணிக்காக விளையாடும் படி நான் கேட்டுக் கொள்கின்றேன். இலங்கை கிரிக்கெட் அணியில் உள்ள அனைவரும் மிகவும் திறமையானவர்கள்.அதுதொடர்பில் எந்தவொரு பிரச்சினையும் கிடையாது.கடந்த காலங்களில் இலங்கை அணியின் தோல்விக்கு உடல் தகுதி நிரூபிக்கப்படாமை முக்கிய காரணமாகும். எனவே மற்ற நாடுகளைப் போல எமது



## ஸ்ரீலங்கா சுப்பர் செவன் றக்பி ஜுலையில் கண்டியில் ஆரம்பம்



பீ.எப்.எம் நிஷாட்

2ஆவது ஸ்ரீலங்கா றக்பி சுப்பர் செவன் போட்டிகள் எதிர்வரும் ஜுலை மாதம் 8ஆம் மற்றும் 9ஆம் திகதிகளில் கண்டி நித்தவள மைதானத்தில் நடைபெறவுள்ளன. பின்னர் அதன் இரண்டாம் கட்டப் போட்டிகள் 15ஆம், 16ஆம் திகதிகளில் கொழும்பு குதிரைப் பந்தயத்திடல் மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இலங்கை றக்பி சம்மேளனம் மற்றும் பிரதான அனுசரணையாளரான டயலொக் அக்சியாடா ஆகியன இணைந்து நடாத்தும் இப்போட்டியில் கடந்த வருடம் பங்குபற்றிய 8 அணிகளான அக்சஸ் கிங்ஸ், காகில்ஸ் கிளேடியேட்டர்ஸ், டெசலாட் பந்தர்ஸ், EZY லூன்ஸ், KBSL ட்ரகன்ஸ், சொப்ட்லொஜிக் வொரியர்ஸ், மொபிடெல் ஈகல்ஸ் மற்றும் வாக்கர்ஸ் வைப்பர்ஸ் ஆகிய அணிகள் இவ்வருடமும் போட்டியிடுகின்றன. இது தொடர்பிலான ஊடக சந்திப்பு நேற்றுமுன்தினம் விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர, தொலைத்தொடர்பாடல்துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ மற்றும் இலங்கை றக்பி சம்மேளனத்தின் தலைவரான அசங்க செனவிரத்ன ஆகியோரின் தலைமையில் விளையாட்டுத்துறை அமைச்சில் இடம்பெற்றது.

நிதிப் பற்றாக்குறையின் காரணமாக கண்டியில் இரவு நேர போட்டிகள் இடம்பெற மாட்டாது. இவ்வருடம் பெண்களுக்கான போட்டிகள் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. இதில் ஒரு பிரிவில் நான்கு அணிகள் பங்குபெறவுள்ளன.மகளிர் பிரிவில் இலங்கை இராணுவப்படை, கடற்படை, விமானப்படை மற்றும் CR&FC கழகங்கள் பங்குபற்றவுள்ளன.

இந்நிலையில் , முதலாம் நாள் 8 அணிகளும் முதல் சுற்றில் ஒன்றோடு ஒன்று மோதிக்கொள்ளும். இரண்டாம் நாளில் நொக் அவுட் போட்டிகள் நடைபெறவுள்ளதோடு, கப், பிளேட், போல் மற்றும் ஷீல்ட் ஆகிய கிண்ணங்களுக்காக அணிகள் மோதும்.


மேலும், அணிகள் சென்ற வருடம் விளையாடிய வீரர் ஒருவரை மீண்டும் தன்னிடம் வைத்துக்கொள்ள முடியும். 3 வெளிநாட்டு வீரர்களை அணியில் சேர்த்துக்கொள்ளலாம். ஒவ்வொரு அணியும் ஏ தர வீரர்களில் இருந்து ஒருவரை சேர்த்துக் கொள்ளலாம் மேலும் பி மற்றும் சி பிரிவுகளில் இருந்து தலா 4 வீரர்களை சேர்த்துக்கொள்ள முடியுமாதோடு, டி தர வீரர்களில் இருந்து 2 வீரர்களை இணைத்துக்கொள்ள முடியும். 23 வயதிற்குட்பட்ட வீரர் ஒருவர் கட்டாயம் களத்தில் விளையாட வேண்டும் என்பதோடு, ஒரே நேரத்தில் இரண்டு வெளிநாட்டு வீரர்கள் மட்டுமே களத்தில் விளையாடலாம்.மேலே கூறப்பட்ட 8 அணிகளுக்கு மேலதிகமாக, 16 மற்றும் 18 வயதுக்குட்பட்ட பாடசாலை அணிகளுக்கான போட்டிகளும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தயாசிறிக்கு மெத்யூஸ் பதிலடி

சம்பியன் கிண்ணத் தொடரில் இலங்கை அணியின் தோல்வி குறித்து விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர பகிரங்கமாக ஒரு சில விடயங்களை குற்றச்சாட்டாக முன்வைத்தார்.அதில் இலங்கை அணி வீரர்களின் உடல் பருமன் மற்றும் பயிற்சிகள் குறித்து குறைபாடுகள் பலவற்றை தெரிவித்திருந்தார். குறிப்பாக, இலங்கை அணியை நன்கு அவதானித்தால் எங்களது வீரர்களின் வயிறு ஆடைகளுக்கு மேல் வந்து நன்றாகத் தெரிகிறது. இலங்கை அணியில் மிகச்சிலரே பெரிய வயிறு இல்லாமல் கை, கால்கள் வலுவாக அமைந்து, கட்டுடல் கொண்டவர்களாக இருக்கின்றார்கள் எனவும் தெரிவித்த அமைச்சர், பங்களாதேஷ் வீரர்களை அவர்கள் சிறப்பாக பயிற்சிகளில் ஈடுபட்டு தமது உடலமைப்பை பேணியுள்ளனர். எமது அணி வீரர்கள் குழந்தைகளை போன்று பயிற்றுவிக்கப்படுகின்றார்கள். இதற்கு சிறந்த பதில் நமது வீரர்களை இராணுவ முகாம் ஒன்றிற்கு அனுப்பி 6 மாதங்கள் சிறப்பாக பயிற்சி அளிக்க வேண்டும். இல்லாவிட்டால் இது சரிவராத விடயமாகும் என கூறினார்.

இந்நிலையில், இலங்கை அணியின் தலைவர் அஞ்சலோ மெத்யூஸ் உடற்பயிற்சி செய்யும் காணொளி ஒன்றை நேற்றுமுன்தினம் தனது டுவிட்டரில் வெளியிட்டுள்ளார்.இதில் உலகம் கொடூரமாக இருந்தாலும், நீங்கள் ஒன்றை அடைய நினைத்தால் அதனை யாராலும் தடுக்க முடியாது என அவர் பதிவிட்டு இந்த காணொளியை வெளியிட்டுள்ளார்.

எனினும், இலங்கை அணியின் வீரர்களின் உடற்பயிற்சியை மேம்படுத்த அவர்கள், இராணுவ முகாமில் பயிற்சி பெறவேண்டும் என விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர கருத்துக்கு பதிலளிக்கவே மெத்யூஸ் இவ்வாறு காணொளியொன்றை பதிவேற்றியுள்ளதாக கிரிக்கெட் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



பாகிஸ்தான் வெற்றி எதிரொலி:

## 15 முஸ்லிம்களுக்கு தேசத் துரோக வழக்கு!



ஐ.சி.சி சம்பியன் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டியில் இந்தியாவுக்கு எதிராகவும், பாகிஸ்தானை உற்சாகப்படுத்தியும் கோஷங்களை எழுப்பி, வெற்றியைப் பட்டாசு கொளுத்திக் கொண்டாடிய 15முஸ்லிம்கள் இந்திய மத்தியப் பிரதேச மாநிலத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர்.இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் புர்ஹான்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த 19 முதல் 35 வயதுக்கு உட்பட்டவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. பக்கத்து வீட்டுக்காரர்கள் அளித்த புகாரின் பேரில் கைது செய்யப்பட்ட இந்த 15 பேர் மீதும் தேசத்துரோக வழக்குத் தொடரப்படுமெனத் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை, புர்ஹான்பூர் மாவட்ட பொலிஸ் தலைமை அதிகாரி இதுதொடர்பில் கருத்து தெரிவிக்கையில், குறித்த சம்பவம் தொடர்பில் இந்து மதத்தைச் சேர்ந்த ஒருவரால் எமக்கு முறைப்பாடு செய்யப்பட்டதாகவும், அதனடிப்படையில் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்திய குற்றவியல் சட்டங்களின் கீழ், தேசத் துரோக குற்றச்சாட்டு மிகவும் பாரதூரமானது. தேசத் துரோக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டவர்கள் தங்கள் கடவுச்சீட்டுகளை நீதிமன்றங்களில் ஒப்படைக்கவேண்டும், அவர்கள் அரசாங்க வேலை பெறும் தகுதியை இழப்பார்கள். மேலும், எப்போது அழைப்பு வருகிறதோ அப்போதெல்லாம் அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகவேண்டும் அதுமட்டுமன்றி, வழக்கு சம்பந்தமான எல்லாக் கட்டணங்களையும் அவர்களே செலுத்த வேண்டும்.

கிரிக்கெட் விளையாட்டில் தாம் விரும்பிய அணிக்கு ஆதரவு தெரிவிப்பதற்கு உரிமையுள்ள போதும், இந்த கொண்டாட்டங்களின் போது பாகிஸ்தானுக்கு ஆதரவு தெரிவித்தும் இந்தியாவிற்கு எதிர்ப்பு தெரிவித்தும் கோஷங்கள் எழுப்பப்பட்டதால் தேசத்துரோக குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்படுவர். இந்நிலையில், இறுதிப் போட்டி முடிவடைந்தவுடன் கர்நாடகாவில் ரியாஷ், ஷாஹர், அப்துல் சமான் ஆகிய மூன்று இளைஞர்களும் பாகிஸ்தான் வெற்றியைக் கொண்டாடியதை யடுத்து உள்ளூர் பிஜேபி கட்சி உறுப்பினர்கள் பொலிஸ் நிலையத்தில் அந்த இளைஞர்கள் மீது புகார் அளித்துள்ளனர்.இதையடுத்து மூன்று இளைஞர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு மூவரும் கைது செய்யப்பட்டனர்.

## எசெக்ஸ் அணியுடன் இணைந்தார் ஆமிர்



பாகிஸ்தான் அணியின் நட்சத்திர வேகப்பந்துவீச்சாளரான மொஹமட் ஆமிர் முதற்தடவையாக இங்கிலாந்தின் கவுண்டி கிரிக்கெட் தொடரில் பங்கேற்கவுள்ளார். இதற்கான அனுமதியை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை வழங்கியுள்ளது.

2010ஆம் ஆண்டு நடைபெற்ற சூதாட்டத்தில் சிக்கி போட்டி தடைக்குள்ளாகி கடந்த வருடம் முதல் பாகிஸ்தான் அணிக்காக விளையாடி வருகின்ற ஆமிர், அண்மையில் நிறைவுக்கு வந்த சம்பியன் கிண்ணப் போட்டிகளின் இறுதிப் போட்டியில் சிறப்பாக பந்துவீசி பாகிஸ்தான் அணியின் வெற்றிக்கு முக்கிய காரணமாகவும் இருந்தார்.

இந்நிலையில், அடுத்த மாதம் முதல் ஆரம்பமாகவுள்ள இங்கிலாந்தின் நெட்வெஸ்ட் டி20 போட்டித் தொடரில் ஆமிர், எசெக்ஸ் அணிக்காக விளையாடவுள்ளதுடன், அவ்வணியின் ஜேர்சியும் ஆமிரிடம் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டது. இந்நிலையில், பாகிஸ்தான் அணியின் மற்றுமொரு வேகப்பந்துவீச்சாளரான ஜுனைத் கான், லெஸ்டெஷெயார் அணிக்காக விளையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பரிசு மழையில் நனையும் பாகிஸ்தான் அணி: அரசு 10 மில்: ஐ.சி.சி 14 கோடி: பிசிபி ஒரு மில்.

சர்வதேச கிரிக்கெட் சம்பியன் கிண்ண தொடரின் இறுதிப் போட்டியில் இந்திய அணியை வீழ்த்தி முதற்தடவையாக சம்பியன் பட்டத்தை வென்றுள்ள பாகிஸ்தான் அணிக்கு சர்வதேச கிரிக்கெட் பேரவையினால் பரிசுத் தொகையாக ரூ.14 கோடி வழங்கப்பட்டுள்ளது. இறுதிச் சுற்றில் தோல்வியடைந்த இந்தியாவுக்கு ரூ.7 கோடி பரிசாக வழங்கப்பட்டுள்ளது.இதேவேளை, சம்பியன் கிண்ணத்தை வென்ற பாகிஸ்தான் வீரர்களுக்கு தலா 10 மில்லியன் ரூபா பணத்தை பரிசாக வழங்குவதற்கு பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷரீப் தீர்மானித்துள்ளதாக அந்நாட்டு தகவல் துறை அமைச்சர் மரியம் அவுரங்சிப் தெரிவித்தார். இந்நிலையில் நேற்று முன்தினம் அதிகாலை பாகிஸ்தான் அணி தாயகம் திரும்பியது. லாகூர் விமான நிலையத்தில் அவர்களுக்கு ஆயிரக்கணக்கான ரசிகர்களால் உற்சாக வரவேற்பளிக்கப்பட்டதுடன், கோலாகலமாக அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

இந்நிலையில், நோன்புப் பெருநாள் முடிந்த பிறகு சம்பியன் கிண்ணத்தை வென்ற பாகிஸ்தான் அணியை கௌரவிக்கு முகமாக அந்நாட்டு பிரதமரின் இல்லத்திலும், பாகிஸ்தான் பாராளுமன்றத்திலும் சிறப்பு வரவேற்பு நிகழ்ச்சியொன்றை ஏற்பாடு செய்யவும் அந்நாட்டு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதேவேளை, பாகிஸ்தான் அணியின் இடம்பெற்ற ஒவ்வொரு வீரருக்கும் தலா ஒரு ரூ.மில்லியனை மேலதிக கொடுப்பனவாக வழங்குவதற்கும், தேசிய அணியில் ஒப்பந்தம் செய்யப்பட்ட அனைத்து வீரர்களுக்கும் 29 மில்லியன் ரூபா பணத்தை சம்பளத் தொகையில் இணைத்துக்கொள்வதற்கும் தீர்மானித்துள்ளதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் ஷஹாரியர் கான் தெரிவித்தார்.

## றொனால்டோவிற்கு நீதிமன்றம் அழைப்பாணை

வரி ஏய்ப்பு தொடர்பாக விளக்கம் அளிப்பதற்காக கிறிஸ்டியானோ றொனால்டோ ஜுலை 31ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராக உத்தரவிடப்பட்டுள்ளது.

கிறிஸ்டியானோ றொனால்டோ. இவர் கடந்த 2009ஆம் ஆண்டில் இருந்து ஸ்பெயின் நாட்டின் முன்னணி கால்பந்து கழக அணியான ரியல் மெட்ரிட் அணிக்காக விளையாடி வருகிறார்.இந்நிலையில், றொனால்டோ கடந்த 2011ஆம் ஆண்டில் இருந்து 2014 வரை அவரது படத்தின் உரிமம் சம்பாதித்த வருமானத்தின் வரிஏய்ப்பு நடத்தியதாக ஸ்பெயின் நாட்டின் வருமான வரித்துறை கடந்த 17ஆம் திகதி வழக்குப்பதிவு செய்தது. அதில் சுமார் 14.7 மில்லியன் யூரோக்கள் வரை வரிஏய்ப்பு நடந்ததாக கூறப்பட்டுள்ளது.



Printed and Published by Freelanka Media Ltd. #156, Hospital Road, Kalubowila, Dehiwala. on 22ND JUNE 2017